بسم الله الرحمن الرحيم

"

இறை நம்பிக்கை கொண்டோரே!

மது பானமும், சூதாட்டமும், கற்சிலைகளை வழிபடுதலும், அம்புகள் எறிந்து குறி கேட்பதும், ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களில் உள்ளவையாகும். ஆகவே இவற்றை நீங்கள் தவிர்த்துக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள்!

(அல்குர்ஆன் 5 : 90)

"


பொது சிவில் சட்டம் – முழு வரலாற்றுப் பின்னணி? - 6

பலதார மணம் - 15

அடிப்படை உரிமைகளும் வழிகாட்டும் கொள்கையும் - 18

உலக நாடுகளில் தனியார் சட்டம் - 20

முஸ்லிம் நாடுகளில் தனியார் சட்டங்களில் கொண்டுவந்த திருத்தங்கள் - 21

அரசியல் சாசன சபை பிரிவு - 23

எதிலும் அழகிய இஸ்லாம் - 25

பொது சிவில் சட்டம் கருத்துப் பரிமாற்றம் - 29

ஐ.எஸ். ஐ.எஸ். என்ற பெயரால் முஸ்லிம் இளைஞர்கள் கைது! - 35

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? - 37

கண்டதும், கேட்டதும் - 40

அனைவரையும் கொல்லுங்கள்! - 42

எது முதலில் தடுக்கப்பட்ட சிறு பாவங்கள் - 48

சித்தாமூர் சமணர்கள் கொல்லப்பட்ட வரலாறு - 51

பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி - 53

கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய் - 57

நூல் விமர்சனம் - 60

காந்தியை விடு.. கோட்சேயை வழிபடு - 64

நாகூர் காவல்துறையின் கட்டப்பஞ்சாயத்து - 65



நவம்பர் - 2016

# வைகறை வெளிச்சம்

ஸபர்-1438

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalist & Mass Communication

துணை ஆசிரியர்

கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 1500 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Privet circulation to promote the original issue



http:/www.facebook.com/vaigarivelicham

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

# வறுமையை ஒழித்திட ஒரே வழி..?

இந்தியாவில் ஏழ்மையானவர்கள் எத்துனை பேர்? என்பது விடையில்லா வினாவாகவே இதுவரை இருந்து வருகிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வறுமையை ஒழிப்போம், விவசாயிகளுக்காக உழைப்போம், 15 நாட்களில் வெளிநாட்டு வங்கிகளில் இருக்கும் கருப்பு பணத்தை மீட்டு ஒவ்வொரு குடிமக்களின் வங்கிகணக்கிலும் ரூ.15 லட்சம் வைப்பீடு செய்வோம் என்று வாய் சவடால் விட்ட மோடி கும்பல் இன்று வறுமை கோட்டை வரையறுக்க கூட வகையற்று நிற்கின்றது.

சென்ற வருடம் 16 பேர் கொண்ட குழுவை அரவிந்த பணகரியாவின் தலைமையில் வறுமை சோறு பற்றியான ஆய்வறிக்கையை சமர்பித்திட அன அமைத்தது மோடி அரசு. அந்த குழுவால் ஆய்வறிக்கைகை தந்திட முடியவில்லை என்பது மட்டுமன்றி இந்த ஆய்வை வேறு வல்லுநர்களைக் கொண்டு மேற்கொள்ளுமாறு அரசிடம் கேட்டுக் கொண்டது. (Source: Hindustan times Sep 12 2016)

ஆக ஆட்சிக்கு வந்து இரண்டரை ஆண்டுகளாகியும் தன்னிடம் எந்த திட்ட குழுவும் இல்லாமல் வறுமை ஒழிப்பு என ஓலமிடுகிறார்கள்.

தி இந்து நாளிதழ் (ஆங்கிலம்) 24.07.2016ல் வெளியிட்ட கட்டுரையில் கடந்த 25 வருடங்களில் வறுமை பாதி சதவீதம் ஒழிந்துவிட்டதாக கூறியது. கடந்த 8 வருடங்களில் 9 ஆய்வறிக்கைகள் வறுமை கோடு சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ளது. அதில் 2 அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கைகள்.

டெண்டுல்கர் கமிட்டியின் ஆய்வு முறையானதாக இல்லை என்பதால் காங்கிரஸ் அரசு ரங்கராஜன் தலைமையில் கமிட்டியை நியமித்தது.

இதில் தி இந்து ஆங்கில நாளிதழ் டெண்டுல்கர் கமிட்டியின் ஆய்வை மட்டுமே வைத்து 1993ல் 45.3% இருந்த வறுமை கோடு சதவீதம் 2012ல் 21.90% ஆக குறைந்திருக்கிறது என்று கூறுவது ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்.

இந்தியாவில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் சதவீதம் 78% 55% 30% 15% என்று பல ஆய்வு முடிவுகள் கூறுகிறன. இதில் எதை எடுத்துக்கொள்வது பி.பி.சி செய்தி நிறுவனம் 2011ல் அருந்ததிராயிடம் இந்தியாவில் வறுமை பாதி ஒழிந்து விட்டதாக கூறப்படுகிறதே என்ற இதே கேள்வியை கேட்டபோது அது உண்மை இல்லை. இந்த நாடடிலே 83 கோடி மக்கள் நாளைக்கு 20 ரூபாய் கூட இல்லாதவர்கள் என்ற புள்ளி விவரத்தை தந்தார் அருந்ததிராய்.

ஆக இந்த நாடு சுதந்திரமடைந்து 69 ஆண்டுகளாகியும் எல்லா குடிமக்களுக்கும் வாழ்வாதாரம் / கிடைத்திடவில்லை. நாட்டு குடிமக்களில் அரைவாசிக்கும் அதிக மானோர் வறுமையில் வாடுகின்றனர்.

140 மாவட்டங்களில் பட்டினிச்சாவு இன்றும் அந்த மக்களுக்கு உணவு சென்று சேர்ந்துவிடவில்லை. லட்சக்கணக்கான விவசாயிகள் வாங்கிய வட்டிக் கடனை திருப்பித் தந்திட இயலாமல் மரணத்தை சந்தித்துக்கொண்டிக்கின்றார்கள். கடந்த 20 வருடங்களில் மட்டும் 2,96, 428 பேர் தற்கொலை செய்திருக்கின்றார்கள் ( NCRB ADSI Reports 1995-2013) என்று அரசே ஒத்துக் கொள்கின்றது.

இதில் பாகுபாடின்றி எல்லா அரசுகளும் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த பின் நயவஞ்சகத்தையே வெளிகாட்டியிருக்கின்றது. ஆக வளர்ச்சி, வறுமை ஒழிப்பு என்பதெல்லாம் ஆட்சிகது வருகின்ற அரசுகளின் வெற்று வார்த்தைதானே தவிர அவர்கள் வறுமையில் வாடுகின்றவர்களை, பட்டினியால் மடிகின்றவர்களை பற்றி கவலைக் கொண்டு அதற்கான நடவடிக்கைகளை இதுவரை எடுத்திட முனைந்ததில்லை.

சீரிய பொருளாதார கொள்கையாலும் அதன் யதார்த்தமான செயல்பாட்டினாலும் தான் மக்களை வதைக்கும் விலைவாசி, வறுமை, பட்டணிண்சாவு, விவசாயி தற்கொலை இவற்றை வெல்ல முடியும். பாசிசமோ மதச்சார்பின்மையோ மக்களை காப்பாற்றிடாது.

இறைவன் வகுத்து தந்த சட்ட திட்டங்களால் மட்டுமே மக்களை அழிவிலிருந்து காப்பாற்றிட இயலும்.

ஆம் “ஓர் ஆட்டுக்குட்டி எனது ஆட்சிக் குட்பட் பகுதியில் இறந்து கிடந்தாலும் அதற்கும் நான் இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும்” என்று பிரகடணப்படுத்திய ஆட்சியாளரை இஸ்லாத்தின் வரலாற்றில்தான் மனித இனம் சந்தித்திருக்கின்றது.

இந்த ஆட்சி முறையை தான் இந்த தேசத்திற்கு விரும்பினார் தேசத்தந்தை காந்தியடிகள். குடிமக்கள் அனைவருக்கும் நிலம், நிறம், மதம் அனைத்தையும் கடந்து உணவு, உடை, உறையுள் மூன்றையும் அமைத்து தருவது தான் இஸ்லாமிய ஆட்சியின் சாதாரண அடிப்படை. இஸ்லாம் இந்தியாவை ஆட்சி செய்தாலொழிய இந்த தேசத்தையும் தேச மக்களையும் காப்பாற்றிட இயலாது. நம்மை படைத்த இறைவன் இப்படி கூறுகின்றான்,

“வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. (அவனே) உயிர் கொடுக்கிறான், மரிக்கும்படியும் செய்கிறான்-அல்லாஹ்வை தவிர உங்களுக்கு வேறு பாதுகாவலும் இல்லை, உதவியாளரும் இல்லை” *(அல் குர்ஆன் - 9:116)*



# பொதுசிவில் சட்டம் முழு வரலாற்றுப் பின்னணி..?



மு. குலாம் முஹம்மத்

முஸ்லிம்களின் தனித்தன்மைகளை அழித்து முஸ்லிம்கள் இல்லாத இந்தியாவை உருவாக்கிட விழைவோர், அடிக்கடி கையில் எடுத்துக் கொள்ளும் ஓர் ஆயுதம்! பொது சிவில் சட்டம்.

முஸ்லிம்களை இந்துக்களாக ஆக்கிட வேண்டும் அல்லது அவர்களை அழித்திட வேண்டும். Assimilate or Anihilate என்பதாக இலட்சியம் அமைத்துக் கொண்டு கடந்த 150 ஆண்டுகளாக நாட்டில் இரத்த ஆறுகளை ஓட்டியவர்கள், இன்றும் ஓட்டிக் கொண்டிருப்பவர்கள் நாட்டின் ஆட்சியைப் பிடித்துக் கொண்டார்கள் வளர்ச்சி என்ற சூழ்ச்சியைச் சொல்லி! அண்மையில் இவர்கள் தலித்களைத் தங்கள் பக்கம் கொண்டு வந்திட முயற்சிகளை மேற் கொண்டார்கள். 25 கோடி தலித் மக்களில் எவரும் சிக்கிடவில்லை. மாறாக இவர்களின் கைகளால் தலித்கள் கொலை செய்யப்படும் நிகழ்ச்சிகளே அதிகமாயின.

வரலாறு காணாத அளவுக்குத் தலித் மக்கள் வெகுண்டெழுந்தார்கள். தலித்கள் இவர்கள் பக்கம் வந்திடவில்லை. மாறாக நேர் எதிராகத் திரும்பினார்கள்.

சிக்கிக் கொண்டார்கள். பிரச்சனையை திசை திருப்பிட வழக்கம் போல். பொது சிவில் சட்டம், முத்தலாக், பலதார மணம் இவற்றைக் கையிலெடுத்தார்கள்.

கட்டிய மனைவியை கானகத்தில் கைவிட்ட மோடி முஸ்லிம் சகோதரிகளிடம் அதிகமாக அன்பு காட்டுவதைப் போல் பாசிசப் பாசாங்கு, அதன் பவனி!

'பொது சிவில் சட்டம்' என்ற கொடுவாள் முஸ்லிம்களின் தலைக்கு மேல் தொங்குகின்றது.

விடுதலை அடைந்த நாள் முதலே ஆட்சியாளர்கள் அடிக்கடி கையிலெடுக்கும் வாள். அதனை எதிர்போர் அதன் முழு வரலாற்றையும் அறிந்திட வேண்டும் என்பதனால் அதனை மக்கள் மன்றத்தில் வைக்கின்றோம்.

"நாங்கள் விவாகரத்தை நீதிமன்றங் களிலே தான் வாங்கிட வேண்டும் என்றால், நாங்கள் இந்துக்கள் அல்ல என்று எங்களைப் பிரகடனப்படுத்துவோம். எங்களை இனி இந்துச் சட்டங்கள் வழி நடத்திட இயலாது."

"லெஷ்சுமிமேனன்" முதல் அகில இந்திய பெண்கள் மாநாட்டில் (1933) இல் ஓங்கி முழங்கிய வரிகள் இவை-

## பொதுசிவில் சட்டம் வரலாறு! (1757-1858)

சதா சர்வ காலமும், முஸ்லிம்களைக் கலவரப்படுத்திடும் பொது சிவில் சட்டத்தின் முதல்படி கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியில் தான் வந்தது.

அப்போது கிழக்கிந்திய கம்பெனியின் பெயரால் ஆட்சிச் செய்து கொண்டிருந்த கம்பெனியின் ஆட்சியாளர் வில்லியம் பெண்டிக் - Lord William Bentwick இந்து சமுதாயத்தைச் சார்ந்த பெண்கள் உடன் கட்டை ஏறி இறப்பதைக் கண்டு மிகவும் மனம் நொந்தார்.

இதன்பின் இந்து பெண்களின் இதர உரிமைகள் பற்றிய ஆய்வு ஒன்றை நடத்தினார் அதில் ‹

கணவனை விவாகரத்துச் செய்திடும்,

உரிமை, மறுமணம் செய்திடும் உரிமை, பெற்றோர்களின் சொத்துக்களில் பங்கு பெற்றிடும் உரிமை இப்படி பல உரிமைகள் காலமெல்லாம் மறுக்கப்பட்டே வந்தது என்ற உண்மை தெரியவந்தது. (இந்த உரிமைகளையெல்லாம் இஸ்லாம் 1400 ஆண்டுகளுக்கு முன்னரே கொடுத்திருந்தது என்பது வரலாறு)

இந்த உடன்கட்டை ஏறிடும் பழக்கத்தை உண்மையைச் சொன்னால் உடன்கட்டை ஏற்றிடும் பழக்கத்தை நிறுத்திட வேண்டும் என முடிவு செய்தார்.

ஆனால் இந்துக்கள் இதனை கடுமையாக எதிர்த்தார்கள். ஆனாலும் அவர் இந்த பழக்கத்தை அனுமதிக்க வியலாது என்பதில் உறுதியாக இருந்தார். வந்த எதிர்ப்புகளைப் பற்றிக் கவலைப்படாமல், சதியை உடன் கட்டை ஏறுதலை தடை செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்தார். தடுத்தார்.

அந்தச் சட்டம் தான். Bengal sati Regulation Act 1829 வங்காள சதி கட்டுப்பாட்டு சட்டம் 1829 வங்காளத்தில் முதலில் கொண்டு வந்தார். காரணம் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி எல்லா வல்லமையோடும் வங்காளத்தில் இருந்தது. இந்தியாவின் இதர பகுதிகளில் இந்தச் சட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பு இருந்தது. இந்நிலையும் 27 ஜுன் 1839 இல் இராஜ ரஞ்ஜித் சிங் இறந்தார்.

இவருக்கு 4 மனைவிமார்களும் 8 வைப்பாட்டிகளும் இருந்தார்கள். இவர்களும் உடன்கட்டை ஏறினார்கள் பிரபல்யமான எழுத்தாளர் குஷ்வந்த் சிங் அவர்கள் இராஜ ரஞ்ஜித் சிங் அவர்களைப் பற்றி எழுதிய நூலில், ஒரு குறிப்பு அவருக்கு 46 மனைவிகள் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது. ராஜா ரஞ்ஜித் சிங் அவர்களின் மகன் துலீப் சிங் 1889 இல் பிரஞ்சு பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில், அவர் ராஜ ரஞ்ஜித் சிங் இன் 46 ஆவது மனைவியின் மகன் எனக் குறிப்பிட்டுள்ளார். (Raja Ranjith Sing by Kushwomth sing) இராஜா ரஞ்ஜித்தின் நினைவிடத்தில், அவருடைய சாம்பல் கலசத்துடன், இந்தப் பெண்களின் சாம்பல் கலசமும் இருக்கின்றது.

மொத்தத்தில் ஏராளமான பெண்கள், உடன்கட்டை ஏறினார்கள். அதாவது ஒரு ஆண் இறந்தால் பல பெண்கள் அவரோடு எரிந்து கருகும் நிலை. இந்த நிலையைப் போக்கிட பிரிட்டீஷ் அரசாங்கம் உடன்கட்டை ஏறுதலை தடுக்கும் சட்டத்தை இந்தியா முழுவதும் செயல்படுத்தியது.

காலமெல்லாம் பயன் மறுக்கப்பட்டு வரும் இந்த உரிமைகளை வழங்கிடும். நிலையில் நாடெங்கும் சிதறுண்டு கிடக்கும் இந்துக்களின் அதாவது மக்களின் பழக்க வழக்களை ஒருங்கிணைத்து ஒரே சட்டமாக (Codity) ஆக்கிட வேண்டும் என முயற்சி



களை மேற்கொண்டார்கள் ஆங்கிலேயர்கள்.

இதற்காக ஒரு பெரும் ஆய்வை மேற்கொள்ள வேண்டும், அறிக்கை சமர்பிக்க வேண்டும், என Lex Loci லெக்ஸ் லோசி என்பவரைப் பணித்தார்கள். இவர் தன் அறிக்கையை 1840 அக்டோபர் மாதம் சமர்ப்பித்தார்.

இந்த லெக்ஸ் லோசி அறிக்கை, இப்படி கூறிற்று. இந்திய சட்டங்களை அவசியம் ஒருங்கிணைத்து முறைப்படுத்தியாக வேண்டும், அதில் குற்றங்கள் அவற்றிற்கு வழங்கப்படும் தண்டனைகள், சாட்சியங்கள் குற்றங்களை விசாரிக்கும் நெறிமுறைகள், மக்களிடையே நடக்கும் ஒப்பந்தங்கள் ஆகியன வேண்டும். ஆனால், இந்துக்கள், முஸ்லிம்கள் இவர்கள் பின்பற்றி வரும் தனியார் சட்டங்களை அப்படியே விட்டுவிட வேண்டும். அவற்றை மத வழி காட்டல்களும், நடைமுறை பழக்கங்களும், (Customary Law.....) வழி நடத்தும், அரசு அவற்றில் எந்த நிலையிலும் தலையிடக் கூடாது. அப்படித் தலையிட வேண்டியது வந்தால் அந்தந்த சமுதாயத்தின் சட்டப் படியே தீர்ப்பு வழங்க வேண்டும்.

ஆங்கிலேயர்களின் இந்த முடிவை, அதாவது, லெக்ஸ், லோசியின் அறிக்கையை அன்றைய சட்ட வல்லுநர்கள். இப்படி அழைத்தார்கள்.... Thus the British let the Indian Public have the benefit of self government in their domestic matters அதாவது, இவ்வாறாக ஆங்கிலேயர்கள், இந்தியர்களை அவர்களுடைய சமுதாய வாழ்க்கையில் சுய ஆட்சியை அனுமதித் தார்கள்.

### மத சட்டங்களும் மகாராணியும்

இதன் பின்னர் கிழக்கிந்திய கம்பெனி யின் பிடியிலிருந்த ஆட்சி, ஆங்கிலேய மகாராணியிடம் சென்றது. 1859 இல் ஆங் கிலேய மகாராணி, மத சட்டங்களில் அரசு தலையிடாது எனப் பிரகடனப்படுத்தினார்.

1859 என்கின்ற போது நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அது 1857 இல் தான் சிப்பாய் கலகம் என்றும் முதல் சுதந்திரப் போர் என்றும் அழைக்கப்படும் போர் நடைபெற்றது. இதற்கு மிக முக்கியமான காரணமாக, இன்று முஸ்லிம் சிப்பாய் களிடம் பன்னிக் கொழுப்பு தடவப் பெற்ற குண்டுகளைப் பயன்படுத்திட சொன்னார்கள் இன்று சிப்பாய்களிடம் மாட்டுக் கொழுப்பு தடவிய குண்டுகளைப் பயன்படுத்திட கட்டாயப்படுத்தியது தான். அதுவும் ஆங்கிலேய மகாராணி இந்த பிரகடனத்தை Procloamation ஐ செய்திட முக்கியக் காரணமாக அமைந்தது.

அதே போல் வாசகர்கள் இன்னொன் றையும் இங்கே கவனிக்க வேண்டும். அது முஸ்லிம்களுக்கு வாழ்க்கையில் எழும் பிரச்சனைகள் எல்லாவற்றிற்கும் சட்டங்கள் இருந்தன. இந்துக்கள் என வருகின்ற போது அவர்கள் நான்கு வருணங்களாகப் பிரிக் கப்பட்டு பல ஜாதிகளாகவும், குலங்களா கவும், கோத்திரங்களாகவும் வாழ்ந்து வந்தார்கள். ஒவ்வொரு ஜாதிக்குள்ளும், பல உட்பிரிவு ஜாதிகள் இருந்தன. இன்றும் இருந்து வருகின்றன.

அதே போல் ஒவ்வொரு கோத்திரங் களுக்குள்ளும் பல உள்பிரிவுகள் இருந்தன இன்றும் இருந்து வருகின்றன. ஒவ்வொரு உட்பிரிவும் திருமண முறையில் தொடங்கி தங்கள் விவகாரங்கள் எல்லாவற்றிலும், தனித் தனியான மாறுபட்ட, வேறுபட்ட பழக்க வழக்கங்களை உடையனவாக இருக்கின்றன. ஆகவே இந்தக் கட்டுரையில் இடம் பெறும் அறிக்கைகளில் (Customary laws) பழக்க வழக்கங்கள் என்பது இந்தியா முழுவதும் பரவி வாழும் முஸ்லிம் அல்லாத வர்களின் பழக்க வழக்கங்களையே குறிக்கும்.

ஆக! ஆங்கிலேயர்கள், சமுதாயங்கள், பின்பற்றி வரும் தனியார் சட்டங்களில் தலை விடுவதில்லை என்பதில் உறுதியாக இருந்தார்கள். ஆங்கிலேயர்கள் அன்றும், நமது சட்ட வல்லுநர்கள் இன்றும் தனியார் சட்டம் என்பது, திருமணம், வாரிசுரிமை சொத்துக்களில் பங்கு, மத சடங்குகள் ஆகியவை குறித்தவை என்றே எடுத்துக் கொண்டார்கள்.

குடும்ப வாழ்வு அல்லாத பொது வாழ்க் கையில் ஆங்கிலேயர்களின் சட்டங்களே செயலில் நின்றன. அவை குற்றங்கள் அவற்றிற்கான தண்டனைகள் ஒப்பந்தங்கள் சட்டங்கள், சாட்சி என்பனவாகும்.

1860 இல் ஆங்கிலேயர்கள் Indian Penal Code (எ) இந்திய தண்டனை சட்டங்களைக் கொண்டு வந்தார்கள்.

அதன்பின் இந்திய தண்டனைச் சட்டங் களைத் தான் எல்லோரும் - முஸ்லிம்கள் - உள்பட பின்பற்றிட வேண்டும் என அறிவித் தார்கள். இந்திய தண்டனைச் சட்டம் ஜனவரி 1, 1862 இல் செயலில் வந்தது. அன்று இஸ்லாமிய தண்டனை சட்டங்கள் செயல் படவில்லை. முஸ்லிம்கள் தொடர்ந்து ஷரீஅத் சட்டங்கள் தங்களுக்கு வேண்டும் என ஆங்கிலேயர்களுக்கு அழுத்தங்களைத் தந்து வந்தனர். அதனடிப்படையில் சிவில் விவகாரங்களில் ஷரீய சட்டம் 1937 என்பது இயற்றப்பட்டது.

ஆனால் இந்துக்கள் பின்பற்றி வந்த சட்டங்கள், பழக்கங்கள் இவை பெண் களுக்கு பெரும் அநீதியை இழைத்து வந்தன. இதனால் இந்துச் சட்டங்களை சீரமைக்கும் பணியும் பெண்களுக்கு மணவிலக்கு, மறுமணம், வாரிசுரிமை, தத்தெடுக்கும் உரிமை என்பவை மறுக்கப்பட்டு வருவதும், நாடெங்கிலும் பெரும் விவாதமாக அமைந்தது. இதில் இந்து மதத்தில் சீர்திருத் தங்களை விரும்பியவர்களும் ஆங்கிலேயர் களும், ஜவஹர்லால் நேரு போன்றவர்களும் மிகவும் உறுதியாக நின்றார்கள். பெண்கள், பெண்கள் அமைப்புகளை அமைத்துப் போராடி வந்தார்கள். இதில் 1926 - 1930 இல் அகில இந்த மகளிர் பேரவை என்ற All India Womens Conference என்ற அமைப்பு தலையெடுத்துத் தழைத்து வந்தது.

## அகில இந்திய மகளிர் பேரவை

இந்த அமைப்பை திருமதி ஏ.எல். ஹிடிகோப்பர் என்ற பெண்மணியும், மார்க் கரட் கபின் என்ற பெண்மணியும் இணைந்தே தொடங்கினார்கள். இந்த இரண்டு பெண் களும் அயர்லாந்து என்ற நாட்டை சார்ந்த வர்கள். இந்தியாவில் வாழ்ந்து கொண்டி ருந்தார்கள். இவர்களின் பெரும் முயற்சியால் இந்த அமைப்பு நம் நாட்டு பெண்களால் நிரப்பப்பட்டு வேகமாக வளர்ந்தது. பின்னா ளில், பல முஸ்லிம் பெண்களும் இதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார்கள்.

"பெண்களுக்குக் கல்வி" எனத் தொடங் கப் பெற்ற இந்த அமைப்பு பெண்களுக்கு சம உரிமை, மணவிலக்கு, மறுமணம், வாரி சுரிமை என்பனவற்றையும் கையில் எடுத்துக் கொண்டது. அகில இந்திய அளவில் இதன் ஆதிக்கம், பரவல் இவை அதிகமாக இருந்தது. அதனால் இந்த அமைப்பு வைத்திடும் கோரிக்கைகளை ஆட்சியிலிருப்பவர்களும் அல்லாதவர்களும், கவனிக்கத் தலைப் பட்டார்கள்.

மட்டுல்ல. இந்த அமைப்பு உலக அளவி லுள்ள இதர பெண்கள் அமைப்புகளால் கவனிக்கப்பட்டு, சர்வதேச பெண்கள் அமைப்பில் அங்கம் வகித்தது. அந்த அளவுக்கு இது ஆதிக்கம் பெற்றது.

இந்த அமைப்பின் மாநாடு ஒன்றில் தான் லெக்ஷமி மேனன் என்ற பெண்மணி, நாம் கட்டுரையில் முகப்பில் எடுத்துகாட்டியதை இந்துப் பெண்கள் மண விலக்குப் பெறும் வழிகள் எளிதாக வேண்டும் என்பதை கூறினார்கள். "அது, நாங்கள் விவாகரத்தை நீதிமன்றங்களில்தான் வாங்கிட வேண்டும் என்றால் நாங்கள் இந்துக்கள் அல்ல என்பதைப் பிரகடனப்படுத்தி விடுவோம். எங்களை இனி இந்துச் சட்டங்கள் வழி நடத்திட இயலாது" இதன் பொருள்.

ஆக இந்த அமைப்பு இந்தச் சட்டங்களை சீரமைக்க வேண்டும் என்ற நிலைபாட்டில் உறுதியாக இருந்தது. இந்த அமைப்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது.

இந்த அழுத்தங்களுக்கு உட்பட்டுத்தான், பண்டித நேரு அவர்கள். அரசியல் சாசன சட்ட மேதை பாபா சாஹிப், அம்பேத்கர் அவர்களிடம், இந்து மக்களிடையே இருக்கும் பழக்க வழக்கங்கள், சட்டங்கள் இவற்றை ஒரு முகப்படுத்தி “Hindu Code Bill" "இந்து நெறிமுறை சட்டம்" என்பதை எழுதச் சொன்னார்கள்.

## HINDU CODE BILL

இந்த அடிப்படையில் தான், டாக்டர் அம்பேத்கர் அவர்கள், இந்து Code Bill என்பதை எழுதினார். அன்று இதனை பொது சிவில் சட்டம் என்றும் அழைக்கத் தலைப்பட்டார்கள். அன்று விவாகரத்தில் இருந்து எல்லாம் இந்துக்களின் சட்டங்களை நெறிமுறைப்படுத்துவதே அல்லாமல் முஸ்லிம்களின் சட்டங்கள் அல்ல.

## எதிர்ப்பு

இதனை டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் அவர்களும், வல்லபாய் பட்டேல் அவர் களும் குரூரமாக எதிர்த்தார்கள். எனினும்

பண்டித ஜவஹர்லால் நேரு டாக்டர் அம்பேத்கர் அவர்களை இந்து சட்டங்களை நெறிபடுத்துவதில் மேற்கொண்டு செல்லு மாறு வேண்டினார்கள்.

இறுதியாக 1950 ஆம் ஆண்டில் இந்து சட்டங்கள் நெறிப்படுத்தி அம்பேத்கர் அவர்கள் அதனை ஜவஹர்லால் நேரு அவர்களின் தலைமையிலான அமைச்சரவை யிடம் ஒப்படைத்தார்.

அன்றைய நாட்களில் இந்து மகா சபையைச் சார்ந்தவர்கள் காங்கிரஸ் கட்சியை அதிகமாக ஆக்கிரமித்திருந் தார்கள். இவர்கள் இந்துக்களுக்கு ஒரு பொது சிவில் சட்டம் என்பதை வன்மையாக எதிர்த்தார்கள். தங்கள் எதிர்ப்பை பலப்படுத்திக் கொண்டே வந்தார்கள்.

அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்து HINDU CODE BILL சட்டம், ஒரு மனதாக நிறைவேறியது.

அமைச்சரவையில் சட்டம் நிறைவேற்றப் பட்டு விட்டதால், நாடாளும் மன்றத்தில் மிகவும் எளிதாக அது நிறைவேறும் என்ற



நினைப்பில் 1951 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் நாள் நாடாளு மன்றத்தில் மிகவும் உற்சாகத்தோடு அறிமுகப்படுத்தினார்கள். டாக்டர் அம்பேத்கர் அவர்கள். இது இனி பொது சிவில் சட்டமாக மாறும் என்றார்கள். ஆக அன்றைய நாட் களில் பொது சிவில் சட்டம் என அறியப் பட்டதும், விவாதிக்கப்பட்டதும், இந்த இந்து நெறிமுறைச் சட்டத்தைத் தான்.

## காலை வாரினார் நேரு

அமைச்சரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை நாடாளும் மன்றத்தில் நிறை வேற்றிட இயலவில்லை. ஏனெனில் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் சற்றும் எதிர் பாராத அளவில், சர்தர் வல்லபாய் பட்டேல் தன் எதிர்ப்பை மிகவும் ஆக்ரோஷமாகக் காட்டினார். அவர் அப்போது துணை பிரதமர் மிகவும் உறுதியாகச் செயல்பட்டு, டாக்டர் அம்பேத்கரை ஆதரித்திருக்க வேண்டிய பிரதமர் பண்டித நேரு அவர்கள் அமைதி காத்தார். காங்கிரஸ் அமைச்சரவை யில் அங்கம் வகித்த தொழில் துறை அமைச்சர் ஷியாம் பிரசாத் முகர்ஜி, அதே போல் இந்து மகாசபையிலும், காங்கிரஸ் இன் அமைச்சர் அவையிலும் அங்கம் வகித்த மதன் மோகன் மாளவியா ஆகியோர் கடுமையா எதிர்த்தார்கள். அன்றைய நாள்களில் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பட்டாபி சீத்தா ராமைய்யாவும் இதனை எதிர்த்தார். "இந்துக்களுக்கும் இந்து மதத்திற்கும், ஆபத்து" என்பதே அவர்களின் கூப்பாடு!

## பாசிச பெண்கள் அமைப்பு

அகில இந்திய மகளிர் பேரவை இதனை ஆதரித்தது. ஆனால் இந்து மகாசபை உருவாக்கி வைத்திருந்த அகில இந்திய இந்து பெண்களின் அமைப்பும் ALL INDIA HINDU WOMEN'S ORGANISATION இதை எதிர்த்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக, அன்றைய குடியரசு தலைவராக இருந்த, இராஜேந்திர பிரசாத் இதனை எதிர்த்தார். அவர் தொடக்க நாள்களிலேயே, தன்னுடைய எதிர்ப்பைப் பகிரங்கமாக தெரிந்து வந்தார்.

ஆனால் ஹிந்து நெறிமுறை சட்டம் 'HINDU CODE BILL' நாடாளும் மன்றத்தில் தாக்கல் செய்யப்படுகின்றது என்பதை அறிந்தவுடன், அவர் அதாவது குடியரசு

தலைவர் தன்னுடைய எதிர்ப்பை, ஒரு கடிதத்தின் வழி அவரைப் போல் அடிப்படை வாத சிந்தனை உடைய சர்தார் பட்டேல் அவர்களிடம் தெரிவித்தார். அந்தக் கடிதத்தில்,

"புதிய கொள்கைகளும், புதிய சிந்தனை களும் இந்து சட்டங்களுக்கு அந்நியமானவை என்பது மட்டுமல்ல, அவை ஒவ்வொரு குடும்பத்தையும் பிளந்து போட்டு விடும் என்றார்.

New concepts and new ideas are not only foreign to hindu law but are susceptible of dividing every family என எழுதினார்.

இப்படி தெரிவித்திருப்பது, எதிர்த்திருப் பது குடியரசு தலைவர் என்பதனால், இந்து நெறிமுறை சட்டம் HINDU CODE BILL சட்டமாகாது என்ற நிலை வந்தது. ஏனெனில் குடியரசு தலைவரின் ஒப்புதலின்றி அது சட்டமாகிட இயலாது.

பண்டித நேரு உறுதியாக இருந்திருக்க வேண்டும். அவர், 1951 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27 ஆம் நாள் அந்த சட்டம் இந்த நெறி, முறை சட்டம் பின் வாங்கப்படுகின்றது என அறிவிக்கப் பட்டதை எதிர்க்கவில்லை மௌனம் காத்தாரம். இது அம்பேத்கர் அவர்களை எரிச்சலூட்டியது.

## அம்பேத்கரின் ஆவேசம் இராஜினமா

டாக்டர் அம்பேத்கர் பிரதம அமைச்சர் நேரு இப்படிக் காலை வாரிடுவார் என எதிர்பாக்கவில்லை. தன்னுடைய கட்சி யைச் சார்ந்தவர்களை அவர் எளிதாக ஒருங்கிணைத்திருக்க முடியும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை என ஆதங்கப் பட்டார் அம்பேத்கர்.

நேரு அவர்களிடம், இப்படிச் சொன்னார்.

"It's easy to give power. But it is very difficult to give wisdom.

ஒருவரிடம் அதிகாரத்தை தருவது என்பது எளிது. ஆனால் அவருக்கு அறிவை- ஞானத்தைத் தருவது கடினம். இத்தோடு இந்து திருமணச் சட்டங்களையும் கடுமை யாக விமர்சித்தார் LIFE AND MISSION OF AMBEDKAR BY DANJAN KEER.

"அத்தோடு, தனக்குக் கட்டுப்படாத கட்சிகாரர்களிடம் பண்டித நேரு அவர்கள் அவ்வளவு கட்டுப்பாடோடு நடந்து கொண்டார்" என்றும் சாடினார். அத்தோடு நேருவின் அமைச்சரவையிலிருந்து தான் வெளியேறு வதாகவும் அறிவித்தார். 27 செப்டம்பர் 1951 அன்று தன் இராஜினமா கடிதத்தையும் சமர்ப்பித்தார்.

## நேருவின் விரக்தி!

அம்பேத்கரின் கடுமையான எதிர்ப்பு கடுமை நிறைந்த கண்டன சொற்கள், இராஜினாமா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த வர்கள் தன் காலை வாரியது, இவற்றால், மனம் சோர்ந்த நேரு ஒரு சமரச முயற்சியாக அரசியல் நிர்ணயச் சட்டத்தில் ஒரு பொது சிவில் சட்டம் கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை இணைத் தார். ஆக இந்துக்களுக்கான ஒரு பொது சிவில் சட்டம் ஒன்றே அன்றைய விவாதம்.

அல்லாமல், எல்லா குடி மக்களுக்கும் ஒரு பொது சிவில் சட்டம், என்பதைப் பற்றியதல்ல. எல்லோருக்குமான ஒரு பொது சிவில் சட்டம் என்றால், அது பற்றிய முடிவு 1946 - 1947 கள்லே எடுக்கப் பட்டிருக்கும்.

## அரசியல் சாசன அவையில் பொது சிவில் சட்டம்

ஆமாம்! டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இந்திய அரசியல் சாசன சட்டத்தை எழுதிக் கொண்டிருக்கும் போது M.R.மஸானி 28.3.1947 இல் பொது சிவில் சட்டம் என்ற பிரச்சனையை எழுப்பினார். ஒரு தீர்மானத் தைக் கொண்டு வந்தார். இவர் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் இணைக்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகள் பற்றி ஆராய்ந்திட அமைக்கப்பட்ட குழுவில் உறுப்பினராக இருந்தார். ஆனால் அந்தத் தீர்மானம் தோற்றுப் போனது முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் அவர் மீண்டும் 30.7.47 இல் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். சந்தடி சாக்கில் அது நிறைவேற்றவும்பட்டது.

ஆனால் அதைப் பற்றி யாரும் கவலைப் படவில்லை. அதே நேரத்தில் காங்கிரஸ் கட்சி யின் எல்லா மாநாடுகளிலும் சிறுபான் மையினரின் பண்பாடு மொழி - சட்டங்கள், எழுத்து எல்லாம் பாதுகாக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. பின்னர் 1951- இல் தன் சொந்த கட்சிக்காரர்களால் புறக்



கணிக்கப்பட்ட நேரு அதை அரசியல் நிர்ண யச் சட்டத்தில் சேர்த்தார். இதனை வரலாறு இப்படிப் பதிவு செய்கின்றது. Though a demand for a uniform civil code was made by PM Jawaharlal Nehru his supporters and women activities, they have to finally accept the comporomise of it being added to the directive principles because of heavy opposition.

## 1952 தேர்தல்கள்

அடுத்து தேர்தல் 1952 ஆம் ஆண்டில் வந்தது. இந்த தேர்தல் பிரச்சாரத்தில் நேரு இந்து சட்டங்களை நெறிபடுத்திதான் ஆக வேண்டும். இதில் தனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கின்றது என்றும், அதை செயல்படுத்துவதில் இருக்கும் சிக்கல் களை சீர் செய்துவிட்டு, அதை நடைமுறை படுத்துவேன் என்றும் வாக்களித்தார்.

தேர்தலில் அமோகமான வெற்றியைப் பெற்றார். இந்து சட்டங்களை நெறிபடுத் திடும் விதத்தில் பின்வரும் சட்டங்களை இயற்றினார்.

1. Hindu Marriages Act : 1955

   இந்து திருமணங்கள் சட்டம் : 1955

2. Hindu Sucession Act : 1956

   இந்து, வாரிசுரிமைச் சட்டம் : 1956

3. Hindu Minority and Guardianship Act : 1956

   இந்து சிறுவர்கள் மற்றும் பாதுகாவலர்கள் சட்டம் : 1956

4. Hindu Maintanace Act : 1956

   இந்து பராமரிப்புச் சட்டம் : 1956

நாம் இந்தச் சட்டங்களை மேலெழுந்த வாரியாகப் பார்த்தாலே, ஓர் உண்மைப் புரியும். அது கணவன் இறந்தவுடன் அல்லது மனைவி இறந்தவுடன் அந்தக் குடும்பத்தில் எண் 2 இலிருந்து 4 வரை உள்ள பிரச்னைகள் தானாக வந்துவிடும்.

இதில் உடன்கட்டை ஏறும் பழக்கம் உள்ள நாள்களில், குழந்தைகளின் தாய் வலுக்கட்டாயமாகக் கொலை செய்யப் பட்டால் என்ன நடக்கும் என்பதை எளிதில் புரிந்து கொள்ளலாம். இதனால் இந்தச் சட்டங்கள். இந்து பெருங்குடி மக்களுக்கு அவசியம்.

இஸ்லாத்தையும், அதைப் பின்பற்றி வாழும் முஸ்லிம்களையும் பொறுத்தவரை

இந்தப் பிரச்னைகள் அறவே இல்லை. இதற்கான சட்டங்களும் இது போல் வரும் இதரப் பிரச்னைகளுக்கும், தேவையான சட்டங்கள், 1400 ஆண்டுகளுக்கு முன்னரே வகுக்கப்பட்டு விட்டன. இதனால் தான் இந்துச் சட்டங்களை ஒருங்கிணைக்கத் தலைப்பட்ட ஆட்சியாளர்கள் அனைவரும் முஸ்லிம்கள், தங்கள் சட்டப்படி ஷரீஅத் சட்டப்படி வாழ்வார்கள் என விட்டு விட்டார்கள்.

இனி பொது சிவில் சட்டம் என்ற விவா தத்திற்கு வந்தால் இந்துக்களின் சட்டம், ஒருங்கிணைக்கப்பட்டு விட்டது. அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 44 தேவை இல்லை என்றாகி விடுகின்றது.அதனால் அரசியல் நிர்ணயச் சட்டத்திலிருந்து இந்தப் பிரிவு 44 ஐ அகற்றிட வேண்டும் என்ற கோரிக்கையை முஸ்லீம்கள் வைத்து வருகின்றார்கள்.

இந்த பிரிவு 44-தான் எல்லோருக்கும் ஒரு பொது சிவில் சட்டத்தை அரசு கொண்டு வரும் என்கிறது.

இந்த பிரிவு அகற்றப்படாத வரை ஆட்சியாளர்கள் குறிப்பாக பாசிஸ்ட்டுகள் இதைப் பிடித்துக் கொண்டு ஆடுவார்கள் என்பது மட்டுமல்ல இதைத் திணிக்கவே செய்வார்கள்.

### அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் – குறுகிய வரலாறு

இந்தப் பொல்லாத பிரிவை வைத்து அன்று 1967 - 1972 வரை காங்கிரஸ் கட்சி முஸ்லிம்களை சலனப்படுத்திய போது தான் முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் தோன்றியது. 1972 இல் அன்று முதல் இந்தப் பொது சிவில் சட்டத்திற்கு எதிராக இந்த வாரியம் வீரியமுடன் போராடி வருகின்றது.



இன்று - முஸ்லிம்களுக்கெதிரான பல சட்ட சிக்கல்களில், நீதிமன்றங்களில் மிகவும் அக்கறையுடன் போராடி வரும் இந்த வாரியம், 1972 ஆம் ஆண்டில் தான் தொடங்கப் பெற்றது. தொடங்கியவர் ஹாஜி காரி முஹம்மத் தையீப் இமாம்.

உத்திரபிரதேசத்தில் வீற்றிருக்கும் தேவ்பந்த் அரபி கல்லூரியில் - மதரஸாவில் தான் இந்த வாரியம் தொடங்கப் பெற்றது. இதைத் தொடர்ந்து பம்பாயில் 1972 டிசம்பர் திங்களில் முஸ்லிம்களின் மாபெரும் மாநாடு ஒன்று நடைபெற்றது. இந்த மாநாட்டில் தான். அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் முறையாக நிலை நிறுத்தப்பட்டது. டிசம்பர் 27-28 (1972) மாநாட்டின் முதல் அமர்விலேயே தனியார் சட்ட வாரியத்தின் முதல் தலைவராக, காரி முஹம்மத் தய்யீப் இமாம் அவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். செயலாள ராக மௌலான செய்யித் மின்னத்துல் லாஹ் ரஹ்மானி அவர்கள் தேர்ந்தெடுக் கப்பட்டார்கள்.

இந்த முதல் மாநாட்டிலேயே 5 லட்சத் திற்கும், மேற்பட்ட முஸ்லிம்கள் கூடினார் கள். மாநாட்டில் பொது சிவில் சட்டம் என்ற போர்வையில், முஸ்லிம்களின் தனித் தன்மைகளை அழிக்கும் சதி ஒன்று அரங் கேறி கொண்டிருக்கின்றது. இதில் முஸ்லிம் கள் கவனமாக இருந்திட வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 44 இதற்கு நிரந்தரமாக வழிபடுத்துக் கொண்டி ருக்கின்றது. அதனால் இந்தப் பிரிவு அகற்றப் பட வேண்டும். அல்லது இந்தப் பிரிவு முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தாது என்று திருத்தம் கொண்டு வந்திட வேண்டும் எனக் கோரியது.

அரசியல் நிர்யணச் சட்டம் பிரிவு 44, முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும் சிறுபான்மை யினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல்

நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழி காட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழி காட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது. (ஆதாரம்) அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் 27-28 டிசம்பர் தீர்மானம்.

(ஆதாரம்) A Muslim of India a documentary record by A.G. Noorani, Page 157-158

### பிரதமர் இந்திராகாந்தியும் முஸ்லிம் தனியார் சட்ட வாரியமும்



1972 இல் முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் கூட்டிக் காட்டிய மக்கள் திறள் கண்டு அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் ஆடிப் போய் விட்டார் என்றே சொல்லிட வேண்டும்.

மாநாடு நாடெங்கும் பரபரப்போடு பேசப்பட்டது. இதனால் பிரதமர் தனக்கு வேண்டிய இமாம் - ஷேஹ் முஹம்மத் அப்துல்லாஹ் அவர்கள் வழி முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் தளகர்த்தர்களை அழைத்துப் பேசினார்கள். இந்தச் சந்திப்பு பிரதமரின் வசதிக்கேற்ப புதுடெல்லியில் 18 ஆகஸ்ட் 1973 அன்று நடைபெற்றது.

இதில் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள்.

“எடுத்த எடுப்பிலேயே நான் உங்களிடம் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்திட விரும்புகின்றேன். நான் மெத்த மன உளைச்சலுடன் இருக்கின்றேன். காரணம், நான் என்ன தான் உங்களுக்கு, முஸ்லிம் தனியார் சட்டம் குறித்து, உறுதி தந்தாலும் நீங்கள் நம்ப மாட்டேன் என்கின்றீர்கள். பல முறை நான் முஸ்லிம் தனியார் சட்டத்தில் தலையிட மாட்டேன் எனக் கூறிவிட்டேன்.

"ஆனாலும், நீங்கள் நம்பிக்கை இன்மையையே வெளிபடுத்துகின்றீர்கள். இதுதான் என் மன உளைச்சலுக்குக் காரணம். நீங்கள் என்னைச் சந்தித்துப் பேசி ஆளும் என் கட்சி என்ன நினைக்கின்றது என்பதை அறியாமலே எதிர்கட்சிகளைச் சந்தித்து பேசுகின்றீர்கள். நீங்கள் எங்கள் மீது நம்பிக்கை வைக்கவில்லை என்றால், நாம் பேசுவதும் பயனற்றதாகவே இருக்கும்".

"நேரு குடும்பத்தின், சிந்தனையும் போக்கும், மதசார்பின்மையை மையமாகக் கொண்டது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். நான் இப்போது கூறுகின்றேன் அரசு முஸ்லிம் தனியார் சட்டங்களில் தலையிடவே செய்யாது நான் இந்த வகுப்புவாதத்தை ஆட்சியில் இல்லாத போது, எதிர்த்தேன். இப்போது ஆட்சியில் இருந்து கொண்டு எதிர்க்கின்றேன். இனி பதவியை, இழந்தாலும் எதிர்ப்பேன்."

பிரதமர் இந்திரா காந்தியின், இந்த வாக்குறுதிகளுக்கு முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் நன்றி தெரிவித்து அரசியல் நிர்ணயச் சட்டம், பிரிவு 44 முஸ்லிம்களை - சிறுபான்மையினரைக் கட்டுப்படுத்தாது என்றொரு சட்டத்திருத்தம் கொண்டு வராதவரை எங்கள் பதற்றமும், அரசுகளின் மேலுள்ள ஐயங்களும் அகலாது எனக் கூறிவிட்டு வந்தனர். தனியார் சட்ட வாரிய உறுப்பினர்கள். இன்னும் பல பிரச்சனைகளைப் பற்றிப் பேசினார்கள்- விரிவஞ்விட்டுகின்றோம்.

(Source : Cyclostyled copy distributed by the delegation Delhi-22, Aug. 1973.

As incerted in the Muslims in India

A documentary Record. Edited by A.G. Noorani Page 165-172)

பிரதமர் இந்திரா காந்தி கொடுத்த வாக்குறுதிக்கு நேர் எதிரானவையே இன்று நடந்து கொண்டிருக்கின்றன. ஆனாலும் முஸ்லிம் தனியார் சட்ட வாரியம் தன் எதிர்ப்பை வீரியத்தோடு இன்றளவும் காட்டி வருகின்றது. நீதிமன்றங்களில் வழக்காடி வருகின்றது. ●

பழங்கால இந்தியாவில் பலதார மணம், அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களைத் திருமணம் செய்து கொள்வது தடை செய்யப் படவில்லை. ஆனால் ஐரோப்பியாவைப் போல் அல்லாமல் பலதார மணம் இந்தியாவில் பரவலாக இருந்தது. குறிப்பாக ஆட்சி பீடத்தில் இருந்தவர்கள், பல பெண்களைத் திருமணம் செய்து கொள்வதும், திருமணத்திற்கு அப்பால் பல அந்தப்புற அழகிகளை வைத்துக் கொள்வதும் பழக்கமாக இருந்தது.

1960–ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் ஜனவரி 1962ல் செயலில் வந்தது. இதில் பிரிவுகள் 494, 495 ஆகியவை பலதார மணம் செய்வதைத் தடை செய்தது.

இந்து திருமணங்கள் சட்டம் 1955 இந்துக் களுக்கு பலதார மணத்தை தடை செய்தது. ஒன்றுக்கு மேற்பட்ட பெண்ணை மணந்து கொண் டால் அது செல்லாது. ஆனால் அதற்குரிய புகார் முதல் மனைவியிடமிருந்து வந்திட வேண்டும் .

# பழங்கால இந்தியா

அப்போது மட்டுமே அரசு நடவடிக்கை எடுக்கும். சுருக்கமாகச் சொன்னால், முதல் மனைவி மௌனம் காத்தால் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்ள லாம். கோவாவில் பொது சிவில் சட்டம் இருப்பதாக சிலர் கூறுகின்றார்கள். அது பொது சிவில் சட்டம் அல்ல அதன் பெயர் குடும்பச் சட்டம். அதில் இந்துக்களே ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்ளலாம்.

**தேசிய குடும்ப நலவாழ்வு கணக் கெடுப்பு :**
**National Family Health Survey (NFHS-3)**

தேசிய குடும்ப நலவாழ்வு கணக் கெடுப்பு 2005–2006 ஓர் உண்மையை வெளிக்கொணர்ந்துள்ளது. இந்த கணக்கெடுப்பின்போது 2 சதவிகிதம் குடும்பப் பெண்கள் தங்கள் கணவன்களுக்கு ஒன்றுக்கும் அதிகமான மனைவிமார்கள் இருப்பதாகக் கூறினார்கள். (NFHS - Survey)

**உச்ச நீதிமன்றம் சந்தித்த விசித்திரமான வழக்கு**

உச்ச நீதிமன்றத்தில் இந்து சகோதரிகள் சிலர் வழக்கொன்றை தொடுத்தார்கள். அந்த வழக்கில் இப்படியொரு கோரிக்கையை வைத்தர்கள். இவர்கள் தங்கள் கணவனுக்கு இரண்டாவது, மூன்றாவது மனைவிமார்களாக வாழ்க்கைப் பட்டவர்கள்.

தாங்கள் தொடுத்த வழக்கில் இவர்கள் கேட்ட கோரிக்கை என்னவெனில் இரண்டாவது மனைவியர்களாக வாழும் எங்களுக்கு, இரண்டா வது மனைவியர்களாக அமையும், முஸ்லிம் பெண்களுக்கு கிடைக்கும் அத்தனை உரிமை களும் கிடைக்கச் செய்திட வேண்டும் என்பதே இதில் நேரடியாக தீர்ப்பு வழங்கிடாத நீதி மன்றம், முஸ்லிம்கள் – இந்துக்கள் இவர்களி





டைய இருக்கும் பலதார மணம் பற்றிய விவாதம் ஒன்றை எழுப்பியது. அதிலும் பலதார மணம் அனுமதிக்கப்படாத இந்துக்களிடையேதான் அதிகமாக இருப்பது உச்சநீதி மன்றத் திற்குச் சொல்லப்பட்டது.

இந்தப் பின்னணியில் ஒரு கணவனுக்கு இரண்டாதாக வாழ்க்கைப்படும் முஸ்லிம் பெண்ணுக்கு கிடைக்கும் எல்லா உரிமைகளும் இந்து கணவனுக்கு இரண்டாவதாக வாழ்க்கைப் படும் இந்து பெண்களுக்கும் கிடைக்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கி இருக்க வேண்டும். ஆனால் அதை வழக்கை அப்படியே விட்டு விட்டது உச்சநீதிமன்றம்.

பின்னால் வந்த வழக்குகளில் இந்து கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட இரண்டாவது மனைவிக்கு ஜீவனாம்சம் வழங்கியது. அதாவது இரண்டாவது திருமணம் செல்லாது. ஆனால் வாழ்க்கை உதவித் தொகை கொடுக்க வேண்டும்.

**ரமேஷ் சந்திரா ராம் பிரதாப் ஜி டாகா - இரமேஷ்வரி ராம்சந்திரா டாகா வழக்கு 2004**

இந்தவழக்கில்ரமேஷ்சந்திரபிரதாப்ஜிடாகா இரண்டாவதாக செய்து கொண்ட திருமணம் செல்லாது என அடித்துக்கூறிய உச்ச நீதிமன்றம், இந்த இரண்டாவது மனைவிக்கும், இரண்டாவது மனைவிக்குப் பிறந்த குழந்தைக்கும் வாழ்வாதார உதவியாக மாதம் ரூ. 3000 வழங்கிட வேண்டும். அதை திருமணமான நாளிலிருந்தே வழங்கிட வேண்டும் என்றது.

இந்த வழக்கும், தீர்ப்பும், ஆழ்ந்து கவனிக்கத் தக்கவை. இந்த வழக்கில் உச்சநீதிமன்றம், இப்படி ஒரு சொற்றொடரைப் பயன்படுத்துகின்றது.

Second Marriage is illegal but not immoral - அதாவது இரண்டாவது திருமணம் சட்த்திற்கு எதிரானது. ஆனால் ஒழுக்கக்கேடானது அல்ல.

பலதார மணம் தடைகளைத் தாண்டி அரங்கேற்றப்படுகின்றது என்பது கவனிக்கத் தக்கது. இன்னும் சில புள்ளி விவரங்கள் இப்படிப் பேசுகின்றன.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக் கெடுப்பில் இந்து ஆண்களை விட 43.56 லட்சம் பெண்கள் அதிகமாகத் திருமணம் செய்திருந்தார் கள். ஒரு இந்து ஆண் ஒரு பெண்ணை திருமணம் செய்திருந்தால் இத்தனைப் பெண்களுக்கு அதிக மாகத் திருமணம் ஆகி இருக்காது.

சரியான கணக்கை குறிப்பிடுவதாக இருந் தால் மொத்தம் 47 கோடியே 13 லட்சத்து 97 ஆயிரத்து 900 இந்துகளுக்கு திருமணமாகி இருந்தது. (47,13,97,900) இதில் 23 கோடியே 35 லட்சத்து, 20 ஆயிரத்து, 803 பேர் ஆண்கள் (23,35,20,803) ஆனால் திருமணமான இந்து பெண்களின் எண்ணிக்கை திருமணமான ஆண் களின் எண்ணிக்கைவிட அதிகம். அது 23 கோடியே 78 லட்சத்து, 77 ஆயிரத்து, 097 (23,78,77,097) ஆக 45 லட்சத்து, 56 ஆயிரத்து, 294 பெண்கள் அதிகமாகத் திருமண் செய்திருந் தார்கள். (Source 2011- Census)

சுருக்கமாகச் சொன்னால் 45,56,294 இந்து பெண்கள் தங்கள் கணவனுக்கு இரண்டாவது மனைவியாக வாழ்ந்து வருகின்றார்கள்.

எந்த நீதிமன்றமும் இந்த இரண்டாவது திருமணம் செய்து கொண்ட கணவர்களை தண்டிக்கவில்லை. இந்து திருமணச் சட்டப்படி அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இவர்கள் தண்டிக்கப்படவில்லை. காரணம் முதல் மனைவி புகார் செய்திடவில்லை.

இங்கே ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். இத்தனை திருமணங்களிலும் பெண்கள் தங்களுக் குப் பிடித்த கணவனோடு தாராளமாக மனம் ஒப்பி வருகின்றார்கள். இதனை முதல் மனைவி யும் ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த நிலையைத்

தடை செய்வதும், அவர்களைத் தண்டிப்பதும், அவர்களின் விருப்பங்களிலும், சமூக வாழ்விலும் தலையிடுவதாக ஆகும். இது பெண்கள் தாங்கள் விரும்பும் கணவனை தேர்ந்தெடுப்பதின் உரிமையை மறுப்பதாகாதா?

இப்படிக் கூடி வாழும் கணவனையும் மனைவியையும் பிரித்து பிளந்து வைத்து விட்டு அந்த மனைவியின் செலவுக்கு நீ பணம் கொடு என்பது என்ன நியாயம்? Also Quoted in TH.: Eng : 28.10.2016.

எத்தனையோ வழகுகளில் திருமணம் சட்ட விரோதமாகாது. ஆனால் நீ ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கி இருக்கின்றோம். இது ஆண்களுக்கும், கூடி வாழ்ந்த பெண்களுக்கும் செய்யும் துரோகம் என்றே சொல்ல வேண்டும். அப்படி பிரித்து வைக்கப்படும் பெண்களை தாம்பத்திய வாழ்க்கையைத் தடுத்து இப்படி விடப்படும் பெண்களை நாம் எங்கோ பிடித்துத் தள்ளுகின்றோம் என்றே பொருள். சிவப்பு விளக்குப் பகுதிகள் நமது நவீன கலாச்சாரத்தின் அடையாளம் ஆனாலும் முறையாக இரண்டாவது திருமணம் தடை செய்யப் பட்டது என்னே நமது பகுத்தறிவு

### நீதிமன்றங்களின் விசித்திரமான சொல்லாட்சிகள்

முஸ்லிம்கள் பலதார மணம் செய்து கொள்வதை against public morality – இது “பொது ஒழுக்கத்திற்கு எதிரானது” என வாய்கூசாமல் பேசிடும் நீதிபதிகள் இன்று வந்து விட்டார்கள் உத்திரப்பிரதேச மாநிலத்தில் இரண்டாவதாக திருமணம் செய்திட விரும்பிய ஒரு முஸ்லிமின் திருமணத்தை தடுத்த உச்ச நீதிமன்றம் மேலே நாம் சொன்ன கடுமையான சொற்களைப் பயன் படுத்தியது. ஆனால் நாம் மேற்கோள் காட்டிய அந்த இரண்டு வழக்குகளிலும் இரண்டாவது மனைவிக்கு ஜீவனாம்சம் வழங்கிய நீதிபதி அவர்கள் இரண்டாவது திருமணம் சட்ட விரோத மானது. ஆனால் ஒழுக்கக் கேடானது அல்ல எனக் கூறுகின்றார்.

ஆக இந்த சொல்லாட்சியில் ஒரு முஸ்லிம் வெறுப்பு இருப்பதைக் காண முடிகின்றது. அதுவும் இன்றைய தலைமை நீதிபதி இதைக்கூறி இருப்பது சிறுபான்மையினரைப் புண்படுத்தும்.

இவையெல்லாம் இன்றைய பாசிச ஆட்சி யாளர்கள் தரும் உற்சாகத்தாலும், உந்துதலாலும் நடப்பவையே என்ற ஐயப்பாடும் வரும்.

ஆக பலதார மணம் எல்லா மதத்தவ ராலும் பின்பற்றப்படுகின்றது. நடைமுறையில் நடத்தப்படுகின்றது என்ற யதார்த்தத்தை உணர்ந்து அதுபோன்ற விவகாரங்களில் நீதிமன் றங்களோ நாடாளு மன்றங்களோ தங்கள் மூக்கை நுழைக் காமலிப்பது நல்லது. ●

# நாகர்கோவில் நூருல் இஸ்லாம் பல்கலைக் கழகத்தின் சாதனை

நூருல் இஸ்லாம் பல்கலைக் கழகம், நாகர்கோவிலில் மிகவும் கீர்த்தி மிக்கப் பல்கலைக் கழகம். இந்தப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த சுமார் 145 மாணவர்கள் ஒரு செயற்கை விண்கோளை வடிவமைத்திருக்கின்றார்கள்.

இந்த செற்கை விண்கோள் உலகெங்கிலும் பேரிடர் நிர்வாகத்திற்கும் (Disaster management சுற்றுப்புறச் சூழல் பாதிப்புகளைப் படமெடுக்கவும் விவசாயத்தில் தானிய தன்மைகளையும் கண்காணிக்கப் பயன்படும். இந்த செயற்கை விண்கோளை இன்ஜினியரிங் மாணவர்கள் பல ஆண்டுகளாக உழைத்து வடிவமைத்திருக்கின்றார்கள்.

இதனை (Nano) நானோ செயற்கை விண்கோள் என அழைக்கின்றார்கள். இதனை நமது இந்திய அரசிடம் ஒப்படைத்திருக்கின்றார்கள். 2016 அக்டோபர் 9–ஆம் நாள் செயற்கைகோள் ISRO என்ற Research organization என்ற வாண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் 2016 நவம்பர் வாண்வெளியில் செலுத்தவிருக்கின்றது.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்துச் சட்டங்களை ஒருங்கிணைக்கத் தொடங்கி னார்கள். ஆனால் அவருடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களே எதிர்த்தார்கள். எதிர்த்த அமைச் சர்கள் அனைவரும் இந்து மகா சபையில் அங்கம் வகித்தவர்கள். ஆனால் காங்கிரஸ் கட்சியில் தங் களை இணைத்துக் கொண்டு காங்கிரஸ் கட்சியை தங்கள் இலட்சியங்களை நிறைவேற்றிட பயன் படுத்தியவர்கள்.

அரசு கொள்கைகளை வகுத்திடும்போது அவை இந்த வழிகாட்டும் கொள்கைகளின் அடிப் படை யில் அமைந்திட வேண்டும். இங்கே அனை வரும் கவனிக்க வேண்டியது என்னவெனில் இது அரசுக்கான வழிகாட்டுதலே அல்லாமல் நீதி மன்றங்களுக்கு அல்ல. ஆனால் நமது நீதிமன்ற ங்கள் வழிகாட்டும் கொள்கையின் பிரிவு 44–ஐ தாங்கள் வழங்கிடும் தீர்ப்புகள் வழிகொண்டு வந்திட வேண்டும் என முந்திரிக் கொட்டையாய் முந்திக்கொண்டு வருகின்றன.



# அடிப்படை உரிமைகளும் வழிகாட்டும் கொள்கையும்

ஆக இவர்களின் முஸ்லிம் வெறுப்பும், இஸ்லாத்தின் மேலுள்ள கசப்பும் அனைவரும் அறிந்ததே.!

ஆக பொது சிவில் சட்டம் என்ற சொல் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் வழிகாட்டும் கொள்கையில் 44–வது பிரிவில் இடம் பெற்றதை பக்குவமாக முஸ்லிம்களின் தனித்தன்மைகளைத் தகர்க்கும் ஆயுதமாகப் பயன்படுத்தினார்கள்.

அரசியல் நிர்ணயச் சட்டத்தில் பகுதி நான்கில் இந்த வழிகாட்டும் கொள்ளைகள் இடம் பெறுகின்றன. Directive Principles of state Policy.

அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 36 முதல் 51 வரை இந்த வழிகாட்டும் கொள்கைகள் இடம் பெறுகின்றன.

## வழிகாட்டும் கொள்கையா அல்லது அடிப்படை உரிமையா?

இதில் நமது உச்ச நீதிமன்றம் ஒரு நாடகத்தை தொடர்ந்து அரங்கேற்றி வருகின்றது. அது வழிகாட்டும் கொள்கைகளைவிட அடிப்படை உரிமைகள் முக்கியமானவை அல்ல என்பதே.

காரணம் நமது அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 Right to Religious freedom மத சுதந்திரம் ஓர் அடிப்படை உரிமை எனப் பிரகடனப்படுத்து கின்றது.

அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 14 முதல் 35 வரை அடிப்படை உரிமைகளைப் பற்றி பேசுகின்றன. இதில் பிரிவு 25 Right to profess, produce and propagate religion எனக் கூறுகின்றது.

அதாவது மத நம்பிக்கையைப் பிரகடனப்படுத்தவும், அதனை செயல்படுத்தவும், பிரச்சாரம் செய்யவும் உரிமையளிக்கின்றது.

இதனால் தங்களுடைய தனியார் சட்டங்களில் அரசு தலையிடும் போதெல்லாம் முஸ்லிம்கள் இந்தத் தலையீடு அரசியல் நிர்ணயச் சட்டம் வாக்களித்த அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது. எந்த நிலையிலும் அடிப்படை உரிமைகளுக்கு எதிராக அரசு செல்ல முடியாது என வாதித்து வருகின்றார்கள்.

நீதிபதிகளும் பல நேரங்களில் ஆட்சியிலே இருப்பவர்களும் தலாக், பலதார மணம் இவற்றிலெல்லாம் நீங்கள் அடிப்படை உரிமைகளைக் கோரிட முடியாது எனப்பேசி வருகின்றார்கள். ஆனால் 1958 ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் இப்படித் தெளிவாக விளக்கி இருந்தது.

"The state should certainly implement the directive principles. but it must do so in such a way that its laws should not take away or abridge the fundamantal rights, for otherwise, the protecting of chapter III will be" a more rope of sand.

Source : M.H. qureshi Vs state of Bihar 1958 SC 731. para 12 : 1959 scr 629

அதாவது

அரசு வழிகாட்டும் கொள்கைகளை நிச்சயமாகச் செயல்படுத்திட வேண்டும். ஆனால் அரசு அதை அடிப்படை உரிமைகளை பிடுங்கி விடாமல் அல்லது அடிப்படை உரிமைகளை சுருக்கி விடாமல் செய்திட வேண்டும். இல்லையேல் அரசியல் நிர்ணயச் சட்டம் அத்தியாயம் மூன்றில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கான பாதுகாப்புகள், மணலில் திரிந்த கயிறாக மாறிவிடும்''

இங்கு கவனிக்க வேண்டியது என்னவெனில் அன்றைய நாட்களில் நீதித் துறையிலோ ஆட்சி மன்றங்களிலோ இந்த அளவுக்கு பாசிச சிந்தனைகள் ஆக்கிரமித்திருக்கவில்லை.

இன்றைய நீதிமன்றங்கள், நமது தனியார் சட்டங்களில் தலையிடும்போது நாம் அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25–ல் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையைச் சொன்னால் அவர்கள் இஸ்லாத்திற்கும் திருக்குர்ஆனுக்கும் விளக்கம் சொல்லி இதுபோன்ற உரிமைகளை இஸ்லாமே வழங்கவில்லை எனச் சொல்லி திருக்குர்ஆன் விரிவுரையாளராக மாறிவிடுகின்றார்கள். இந்த



நிலை மாறிட வேண்டும் என்றால் நாம் வழிகாட்டும் கொள்கையில் பிரிவு 44–ஐ அகற்றிட பாடுபட வேண்டும். அல்லது இந்தப் பிரிவு முஸ்லிம்களைப் கட்டுப்படுத்தாது என்ற திருத்தம் கொண்டு வர வேண்டும். இதை தொடக்க நாள் தொட்டே முஸ்லிம்கள் வலியுறுத்தியும் வருகின்றார்கள்.

**ANNEXURE -1** வழிகாட்டும் கொள்கையில் இடம்பெறும் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 37 இப்படிக் கூறுகின்றது.

"**Application of the principles contained in this part :** the provisions contained in this part shall not be emforsible by any court. but the principles there laid down are neverthless fundamental in the governance of the country and it shall be the duty of the state to apply these principles in making laws.

**இதன் தமிழாக்கம் :** இந்த பகுதியில் (வழிகாட்டும் கொள்கையல்) அடங்கி இருக்கும் கொள்கைகளை எந்த நீதிமன்றங்கள் வழியாகவும் செயலில் கொண்டு வந்திட இயலாது. அதே நேரத்தில் இதில் குறிப்பிட்டுள்ள கொள்கைகள் அனைத்தும் நாட்டின் நிர்வாகத்திற்கு அடிப்படையானவையாகும். சட்டங்களை இயற்றும் போது இந்தக் கொள்கைகளை செயல்படுத்துவது அரசின் கடமையாகும்.

ஆக நீதிமன்றங்கள் தங்கள் எல்லைகளைத் தாண்டி தீர்ப்புகள் வழி பொது சிவில் சட்டத்தைச் செயலில் கொண்டு வருவது அவர்கள் எந்த அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு விசுவாசமாக இருப்போம் என்று உறுதிமொழி எடுக்கின்றார்களோ அதற்கு எதிரானது. ●




# உலக நாடுகளில் தனியார் சட்டங்கள்

உலகில் பல நாடுகள் தங்களை மத சார்பற்ற நாடு என்றே பிரகடனப்படுத்தியுள்ளன. ஆனாலும் அங்கு வாழும் மக்கள் ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சார்ந்தவர்களாகவே இருக்கின்றார்கள். இதைக் காரணங்காட்டி எல்லோரும் அந்தப் பெரும்பான்மையினரின் சட்டத்தையே பின்பற்றிட வேண்டும் என யாரும் கோரிடவில்லை.

எடுத்துக்காட்டாக தாய்லாந்து அரசை எடுத்துக்கொள்ளலாம். தாய்லாந்து, புத்தர்கள் அதிகமாக வாழும் நாடு. அவர்களுடைய தனியார் சட்டங்களில் பல மாற்றங்களை அரசு கொண்டுவந்திருக்கின்றது. ஆனால் அந்தச் சட்டங்கள், அவற்றில் கொண்டுவந்ததிருத்தங்கள் இவை புத்த மதத்தைச் சார்ந்தவர்கள்களை மட்டுமே கட்டுப்படுத்தும். முஸ்லிம்கள் தங்கள் தனியார் சட்டப்படி வாழ்ந்திடும், உரிமையைப் பெற்றிருக்கின்றார்கள்.

பர்மாவில் கொண்டுவந்த குடும்பவியல் சட்டங்கள் திருத்தங்கள் முஸ்லிம்களைக் கட்டுப்படுத்தாது. முஸ்லிம்கள் தங்கள் தனியார் சட்டப்படி வாழும் உரிமையைப் பெற்றிருக் கிறார்கள்.

கிரீஸ் நாட்டில் முஸ்லிம்கள் தனியார் நீதி மன்றங்களையே பெற்றிருக்கின்றார்கள் என்றே சொல்லிட வேண்டும். ஏனெனில் அங்கு முஸ்லிம் தனியார் சட்டங்கள், முஃப்திகள், காஸிகள் என்ற நீதிபதிகள் வழியே செயல்படுத்தப்படுகின்றன.

இதேபோல எத்தியோப்பியா, கானா, கோல்டு, கோல்ட், உகாண்டா ஆகிய நாடுகளில் முஸ்லிம்கள் ஷரீஅத் சட்டங்களையே பின்பற்றி வாழுகின்றார்கள்.

இந்த நாடுகளில் பெரும்பாலானவை தங்களை மதசார்பற்ற நாடுகள் என்றே அழைத்து வருகின்றன.



இந்த நாடுகளில் சில பொதுவுடமை கொள்கையைக் கொண்டவை என்றாலும் முஸ்லிம்கள் தங்கள் தனியார் சட்டத்தைப் பின்பற்றுவதில் எந்த அரசு குறுக்கீடுமில்லை. அதேபோல் நீதிமன்ற தொல்லைகளும் இல்லை.

**நாம் நம்மை ஒரு மத சார்பற்ற நாடு எனப் பீற்றிக்கொள்கிறோம். ஆனால் பெரும்பான்மையினரின் மத வழிமுறைகளை சிறுபான்மையினர் மீது திணித்துக்கொண்டே இருக்கின்றோம் அவமானம் அநீதி. ●**

# முஸ்லிம் நாடுகளில் தனியார் சட்டங்களில் கொண்டுவந்த திருத்தங்கள்

இந்தியாவில் வாழும் முஸ்லிம்களின் தனித்தன்மைகளை அழித்து அவர்களை இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கிட வேண்டும் என வரிந்து கட்டிக்கொண்டு செயல்படுவோர் அடிக்கடி ஒரு வாதத்தை எடுத்து வைக்கின் றார்கள். அது பல முஸ்லிம் நாடுகளில், முஸ்லிம் தனியார் சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆனால் இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் மட்டும் ஏன் இப்படி அடம் பிடிக்கின்றார்கள் ? அந்த வாதம்!

**இதனால் முஸ்லிம் நாடுகளில் தனியார் சட்டங்களில் கொண்டுவந்த மாற்றங்களை நாம் இங்கே ஓர் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வோம்....**

இந்த வகையில் நாமெல்லாம் செய்திட வேண்டிய ஆய்வு ஒன்றை இந்தியாவின் மிகப் பெரிய சட்ட மேதை தாகிர் மஹ்மூத் அவர்கள் செய்து முடித்திருக்கின்றார்கள். இந்த தாகிர் மஹ்மூத் அவர்கள் முன்னாள் இந்திய சட்ட ஆணையத்தின் தலைவராக இருந்தவர் (Chairman Law Commission of India)

சட்டமேதை தாஹித் மஹ்மூத் அவர்கள் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகளில் கள ஆய்வு ஒன்றை மேற்கொண்டு ஒரு நூலை தருகின்றார். அதில் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

“முஸ்லிம் நாடுகள், பெரும்பாலானவற்றில் முஸ்லிம் தனியார் சட்டத்தில், எந்தவிதமான மாற்றமும் செய்யப்படவில்லை. ஷரீஅத் சட்டங்களே அங்கு செயலில் இருக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக

சவூதி அரேபியா, ஏமன், பஹ்ரைன், குவைத், கத்தார், அபுதாபி, துபாய், ஆப்கானிஸ்தான், மஹல்லத் தீவு, கினி, செனிகால், சோமாலியா, நைஜீரியா ஆகிய நாடுகளைக் கூறலாம்.

இந்ந நாடுகள் சிலவற்றில், ஹன்பலி சட்ட வியல் அடிப்படையில் சட்டங்கள் செயல் படுத் தப்படுகின்றன.

சிலவற்றில் ஹனபி சட்டவியல் அடிப்படை யில் சட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. சில வற்றில் ஷாஃபி சட்டங்கள் செயலிலிருக்கின்றது. சவூதி அரேபியாவில் ஹன்பலி சட்டவியல் பின்பற்றப்படுகின்றது. மேலும் நாம் மேலே குறிப்பிட்ட நாடுகளிளெல்லாம் ஆழ்ந்து, கூர்ந்து கவனிக்க வேண்டியது அங்கு எப்போது எந்தச் சட்டத்தை இயற்றினாலும் அது திருக்குர்ஆன் நபிவழி, நபிமொழி, ஆகியவற்றின் அடிப்படை யில்தான் இருக்க வேண்டும். இது இந்த முஸ்லிம் நாடுகளில் அரசியல் சாசனத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஏமன் :** ஏமன் நாட்டில் சட்டவியல் செயலில் இருக்கின்றது. ஏமன் நாட்டின் தெற்கு பகுதியில் ஷாஃபி, ஹனஃபி இரு சட்டங்களையும் பின் பற்றி வருகின்றார்கள். அதற்கான உரிமை அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**பஹ்ரைன் :** பஹ்ரைனில் வசிக்கும் மக்களுக்கு மாலிகி, ஷாஃபி, ஷிலா சட்டங்கள் பின்பற்ற உரிமை அளிக்கப்பட்டுள்ளது. குவைத் தில் இஸ்லாத்தின் குடும்பவியல் சட்டங்கள்தாம் செயல்படுகின்றது. அரசு மாலிகி சட்டங்களைப் பின்பற்றுகின்றது.

**ஆப்கானிஸ்தான் :** ஆப்கானிஸ்தானின் அரசியல் சாசனப்படி அரசின் மதம் இஸ்லாமாக இருக்கும். எல்லா மத விவகாரங்களும் ஹனஃபி சட்டங்களின் படி நடத்தப்படும். அங்கு இன்ற ளவும் இருந்து வரும் சட்டங்களில் எந்தத் திருத்தமும் செய்யப்பட்டதில்லை.

ஆக முஸ்லிம் நாடுகளில் குடும்பவியல் சட்டங்களில் எந்த நிலையிலும் திருக்குர்ஆன், நபிமொழி ஆகியவற்றிற்கு எதிராகப் போன தில்லை. இந்த இரண்டு அடிப்படை ஆதாரங் களைப் பின்பற்றியே அனைத்துச் சட்டங்களும் வகுக்கப்படுகின்றன.

## துருக்கி, அல்போனியா ஆகிய நாடு களில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள்

இஸ்லாத்தின் எதிரிகள் இந்த நாடுகளில் நடந்த சட்ட திருத்தங்களை அடிக்கடி மேற்கோள் காட்டுகின்றார்கள். உலக அரங்கில் முஸ்லிம் களுக்கென ஒரே தலைமை இருந்தது அதுதான் கிலாபத் : இந்த கிலாபத் அதன் இறுதி நாள்களில் துருக்கியை மையமாகக் கொண்டு இயங்கிற்று. இதைத்தான் உதுமானிய கிலாபத் என வரலாற்றில் அறிகின்றோம்.

இந்த உதுமானிய கிலாபத் ஐ எப்படியாவது வீழ்த்தி இஸ்லாம் உலக அரங்கில் பெற்றிருந்த கீர்த்தியைக் குலைத்திட வேண்டும் என மேலை நாடுகள், குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் சதி செய்தன. முதல் உலகப்போரை 1914–1918 ஐ இதற்காகப் பயன்படுத்திக்கொண்டன. இந்தப் பின்னணியில் இந்த மேலை நாட்டுச் சதிகாரர் களின் கைப்பாவையாக செயல்பட்டவர் கமால் அத்தாதுர்க்

இவர் துருக்கியின் அரியணையில் அமர்ந்த வுடன் பெப்ருவரி 24, 1924 ஆம் ஆண்டு கிலாபத் ஒழிக்கப்பட்டுவிட்டது என அறிவித்தார். அதாவது முஸ்லிம் உலகத்திற்கு தீராத துரோ கத்தைச் செய்தார். முஸ்லிம் உலகை தலைமை இல்லாமலாக்கினார்? அத்தோடுநில்லாமல் துருக்கியில், இனி இஸ்லாம் எந்த விதத்திலும் தலை எடுக்காது என்றார். அன்றளவும் துருக்கி யில் புழக்கத்திலிருந்த அரபி எழுத்துக்களை அகற்றினார். புர்க்காவை தடுத்து மேலை நாட்டு ஆடைகளை மக்கள் மீது திணித்தார். இஸ்லாமிய முறையில் ஆடை அணிந்து வந்தவர் களை நடு வீதியில் வைத்து ஆடையை கிழித்து – சில நேரங்களில் அகற்றி, அவமானப்படுத்தி னார். இதற்கு காவல் துறையையும் அரசு இயந் திரத்தையும் லாவகமாகப் பயன்படுத்தினார்.

அரபு மொழியில் மட்டுமே உலகெங்கும் தொழுகை அழைப்பு என்ற பாங்கு சொல்லப்படு கின்றது. ஆனால் துருக்கியில் துருக்கி மொழியில் தான் பாங்கு செல்லிட வேண்டும் என்றொரு விதியைக் கொண்டுவந்தார்.

இப்படியெல்லாம் இஸ்லாத்திற்கெதிராக நடந்ததால் அவரை மேலைநாடுகள் "துருக்கியின் தந்தை" என அழைத்தார்கள்.

இதைப் போன்றதொரு நிலையே அல்பேனி யாவில் நடந்தது. இந்த இரண்டு முஸ்லிம் நாடு களிலும் ஷரீஅத் சட்டங்களில் மாற்றங்கள் செய்தார்கள் என்பது பொய் முற்றாக அழித்து, மேலை நாட்டுச் சட்டங்களையும், குறிப்பாக அவர்களின் கலாச்சாரங்களையும் திணித்தார்கள். இதற்கு மேலை நாடுகள் முற்றாகத் துணை நின்றன.

ஆனால் வெகு விரைவிலேயே முஸ்லிம்கள் போராடி இந்த நிலையை மாற்றினார்கள். இஸ்லாமிய நாகரீகத்தையும், பண்பாட்டையும் கொண்டுவந்தார்கள்.

ஆனால் முஸ்லிம்களின் ஒட்டுமொத்தமான தலைமையாகிய கிலாபத் ஐ மீண்டும் கொண்டு வந்திட முயற்சிகளை மேலைநாடுகள் தொடர் சதிகளின் மூலம் வெற்றிபெற்றிடாமல் தடுத்து வந்தன.

இப்படி இஸ்லாத்தின் எதிரியின் ஆட்சியில் சிக்கிக்கொண்ட துருக்கியை இங்கே சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு எடுத்துக் காட்டாக காட்டுவது என்ன நியாயம்?

துருக்கியில் அன்று கொண்டுவரப்பட்ட தலாக் சட்டம் – தடைகள் துருக்கியிலிருந்து கடைசி இஸ்லாமிய அடையாளங்களையும் அகற்றிட வேண்டும் எனப் பாடுபட்டார் கமால் அத்தாதுர்க்.

தலாக்–ஐ எல்லா விதத்திலும் தடை செய்ய வேண்டும். அதுவே பெண்களின் விடுதலை, சம உரிமை என கமால் அத்தாதுர்க்கிடம் பாடம் சொல்லித் தந்தார்கள். மேலை நாட்டு எஜமானர்கள்.

இதனை அப்பிப் பிடித்துக்கொண்டு அவர் துருக்கியில் சில தலாக் சட்டங்களைக் கொண்டு வந்திட முயற்சிகளை மேற்கொண்டார். அதில் ஆண்கள் பெண்களைத் தலாக் செய்திட இயலாது என்றும், பெண்கள் தாம் மண முறிவைக் கோர வேண்டும் என்றும், விதி வகுத்து வைத்திருந் தார்கள். இந்த சட்டத்தைப் பிரகடனப்படுத்து வதற்கு முன்பு அவருடைய சொந்த வாழ்க்கையில் ஒரு சிக்கல், இதனால் அவர் அந்தச் சட்டத்தைப் பிரகடனப்படுத்திட வில்லை.

அவருடைய மனைவி லத்தீஃபா ஒரு பெண்ணியவாதியாக மாறி இருந்தார். மேலை

நாட்டுப் பாணியில் மாதர் சங்கத்தின் தலைவி. இதைப் பயன்படுத்தி தன் விருப்பம்போல் தனக்குப் பிடித்த ஆண்களோடு உல்லாசமாகச் சுற்றினார். கமால் அத்தாதுர்க் ஐ முற்றாக புறக்கணித்தார். ஆனால் கமால் அத்தாதுர்க்கின் மனைவி என பல அரசு சலுகைகளை அனுபவித் தார்கள். இதனால் அவர் மனைவி லத்தீஃபாவை விவாகரத்துச் செய்ய விரும்பினார். முத்தலாக்–ஐயும் ஒருநொடியில் சொல்லிட விரும்பினார். இதனால் தான் எழுதி வைத்திருந்த தலாக் சட்டத்தை பிரகடனப்படுத்தாமல் தள்ளிப் போட்டார்.

இந்த கமால் அத்தாதுர்க் கொண்டுவந்த சீர்திருத்தம் என்ற தகிடு தத்தங்களை இங்கேயும் “பிரகடனப்படுத்த வேண்டும் என்றும், அதை இங்குள்ள முஸ்லிம்கள் பின்பற்றிட வேண்டும் என்பது முதிர்ந்த முட்டாள்தனம்.

**பாகிஸ்தான் :** பாகிஸ்தானில் தலாக்–களை மண முறிவுகளை ஓர் – தீர்ப்பாயம் வழியாகத் தான் பெற்றிட வேண்டும் என அதன் இராணுவ ஆட்சியாளர்கள் ஓர் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதில் கடைப்பிடிக்க வேண்டிய சாங்கியங்கள் மேலை நாட்டு நீதி மன்றங்களில் கடைபிடிக்க வேண்டிய சாங்கியங்களை ஒத்த தாக இருந்தது. இதனை அங்குள்ள உலமாக்கள், போராடி திருத்திவிட்டனர்.

ஆனால் அங்கு வாழும் இந்துக்கள் – சீக்கிய வர்களின் சட்டங்களில் யாரும் எந்த ஆட்சியாள ரும் தலையிடவில்லை. பலமுறை இராணுவ ஆட்சியின் கீழும் பலமுறை சர்வாதிகாரத்தின் கீழும் இருந்த நாட்டை இந்தியா போன்ற ஜன நாயக நாடு பின்பற்றிட வேண்டுமா?

ஆகவே எந்த விதத்திலும் பாகிஸ்தான் நமக்கு முன்மாதிரியல்ல? என்பதை உணர்ந்து இந்தியாவில் வாழும் சிறுபான்மையினரை சீண்டாமல் இருப்பது சிறந்தது. ●

# அரசியல் சாசன சபை பிரிவு 44ஐ இயற்றியபோது முஸ்லிம்கள் தொடுத்த போர்

வழிகாட்டும் கொள்கைகள் ( பிரிவு – 51 ) அரசியல் சாசன சபையில் கொண்டு வரப் பட்டபோது பிரிவு 44 பிற்றை நாட்களில் முஸ்லிம்களின் தனியார் சட்டத்தைக் கை வைத்திடும் என்பது திண்ணம். இந்த ஆபத்தை அன்றைய முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிந்தே வைத்திருந்தனர். அதனால் அரசியல் சாசன சபையிலே அதையே எதிர்த்தார்கள். பின்னர் நாடாளு மன்றத்திலும் எதிர்த்தார்கள். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் முஹம்மத் இஸ்மாயில் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அதில் ....

Provided that any group, section or Community of people shall not he obliged to give up its own personal law in case it has such a law. (Directive priciples in the indian constitution by K.K. Mer. Kanden as quoted in shams Peer zada. in his muslim personal law)

(இந்த பிரிவு 44) “மக்களிலுள்ள எந்தக் குழுவோ பிரிவோ வகுப்போ தமக்கென்று ஒரு தனியார் சட்டத்தை வைத்திருந்தால் அவர்கள் அந்த சட்டத்தை கைவிட வேண்டும் என கட்டா யப்படுத்த மாட்டார்கள்” என்ற நிபந்தனையோடு இந்த பிரிவு 44–ஐ வழிகாட்டும் கொள்கையோடு இணைக்கலாம்.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் கொண்டுவந்தது முதல் திருத்த மசோதா என்றானது.

இரண்டாவது திருத்த மசோதா ஒன்றை ஜனாப். நசுருத்தீன் அஹ்மத் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதில் இப்படி குறிப்பிட்டுள்ளார்கள்.

Provided that the personal law of Any community which has been guranteed by the state shall not be changed except with the previous approval of the community ascertained in such manner at the union legistature may determine by law.

**(IBID box 193)**

அரசு உறுதி அளித்த எந்த சமுதாயத்தின் தனியார் சட்டமும், அந்த சமுதாயத்தில் முன் ஒப்புதலின்றி மாற்றப்படமாட்டாது. இந்த



முன் ஒப்புதலை நாடாளுமன்றம் சட்டத்தால் நிர்ணயிக்கும் முறைப்படிப் பெற்றுக் கொள்ளலாம். (அதே ஆதாரம்)

இந்த தனிநபர் பிரேராணையை நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்துப் பேசிடும் போது இந்த அரசியல் சாசன சட்டப்பிரிவு 44, மத சுதந்திரம் (பிரிவு 25) என்ற அடிப்படை உரிமைக்கு நேர் எதிரானது. இது மத சுதந்திரத்தை முற்றாகப் பறித்துவிடக்கூடும் என்று பேசினார்.

அடுத்து மூன்றாவது தனி மனித பிரேரணை ஒன்றை கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதில் அரசியல் சாசன சட்டம் வழிகாட்டும் கொள்கை 44–ல் பின்வரும் நிபந்தனை இணைக்கப்பட வேண்டும் என முறையிட்டார்கள். “Provided that nothing in this article shall affect the personal law of the citizen” அதாவது அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 44–ஐ எப்படிச் செயல்படுத்துவோம் என்றால் அது குடிமக்களின் தனியார் சட்டத் தைப் பாதிக்காத அளவிலேயே செயல்படுத்து வோம்” இதுபோன்றதொரு பிரேரணையை ஜனாப். பி. பேக்கர் சாஹிப் அவர்கள் கொண்டு வந்தார்கள்.

அனைத்தும் நிராகரிக்கப்பட்டன. ஆனால் திரும்பத் திரும்ப முஸ்லிம்கள் அல்லது அதுபோன்ற சிறுபான்மை சமுதாயத்தவர்கள் மீது பொது சிவில் சட்டம் திணிக்கப்படமாட்டாது என்று மட்டும் வாக்களிக்கப்பட்டது.

அந்த அவையிலே பேசிய டாக்டர் அம்பேத் கர் அவர்கள் “பொதுசிவில் சட்டம் முஸ்லிம்கள் மேல் கட்டாயமாகத் திணிக்கப்பட மாட்டாது என உறுதி அளித்தார்”. அத்தோடு “இனி பொது சிவில் சட்டத்தை நாடாளுமன்றம் இயற்றும், மக்களில் யார், யார் அச்சட்டத்தை மேற்கொள்ள சம்மதிக்கின்றார்களோ அவர்களை மட்டுமே அது உட்படுத்தும்”.

இந்த வாக்குறுதியைப் பிடித்துக்கொண்டு கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் இன்னொரு சட்டத் திருத்தத்தை கொண்டு வந்திட கோரினார்கள். அதில்

ஒருவர் தன்னுடைய அல்லது தான் மனமாற ஏற்றுக்கொண்ட வகுப்பினுடைய தனியார் சட்டத்தை பின்பற்றுவதற்கு முழு உரிமையப் பெற்றவராவார்.

ஆனால் இதனை மறுத்தார்கள்.

(Constituent assembly debates, Vol. VII, P. 721 as reffered by shams peerlada in his book. muslim personal law.)

இன்றைய பாசிஸ்ட்டுகள், வளர்ச்சி என்ற பொய்யைச் சொல்லி ஆட்சியைப் பிடித்தார்கள். அது பாசிஸ்ட்டுகளின் வளர்ச்சி பாசிசத்தின் வளர்ச்சி என்பது இப்போதுதான் மக்களுக்குப் புரிகின்றது. ●



# எதிலும் அழகிய இஸ்லாம்

இஸ்லாம் தவிர மற்ற மதங்களுக்கென தனிச் சட்டம் ஆரம்ப காலங்களில் இருந்ததாக அறியப்படவில்லை. சட்டங்கள் உருவாக்கப்பட்டு காலத்திற்குத தக்கவாறு மாற்றி அமைக்கப்படுகின்றன. ஒரு மதத்தவர் அச்சட்டத்தை பின்பற்ற வேண்டியது கட்டாயம் என சொல்லப்படவில்லை. ஆனால் இஸ்லாமிய ஷரீஅத் (சட்டம்) 1430 வருடங்களுக்கு முன்பு அருளப்பட்டு இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது. முஸ்லிம்கள் ஷரீஅத்தை பின்பற்றிதான் ஆக வேண்டும் என்பது கட்டாயம்.

➢ 1400 ஆண்டுகளுக்கு முன்பே பெண்களுக்கு சொத்துரிமை, கணவனை விவாகரத்து செய்கின்ற உரிமை, மணமகனைத் தேர்வு செய்கின்ற உரிமை, சாட்சி சொல்கின்ற உரிமை உள்ளிட்ட பல உரிமைகளை வழங்கிய ஒரே மதம் இஸ்லாம் மட்டுமே.

➢ இஸ்லாத்தில் திருமணம் என்பது ஒப்பந்ததமாக கருதப்படுகிறது. வேறு வழியில்லாமல் ஆகிவிட்ட நிலையில்தான் கணவனும், மனைவியும் பிரியும் பாதையை தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது இஸ்லாமிய வழிமுறையாகும்.

➢ விவாகரத்து முறை: கணவன், மனைவி பிரிவு குறித்து திருக்குர்ஆனில் இறைவன்,

"நீங்கள் ஒருவர் மற்றவருடன் இரண்டறக் கலந்துவிட்ட நிலையில் எப்படி அதை பிடுங்கி கொள்ள முடியும்?" (4.21) என்று இறைவனே கேட்க கூடிய அளவிற்கு அதன் முக்கியதுவத்தை திருக்குர்ஆன் உணர்த்துகிறது.

➢ மனைவி விஷயத்தில் பிணக்கு (பிரச்னை) ஏற்படும் என்று அஞ்சினால் அவர்களுக்கு அறிவுரை கூறுங்கள்! படுக்கையில் அவர்களிடம் விளக்குங்கள்! அவர்களைக் கண்டியுங்கள், அவர்கள் உங்களுக்கு கட்டுப்பட்டு விட்டால் அவருக்கு எதிராக வேறு வழிகளைத் தேடாதீர்கள்' என்று திருக்குர்ஆன் கணவனுக்கு அறிவுறுத்துகிறது.

➢ பிளவு ஏற்படும் எனத் தெரிந்தால், மேற்கூறிய நடவடிக்கைகளால் பிரச்னை கைமீறி, பிளவு வருமென்று அஞ்சினால் கணவன் குடும்பத்திலிருந்து ஒருவரையும், மனைவி குடும்பத்திலிருந்து ஒருவரையும் நடுவர்களாக கொண்டு நல்லிணக்கத்தை ஏற்படுத்துங்கள் என்று கணவன், மனைவி இருவரின் குடும்பத்தார்களுக்கும், மத்தியஸ்தர்களுக்கும் திருக்குர்ஆன் கட்டளை இடுகிறது.

➢ விவாகரத்து மிக சிறந்த முறை (அஹ்சன்): மேற்கண்ட முயற்சிகளுக்கு பிறகும் வாழ முடியாத நிலை ஏற்பட்டால், இரண்டு சாட்சிகள் முன்னிலையில் கணவன் மனைவியிடம் "உன்னை தலாக் (விவாகரத்து) செய்கிறேன்" என்று கூற வேண்டும்.

இதனை ஒரு முறை கூறினாலே போதும்.

இத்தலாக் சொல்லும்பொழுது கண்டிப்பாக மனைவி மாதவிடாய் இல்லாத காலத்தில் (சுத்தமான காலத்தில்) இருத்தல் வேண்டும்.

➢ தலாக் சொன்னதிலிருந்து மூன்று மாதவிடாய் காலம் (சுமார் மூன்றரை மாதம்) மனைவி கணவன் வீட்டிலேயே இத்தா (காத்திருப்பு காலம்) இருக்க வேண்டும். இக்காலத்தில் இருவரும் தாம்பத்திய உறவு கொண்டால், கணவன் விரும்பினால் இந்த மூன்றரை மாதத்திற்குள் மனைவியை மீட்டு கொள்ளலாம்.

➢ இந்த இத்தா காலத்தில் மனைவி மறு மணம் செய்யக் கூடாது. இந்த காத்திருப்பு காலத்தில் (இத்தா) கணவன் மனைவியை மீட்காமலும் அல்லது தாம்பத்திய உறவு கொள்ளாமலும் இருந்தால் தலாக் (விவா கரத்து) நிறைவேறிவிட்டதாகக் கருதப் படுகிறது.

➢ இதன்பின் கணவன் மீண்டும் அப்பெண்ணை மனைவியாக கொள்ள விரும்பினால், மஹர் கொடுத்து மீண்டும் திருமணம் செய்து கொள்ள வேண்டும். அதற்கு மனைவியின் சமம்மதமும் வேண்டும். ஒருவேளை அந்த பெண் வேறொருவரை திருமணம் செய்து கொள்ள விரும்பினால் அது அவளுடைய விருப்பம்.

➢ ஒருகால் இந்த இத்தா காலத்தில் விவாகரத்தை முறித்து மனைவியைக் கணவன் சேர்த்து கொண்டபின், மீண்டும் அவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டு பிளவு ஏற்படுமேயானால் இரண்டாவது முறையாக அவன் மேற்கண்டவாறு தலைாக் செய்து இத்தா (காத்திருப்பு காலம்) இருக்க வைக்க லாம். மேற்கண்ட சட்டதிட்டங்கள் தான் இரண்டாவது தலாக்கிற்கும்.

➢ ஒருகால் கணவன் இரண்டாவது இத்தா காலத்திலும் விவாகரத்தை முறித்து மனைவியை சேர்த்து கொண்ட பின்னர் அவர்களுக்குள் மீண்டும் பிளவு ஏற்படுமே யானால் மூன்றாவது முறையாக அவன் தலாக் செய்து இத்தா (காத்திருப்பு காலம்) இருக்க வைக்கலாம்.

➢ மேற்கண்ட சட்டத்திட்டங்கள் தான் மூன்றாவது தலாக்கிற்கும் (விவாகரத்து). ஆனால் மூன்றாவது முறை தலாக் சொன்ன பிறகு அப்பெண்ணை கணவனால் இத்தா காலத்தில் மீட்டுக் கொள்ள இயலாது. அவ்வுரிமையை அவன் இழக்கிறான். அவள் வேறொருவருக்கு திருமணம் ஆகி விவா கரத்து பெற்றிருந்தால் தவிர, மீண்டும் அவளை திருமணம் செய்து கொள்ளவும் முடியாது.

➢ மேலும், “மனைவியாக வாழ்ந்த காலத்தில் நீங்கள் அவளுக்கு கொடுத்த வற்றில் எதையும் திரும்ப பெறக் கூடாது” என்று திருக்குர்ஆன் வலியுறுத்துகிறது. இதுதான் திருக்குர்ஆன் கூறும் விவாகரத்து முறையாகும்.

➢ தலாக்குல் முபாரா (பரஸ்பர ஒப்புதல்) கணவன், மனைவி இருவரும் தமக்குள் சேர்ந்து வாழ்வது ஒத்து வராது என கருதி இருவரும் சேர்ந்து பிரிந்து செல்வதாக முடிவு எடுத்தால் ஒத்து வராது என கருதி இருவரும் சேர்ந்து பிரிந்து செல்வதாக முடிவு எடுத்தால் அழகிய முறையில் பிரிந்து செல்லலாம்.

➢ தலாக்குல் குலா (பெண் விவாகரத்து கேட்டு பெறுதல்) மனைவி தலாக் கேட்டு பெறும் உரிமையை இஸ்லாம் வழங்கி இருக்கிறது. அதன்படி ஒரு பெண் தன் கண வனுடன் வாழ பிடிக்கவில்லை என்றாலோ அல்லது கணவன் முறைப்படி நடந்து கொள்ளவில்லை என்பதாலோ அவள் பிரிந்து செல்வதென முடிவு எடுத்தல் குலா முறையில் விவாகரத்து கோரலாம். ஜமாஅத் எனும் நிர்வாகத்தை அல்லது காஜியை அணுகி குலா மூலம் தன் கணவரிடம் தலாக் பெற்றுத் தர கோரலாம். அவர்கள் கணவனிடம் பேசி விவாகரத்து பெற்றுக் கொடுக்கலாம்.

➢ கணவன் விவாகரத்து தர மறுத்தால் அந்த நிர்வாகமே திருமண பந்தத்தை முறித்து விவாகரத்தை உறுதி செய்வதாக அறிவிக்கலாம். இதற்கும் இத்தா என்கிற காத்திருப்பு காலம் உண்டு. மனைவி கணவனி டம் பெற்ற மஹரை திருமண பணத்தை திருப்பி கொடுக்க கடமைப்பட்டவளா கிறாள்.

➢ ஆணுக்கு மட்டும் தலாக் கொடுக்கும் அதிகாரமும், பெண்ணுக்குகு தலாக் கேட்கும் உரிமையும் எப்படி சமமாகும்? இது அநீதி அல்லவா? பெண்களுக்கு மட்டும்

குறைந்த உரிமையை கொடுத்து ஆண் அடிமைத்தனத்தை உறுதிசெய்வதுபோல அல்லவா இருக்கிறது என்று சிலர் கேட்கக் கூடும்.

➢ உலகம் இன்றுவரை ஆண் ஆதிக்கத் திலேயே இருந்து வருகிறது. ஆண் படைப் பால் பலசாலியாக உள்ளான். அவனது ஆதிக்கத்திடமிருந்து ஒரு பெண் (மனைவி) அவனை விவாகரத்து கூறி தள்ளுவது மிக மிக கடினமாகும். தன்னை, தன் மனைவி வெறுக்கிறாளே என்ற கோபத்தில் அவனுக்கு எதையும் செய்ய தோன்றும்.

➢ இப்படிப்பட்ட சூழ்நிலையில் மனை விக்கு மிக பெரிய ஆபத்து ஏற்பட வாய்ப்புகள் அதிகம். இதையெல்லாம் கருத்தில் கொண்டே இஸ்லாம் பெண்ணுக்கு மிக பெரிய சமுதாய பங்களிப்புகளோடு கூடிய பாதுகாப்புடன் தலாக் கோரி பெறும் உரிமையை வழங்கி இருக்கிறது.

➢ ஜமாஅத் மூலம் விவாகரத்து செயல்படுத்தப்படுவதால் ஜமாஅத்தின் பலமும் மனைவியோடு சேர்ந்து கெள்கிறது.

➢ கணவன் விவாகரத்து செய்ய விரும்பினால் நடுவர்களை அழைத்து பிறகு தலாக் மூன்று மாதம் காத்திருக்க வேண்டும். ஆனால் பெண்ணுக்கு கேட்ட மாத்திரத்தில் விவாகரத்து கிடைக்கும். இதனால் ஆணைவிட பெண்ணிற்கு கூடுதலான உரிமை உண்டு என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

➢ ஃபஸ்ஹ் (திருமண ஒப்பந்தத்தை முறித்தல் அல்லது ரத்து செய்தல்: கணவன் காணாமல் போனாலோ அல்லது சித்த பிரமை ஏற்பட்டாலோ அல்லது ஒழுங்கீன குற்றச் செயல்களில் ஈடுபட்டாலோ,





அதுபோல் மனைவி ஒழுக்கம் தவறினாலோ அது குறித்து ஜமாஅத் என்கிற நிர்வகத்திடம் தெரிவித்து திருமண ஒப்பந்தத்தை ரத்து செய்வது அல்லது பிரித்து கொள்வது ஃபஸ்ஹ் முறையாகும்.

➢ உதாரணமாக, கணவன் காணாமல் போய் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக எங்கு இருக்கிறார் என்று அறிய முடிய வில்லையென்றால், மனைவி இது குறித்து ஜமாஅத்திடம் தெரிவித்து திருமண பந்தத்தை ரத்து செய்ய கோரலாம். ஜமாஅத் நிர்வாகிகள் திருமண ஒப்பந்தத்தை ரத்து செய்து விடலாம்.

➢ அதுபோல் ஒரு பெண் நடத்தை தவறி னால் அதை கணவன் அறியும் பட்சத்தில் அவன் நான்கு சாட்சிகளைக் கொண்டு நிரூபிக்க வேண்டும். சாட்சிகள் இல்லை யென்றால் இருவரும் அல்லாஹ்வின் பெயரால் நான்கு முறை சத்தியம் செய்து “இதனால் ஏற்படும் கேடு என்னையே சேரும்” என்று கூற வேண்டும். அதன் பிறகு நிர்வாகம் இருவரின் திருமண ஒப்பந்தத் தையும் ரத்து செய்து பிரித்து விடலாம்.

➢ தலாக்குல் பித்அத் (நூதன தலாக்): தலாக் தலாக் தலாக் அல்லது முத்தலாக். இந்த முறை முஹம்மது நபி (ஸல்) அவர் களின் காலத்திலோ அல்லது அவர்கள் பிறகு வந்த முதல் கலீபா கலத்திலோ இல்லை. பிற்காலத்தில் வந்த விவாகரத்து முறை. ஆதலால் இது நூதன தலாக் என்று பெயர் பெற்றுள்ளது.

➢ இந்த முறையின் படி மூன்று முறை தலாக் கூறிவிட்டாலே விவாகரத்து நிறை வேறியதாக கூறுவர். இப்படி ஒரே நேரத்தில்

மூன்று முறை கூறினாலும், அது ஒரே தலாக் ஆகத்தான் கருதப்படும் என சொல்லும் அறிஞர்களும் உள்ளனர். எல்லா திருமண முறிவிற்கும் இம்முறையை பின்பற்றுவது இல்லை.

➢ தனது மனைவி சோரம் போவதைக் கண்ணால் கண்டுவிட்ட எந்த கணவனும் மனைவியைத் திரும்ப சேர்த்துக்கொள்ள சம்மதிக்க மாட்டான். இதுபோன்ற அசாதாரண சூழ்நிலையில் மட்டும் இதுபோன்ற தலாக் பயன்படுத்தப்படுகிறது.

➢ சிலர் தீர்க்க கூடிய வாய்ப்புள்ள பிரச்சனைகளுக்கும் இந்த முத்தலாக் முறையை தவறாகப் பயன்படுத்துவது சரியல்ல. அது பாவமும் ஆகும். இதை பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்கள் கண்டிக்கிறார்கள். ஒரு சட்டத்தை ஒருவர் தவறாக பயன்படுத்தினால் அவர் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர சட்டத்தையே நீக்குவது அல்லது குறை கூறுவது எப்படி முறையாகும்?

➢ ஷரீஅத்தை, உலகில் எவராலும் குற்றம் காண முடியாது என்பது உலக முஸ்லிம்களின் கருத்து மாத்திரமல்ல; உளமார்ந்த நம்பிக்கையும்கூட.

➢ முத்தலாக்கை முன்னிறுத்தி இந்தியாவில் பொது சிவில் சட்டம் கொண்டு வருவோம் என சூளுரைப்பது வேடிக்கையாக இருக்கின்றது.

➢ பொது குளத்தில் எல்லோரும் குளிக்க அனுமதி இல்லாதபோது, சாதிக்கொரு மயானம் இருக்கின்றபோது, சாதி பெயரை சொல்லி மனிதர்களைக் கொல்லும் நிலை இருக்கும்பொழுது சட்டத்தில் மட்டும் சமத்துவம் எங்கிருந்து வருகிறது என்பது தெரியவில்லை. ●

கட்டுரையாளர்
வழக்குரைஞர் எம்.ஜி.நிஜாமுதீன்
முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்
நன்றி: தினமணி

இப்போது பரபரப்பான
விற்பனையில்




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

**கொடிய வட்டியில் இருந்து மீள..!**

தாங்கள் வங்கியில் அடகு வைத்திருக்கும் நகைகளை ஏலத்திற்கு செல்லாமல் மீட்டு நல்ல விலைக்கு விற்று தரப்படும்.

தொடர்புக்கு
**90955 40678**

# தாரூல் இல்யாஸ் ஃபவுன்டேஷன் டிரஸ்ட் வழங்கிய பொது சிவில் சட்டம் - கருத்து பரிமாற்றம் நிகழ்ச்சி

கடந்த 19.10.2016 அன்று தாரூல் இல்யாஸ் ஃபவுன்டேஷன் டிரஸ்ட் பொருளாளர் இல்யாஸ் ரியாஜி அவர்களின் நிகழ்ச்சி ஏற்பாட்டில் பொது சிவில் சட்டம் குறித்த நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப் பட்டது. இது மந்தைவெளி ஈத்கா பள்ளி யில் நடத்தப்பட்டது. அறிவார்ந்த மக்கள் பலர் இதில் கலந்து கொண்டனர். குறிப்பாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் விவாதங்களில் அடிக்கடி பங்கேற்கும் ஹாஜா கன, அப்துல் சமத், B.N. சிக்கந்தர், ஆளூர் ஷாநவாஸ் போன்றோர் இந் நிகழ்ச்சியில் பங்கேற்றது சிறப்பு.

நிகழ்ச்சியினை மௌலான கான் பாகவி அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள். பல வழக்கறிஞர்களும் இதில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் அம்பேத்கர் சட்டக் கல்லூரி பேராசிரியர் திரு முஜாஹித் இஸ்லாம் அவர்கள் இந்திய சட்ட ஆணையத்தால் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ள பொது சிவில் சட்டத்தின் ஆபத்துகள் குறித்து சட்ட ரீதியாகக் விளக்கினார். குறிப்பாக இந்திய சட்ட ஆணையத்தால் முன் வைக்கப்பட்டுள்ள 16 கேள்விகள், அதன் தன்மைகள், இந்திய சட்ட ஆணையத்தின் தலைவராக உள்ள முன்னாள் நீதிபதி டாக்டர் பி.எஸ்சவ்ஹான் அவர்களின் இந்துத்துவா பின்னணி போன்ற வற்றை தெள்ளத் தெளிவாக விளக்கினார்.

அவற்றின் கருத்து சுரக்கம் பின்வருமாறு:

சட்ட ஆணையத்தின் தலைவர்
சவ்ஹான் யார்?

ஜஸ்டிஸ் பல்பீர் சிங் சவ்ஹான் அவர்கள் 10 மார்ச் 2016ல் இந்திய சட்ட ஆணை யத்தின் தலைவராக பதவியேற்றார்.

இவர் பட்டம் பெற்றது, பணியாற்றியது, அளித்த தீர்ப்புகள் போன்றவற்றை உற்று நோக்கினால் இவரது பின்புலம் என்ன என்பது தெளிவாகும்.

இவர் 1974இல் பெனாரஸ் ஹிந்து பல் கலைக்கழகத்தில் சட்டப்படிப்பு படித்தார். இந்த பல்கலைக்கழகத்தை தோற்றுவித்தவர் மதன் மோஹன் மாளவியா. மதன் மோகன் கங்கா மஹாசபா என்ற இயக்கத்தை தோற்றுவித்தவர்.

1909 மற்றும் 1918-இல் இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக இருந்தவர். பின்னர் 1934இல் காங்கிரசை துறந்து தன்னுடைய உண்மையான இயக்கமான இந்து மகா சபையின் உறுப்பினரானார். பின்னர் கயாவில் 1922ல் நடந்த இந்து மகாசபை கூட்டத்திற்கும் இவரே தலைவர். காங்கிரசில் இருந்து கொண்டே இந்து மகாசபையில் இவர் பங்கேற்றது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இன்றைய இந்துத்வா வாதிகளின் முன்னோடித்தான் மாளவியா.

இப்படிப்பட்டவர் இந்துத்துவா சிந்தனைகளை வளர்க்கும் விதமாக உருவாக்கியது தான் பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகம். 1916இல் உருவாக்கப் பட்டது இந்தப் பல்கலைக்கழகம் 20,000 பேர் தங்கி படிக்கும் வசதி கொண்ட இந்த பல்கலைக்கழகம் இந்துத்துவா சிந்தனைகளை படிக்கும் மாணவர்களி டையே விதைக்கும். அப்படிப்பட்ட சூழ் நிலையில் படித்து வந்தவர் தான் பல்பீர் சிங் சவ்ஹான் அவர்கள்.

1) இவர் 1995இல் அலஹாபாத் உயர் நீதிமன்ற நீதிபதியாகிறார்.

2) பின்னர் 1997இல் ராஜஸ்தானுக்கு பணியிட மாற்றம் செய்யப்படுகிறார்.

3) தன்னுடைய செல்வாக்கை பயன் படுத்தி மீண்டும் அலஹாபாத் உயர் நீதி மன்றத்திற்கு 2003-ல் பணியிட மாற்றம் பெறுகிறார்.

4) 2008இல் ஒரிஸ்ஸா நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கப்படுகிறார்.

5) 2009 முதல் 2014 வரை உச்ச நீதி மன்றத்தின் நீதிபதியாக பணியாற்றுகிறார்.

தற்போது காவேரி ஆற்று நீர் பங்கீடு பிரச்சனையின் தீர்ப்பாணையத்தின் தலைவராகவும் இந்திய சட்ட ஆணையத்தின் தலைவராகவும் பதவி வகிக்கிறார்.

இது தான் பி.எஸ்.சவுஹானின் பின்புலம். இவர் வழங்கிய பல தீர்ப்புகள் கடும் விமர் சனத்திற்கு உள்ளானவை. அவற்றில் சிலவற்றை காண்போம்.

1. தன்னுடைய உறவினர்களுக்கு நிலங்களை ஒதுக்கீடு செய்த ஊழலில் ஈடு பட்டதாக கூறப்படுகிறது, டாடா கன்சல் டன்சி செர்வீஸஸ்/நொய்டி அதிகாரிகள்/ உத்தரபிரதேஷ் டெவலப்மெண்ட சிஸ்டம்ஸ் கார்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திறகு அதன் விருப்பத்திற்கு சாதகமாக நடந்து கொண்டதாக கூறப்படுகிறது. தானே முன் வந்து இவர் சி.பி.ஐ விசாரணைக்கு உத்தர விட்டார். பின்னர் அந்த வழக்கை அவரே விசாரித்தார்.

2) திருமணத்திற்கு முன் பெண்கள் உறவு வைத்துக் கொள்வது குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்ட குஷ்பு என்கிற நடிகை வழக்கில் வழங்கிய தீர்ப்பு.

3) சொஹ்ராபுதீன் போலி என்கவுண்டர் வழக்கில் நேரில் பார்த்த சாட்சியான துல்சிராம் பிரஜாபதி என்பவரை கொலை செய்த வழக்கில் சி.பி.ஐக்கு எதிராக தீர்ப்பு கூறி முதல் குற்றவாளி என குற்றம் சாட்டப்பட்ட அமீத் ஷா என்கிற அமீத்பாத் அனில் சந்திர ஷா என்பவரை விடுதலை செய்தது.

4) கிரஹாம் ஸ்டெய்ன் என்ற பாதிரி யாரை இந்துத்வ பயங்கரவாத இயக்கமான பஜ்ரங்கள் இயக்கத்தை சேர்ந்த தாராசிங் என்பவன் அவருடைய குழந்தைகளுடன் வைத்து அடித்து ஜீப்பில் வைத்து எரித்து கொன்றான். அவ்வழக்கில் "ஒரு மதத்தை விட இன்னொரு மதம் சிறந்து என்று கூறி மதப்பிரச்சாரம் செய்வதை நியாயப்படுத்த முடியாது என கூறிய இவரின் வார்த்தை களும் அதைத் தொடர்ந்து குற்றவாளி களின் மரண தண்டனை ரத்து செய்யப் பட்டதை உறுதி செய்ததும் கடும் விமர் சனத்திற்குள்ளானது."

5) தேர்தலுக்குமுன் அர்விந்த் கெஜ்ரிவால் அவர்கள் இஸ்லாமிய அறிஞர்களை சந்தித்து பேசியதை மதரீதியாக விமர்சித்த தஸ்லிமா நஸ்ரினுக்கு எதிரான உத்தரபிரதேச அரசின் வழக்கு.

இவையெல்லாம் பி.எஸ்.சவ்ஹானி உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும வழக்குகள், இதுதான் இவரின் பின்புலம். இத்தகைய பின்புலம் கொண்டவர்தான் இப்போது இந்திய சட்ட ஆணைத்தின் தலைவர். இவர் தான் தற்போது பொது சிவில் சட்ட குறித்த கேள்விகளை முன் வைக்கிறார்.

இவை அனைத்தும் மோடி அரசின் (இந்துத்வா அரசின் அடிப்படை சித்தாந் தங்கள்) இந்த சித்தாந்தங்களை மோடி அரசு தனக்கு தேவைப்படும் போது ஒவ்வொன்றாக அமல்படுத்தும். இப்போது அவர்களுக்கு உத்தரபிரதேச தேர்தல் வெற்றி முக்கியம். எனவே நேரம் பார்த்து தன் ஆட்சியின் தோல்விகளை மறைக்க பொதுசிவில் சட்டத்தை கையில் எடுத் துள்ளது.

இது மட்டுமல்ல சர்ஜிகல் ஸ்டிரைக் எனப்படும் துல்லியமான உளவுத் தகவல் களின் அடிப்படையில் எதிரிகளின் கூடா ரங்களை தாக்குதல்களை பாகிஸ்தானுக்கு எதிராக நடத்தியதாக மார்தட்டிக் கொண்டது.

தற்போதைய போலி என்கவுண்டர் என இவர்களின் திட்டங்கள் அனைத்தும் தேவைக்கேற்ப அவிழ்த்துவிடப்படும்.

எத்தகையதொரு உயர்ந்த சர்ஜிகல் ஸ்டிரைக் நடத்தியவர்களுக்கு அதனை படம் பிடிக்க போதுமான கருவிகள் இல்லாமல் போனது துயரமா அல்லது வெட்கக்கேடா என்பது தெரியவில்லை.

இதைப்போலவே சிறைச்சாலைகயில் இருந்து தப்பிய 8 சிபி உறுப்பினர்களை 12 மணி நேரத்திற்குள்ளான தேடி தாக்கம் வல்லமை படைத்த இவர்களுக்கு சிறைச்சாலையில் இருந்து அவர்கள் தப்பிய வீடியோவை காட்ட இயலா வண்ணம் அவர்களுடைய கண்காணிப்பு கேமராக்கள் செயல் இழந்து போனதும் வெட்கக்கேடே. மோடிக்கு தன் மனைவியை விட முஸ்லிம் பெண்களின் மீது அக்கறை. தான் தொட்டுத் தாலி கட்டிய மனைவிக்கு வாழ்க்கையை தர வழியில்லை, வகையில்லை. ஆனால் முஸ்லிம் பெண்கள் குறித்து அவர் வருத்துகிறார் பேதனையுறுகிறார்.

ஆனால் அவர் மனைவியோ நான் மோடிக்கு என்ன நிலையில் உள்ளேன் என தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கேள்வி கேட்கிறார்.

அந்த சகோதரி மட்டும் இஸ்லாமியராக இருந்திருந்தால் இவ்வளவு மோசமான நிலை அவருக்கு ஏற்பட்டிருக்காது. என்றைக்கோ அவர் தன் கணவரிடமிருந்து குல்ஆ பெற்று பேறு வாழ்க்கையை தேர்ந்தெடுத்திருக்க ஏதுவாகி இருந்திருக்கும். பாவம் அவர் பெண் அடிமை தனம் கொண்ட ஒரு மதத்தில் அல்லவா பிறந்து விட்டார்.

<u>16 கேள்விகள் சதிகள்</u>

சரி இனி விஷயத்திற்கு வருவோம். பி.எஸ்.சவ்ஹான் 16 கேள்விகளை முன் வைத்து பொதுமக்களிடமம் கருத்து கேட்கிறார்.

1. இந்த கேள்விகளின் ஒட்டுமொத்த நோக்ககம் மதரீதியான, கலாச்சார ரீதியான, வழக்கில் உள்ள தனிநபர் சட்டங்களுக்கு பதிலாக "குடும்ப சட்டங்களை" கொண்டு வருவது.

**2. இந்த பொதுசிவில் சட்டத்தை எப்படி கொண்டு வருவது, எப்படி நடை முறைபடுத்துவது என்பது குறித்த கேள்விகளை மட்டும் முன் வைப்பது. ஆனால் இது சட்டப்படி சரியானதா என்ற கருத்தை கேட்காமல் தவிர்ப்பது.**

3. அரசியல் நிர்ணயச் சட்டப்படியோ, மத அடிப்படையிலோ பாலியல் உரிமை களை சமன் செய்ய முடியாமல் தன் விருப்பப்படி நிறைவேற்ற முயல்வது.

4. மேல்முறையீட்டின் கடைசி வரிகளில் கூறியுள்ளது போல் பன்முகத்தன்மை போன்ற சொற்களை மதசார்பற்ற தன்மை என்ற பதத்திற்கு பதிலாக பயன்படுத்தி இருப்பது போன்றவை இந்த கேள்விகளின் உள்நோக்கத்தை வெளிப்டுத்தும்.

முதலில் இந்த கேள்விகள் எதுவும் உலகளாவிய தரத்தில் இல்லை. ஆனால் இத்தகைய கருத்து கேட்புகளில் குறைந்த பட்ச அளவுகள் பின்பற்றும்போது தான் உண்மையும் நடுவுநிலைமையும் பெற முடியும்.

உதாரணத்திற்கு

நீங்கள் முட்டாள் என்பதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாமா? என்ற கேள்வி சாதாரணமாக கேட்கப்பட்டால் நான் ஒன்றும் முட்டாள் இல்லை இந்த கேள்வியே அபத்தமானது எனக் கூறிவிட முடியும்.

ஆனால் இந்த கேள்விக்கு அ) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம் ஆ) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டாம் என்ற இரண்டே பதில்களை தந்து இரண்டில் ஒன்றை தேர்வு செய்ய வேண்டும் என்று கூறினால் அதில் எதை தேர்வு செய்தாலும் தேர்வு செய்தவர் முட்டாள் என்பது உறுதியாகி விடும். இந்த வகையில் தான் இந்த பொதுச் சிவில் சட்டம் குறித்த கேள்விகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதனை Closed Response Questions என்று கூறுவார்கள். இத்தகைய கேள்விகளில் சரியான பதிலை சரியான கருத்தை வெளிப்படுத்த இயலாது.

முதல் கேள்வியை பாருங்கள்,

இந்திய அரசியல் நிர்ணய சட்டம் 44ன்படி அரசு இந்தியா முழுமைக்கும் பொதுசிவில் சட்டத்தை கொண்டு வர முயற்சி செய்யலாம் என்பது பற்றி நீங்கள் அறிவீர்களா?

அ) ஆம்

ஆ) இல்லை

உங்கள் பார்வையில் இந்த விஷயத்திற்கு கூடுதல் நடவடிக்கைகள் தேவையா?

இந்த கேள்விக்கான பதிலின் மூலம் ஆம் இந்திய அரசிற்கு பொதுசிவில் சட்டத்தை கொண்டு வரும் அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். அதை மறுக்க

இங்கு முகாந்திரமே இல்லை என்பதை கவனியுங்கள்.

தனி நபர் சட்டங்களின் மூலம் நடை முறைகளின் மூலமும் உள்ள பல்வேறு மத விஷயங்களில் பின் வருபவற்றில் எல்லா வற்றையும் பொதுசிவில் சட்டத்தில் இணைக்க வேண்டுமா? அல்லது சிலவற்றை மட்டுமே.

1) திருமணம், 2) விவாகரத்து

3) தத்தெடுத்தல்

4) பாதுகாவலர் மற்றும் குழந்தை பொறுப்பு

5) பேணுதல், 6) மரபுரிமை மற்றும்

7) பரம்பரை சொத்து

ய) ஆம் அனைத்தையும் இணைக்க வேண்டும்

ெ) இல்லை இதை தவிர்க்க வேண்டும்.

உ) இதில் இன்னும் பின்வருபவற்றை இணைக்க வேண்டும்.

இந்த கேள்விக்கான பதிலில் நீங்கள் பொது சிவில் சட்டத்தில் இதில் எதையும் இணைக்கக் கூடாது என்ற கருத்தை பதியவே முடியாது என்பதை கவனியுங்கள். இங்கு தான் இவர்களின் கயமை தெளிவாக விளங்கும்.

5 வது கேள்வியில் பொது சிவில் சட் டத்தை கட்டாயமற்ற முறையில் நடை முறைப்படுத்தலாமா?

1) ஆம் 2) இல்லை

இதில் ஆம் என்றாலும் பொதுசிவில் சட்டம் கொண்டுவரப்படும் என்பதை கவனியுங்கள். பொது சிவில் சட்டம் கொண்டு வரவே கூடாது என்ற பதிலே இங்கு இல்லை. ●

# முஸ்லிம் தனியர் சட்டம்!



“இஸ்லாமியச் சட்ட திட்டங்கள் இரகசியமானவையல்ல. அவை அனைத்தும் தொகுக்கப்பட்டு அச்சிடப்பட் நிலையில் இருக்கின்றன. அரசு அந்தச் சட்டங்களை எப்பொழுது வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளலாம். மார்க்கக் கல்விக் கூடங்களிலும் அவை அன்றாடம் கற்றுத் தரப்படுகின்றன. என வே ஒரு விஷயத்தைக் குறித்து இஸ்லாமியச் சட்டப்படி முஸ்ம்கள் நடக்கிறார்களா இல்லையா என்பதை அரசு பார்க்கட்டும். இஸ்லாமியச் சட்டப்படிதான் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள் என நிரூபணமாகிவிட்டால் பிறகு அரசுக்கு முன் இரு வழிகள்தான் இருக்க வேண்டும்.

1. முஸ்லிம்களின் மதக் கருத்தோட்டங்களில் அரசு தலையீட்டால் அவர்களின் மதக் கொள்கைக்கேற்ப செயல்பட முழு சுதந்திரம் அளிக்க வேண்டும்.

2. “முஸ்லிம்களின் மதக் கருத்தோட்டங்கள் பற்றி எங்களுக்கு அக்கறையில்லை. குடிமக்களின் மத உரிமைகளில் தலையிடமாட்டோம் எனும் கொள்கையை நாங்கள் இப்பொழுது கைவிட்டுவிட்டோம்” எனத் தெளிவாக – பகிரங்கமாக அரசு அறிவிக்க வேண்டும்.

குடிமக்களுக்கு மதச் சுதந்திரம் உண்டு அல்லது இல்லை என்பதை அரசு தெளிவாக அறிவித்துவிட்டால் முஸ்லிம்களுக்கும் பிரச்சனை எளிதாகிவிடும். தமது உரிமைகளுக்காக அரசிடம் முறையிட்டுக் கொண்டிருப்பதில் தம் நேரத்தை வீணாக்குவதற்குப் பதிலாக, தமக்குத் தேவை இந்த அரசா அல்லது இஸ்லாமியா வாழ்க்கையா என்பதை அவர்கள் செய்துகொள்வார்கள்.

**- மௌலானா அபுல் கலாம் ஆசாத்**

*(1922–ல் ஆற்றிய உரையிலிருந்து)*

# சென்னை ஆலந்தூரில் மாபெரும் ஷரீஅத் பாதுகாப்பு பொதுக்கூட்டம்

5.11.2016 சனிக்கிழமை மாலை சென்னை ஆலந்தூர் நிதி மேல்நிலைப் பள்ளி அரங்கத்தில் ஷரீஅத் பாதுகாப்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கிண்டி, ஆலந்தூர், ஆதம்பாகக்கம், பட்ரோடு, வேளச்சேரி, பழவந்தாங்கள் பகுதி பள்ளிவாசல்கள் ஒருங்கிணைப்புப் பேரவை நடத்திய இந்தப் பொதுக் கூட்டத்துக்கு கோலந்தாஸ் முத்தவல்லி ஷஃபியுல் தலைமையேற்றார். அனைத்துப் பள்ளிவாசல் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

மௌலவி அப்துல் காதிர் மிஸ்பாஹி கிராஅத் ஓதினர். மௌலவி ஃபாரூக் உலூமி வரவேற்புரையாற்றினார். மௌலவி ஷாஹுல் ஹமீது சிராஜி துவக்க உரையாற்றினார்.

பின்னர் வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் இல்யாஸ் ரியாஜி "பொதுச் சிவில் சட்டம் வகுப்புவாத அரசியலின் முன்னோட்டம்" என்ற தலைப்பிலும் ரஹ்மத் பப்ளிகேஷன்ஸ் தலைமை மேலாய்வாளர் மௌலவி கான் பாகவி "முஸ்லிம் தனியார் சட்டத்தில் கை வைக்காதே" என்ற தலைப்பிலும் பெண்கள் ஷரீஅத் பாதுகாப்பு பேரவை ஒருங்கிணைப்பாளர் "முஸ்லிம் தனியார் சட்டம் பெண்களுக்கு எதிரானதா?" என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினார்.

மௌலவி யூசும் சித்தீக் மிஸ்பாஹி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். நேரு நகர் முத்தவல்லி மீஜான் நன்றியுரை யாற்றினார். ஏராளமான ஆண்களும் பெண்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ●

## பொதுசிவில் சட்டத்துக்கு எதிராக ம.ஜ.க. பொதுக்கூட்டம்

சென்னை பூவிருந்தவல்லியில் 19.10.2016 அன்று மனித நேய ஜனநாயக கட்சி பொதுக் கூட்டம் நடத்தியது. முஸ்லிம்களுக்கு எதிரான துவேஷ மனப்போக்குடன் செயல்பட்டுவரும் மத்திய அரசு ஷரீஅத் சட்டத்தை அகற்றி பொதுச் சிவில் சட்டத்தைக் கொண்டு வரத் துடிப்பதைக் கண்டித்து நடந்த பொதுக்கூட்டத்தில் வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் இல்யாஸ் ரியாஜி, மஜக துணை பொதுச் செயலாளர் தைமிய்யா ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஏராளமான இளைஞர்களும் சகோதர சமுதாயத்தினரும் பங்கேற்று பயனடைந்தனர். ●

# பாளை சதக்கதுல்லா அப்பா கல்லூரியில் கருத்தரங்கு

31.10.2016 அன்று நெல்லை பாளையங்கோட்டை சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் கருத்தரங்கு நடைபெற்றது.

முஸ்லிம் தனியார் சட்டத்தைப் பாதிக்கம் வகையில் அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டத்தைக் கொண்டு வரும் முயற்சியில் மத்திய அரசு இறங்கியிருப்பதை முன்னிட்டு நடத்தப்பட்ட கருத்தரங்கில் "பன்முகத்தன்மை கொண்ட இந்திய தேசத்துக்கு பொதுசிவில் சட்டம் பொருந்துமா?" என்ற தலைப்பில் சென்னை மந்தைவெளி தலைமை இமாம் இல்யாஸ் ரியாஜி சிறப்புரையாற்றினார்.

சட்டக் கல்லூரி முன்னாள் பேராசிரியர் டாக்டர் முஹம்மது "முஸ்லிம் தனியார் சட்டமும் பொது சிவில் சட்டமும்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

கல்லூரிப் பேராசிரியர்கள் இல்யாஸ் உஸ்மானி ஜலீல் உஸ்மாணி ஆகியோரும் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

கல்லூரிப் பேராசிரியர் அபுல் ஹசன் ஃபாதி நன்றியுரையாற்றினார்.

கல்லூரியின் இஸ்லாமிய ஆய்வு வட்டத்தின் பொறுப்பாளர் பேராசிரியர் ரோஷன் நிகழ்ச்சிக்கு சிறப்பான ஏற்பாடு களை செய்திருந்தார். ●

## புரொபஷனல் கொரியர் நடத்திய பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி

கோட்டூர்புரம் யூனிடி பப்ளிக் பள்ளிக்கூடத்தில் 22.10.2016 அன்று புரொஃபஷனல் கொரியர் நிறுவனம் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி நடத்தியது.

சகோரர் அஹ்மது சாலிஹ் கிராஅத் ஓதினார். புரொபஷன் கொரியர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் அஹ்மது மீரான் அவர்கள் நிகழ்ச்சிக்கு தலைமையேற்று தலைமையுரை ஆற்றினார். வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவி இல்யாஸ் ரியாஜி, "இஸ்லாமும் தற்கொலையும்" என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். புரொபஷனல் கொரியர் நிறுவனத்தின் பொது மேலாளர் சகோதரர் முகைதீன்கனீ அணிந்துரை வழங்கினார். பிரதர் ஷுட் அண்ட் பீஸ் ஆஃப் இன்டியா அமைப்பின் செயலாளர் சகோதரர் அப்துல் சமது நன்றியுரையாற்றினார். ஏராளமான சகோதர சமுதாயத்தினர் பங்கேற்று பயனடைந்தனர்.●

## பொதுசிவில் சட்டத்தைக் கண்டித்து ஜமாஅத்துல் உலமா நடத்திய பிரமாண்டப் பொதுக்கூட்டம்

மத்திய அரசு பொதுவான சிவில் சட்டமொன்றை கொண்டுவர முயல்வதைக் கண்டித்து சென்னை மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபை சென்னை மண்ணடி தம்பு செட்டித் தெருவில் பொதுக் கூட்டம் நடத்தியது.

மாவட்டத் தலைவர் மௌலவி தர்வேஷ் ரஷாதி தலைமையேற்றார் மாவட்டச் செயலாளர் காஜா ஜமாலி வரவேற்புரையாற்றினார். அகில இந்திய முஸ்லிம் சட்ட வாரியத்தின் உறுப்பினர் மவ்லானா ஸரூஹுல் ஹக் ரஷாதி, தமிழக அரசு தலைமை காஜி ஸலாஹுத்தீன் முஹம்மது அய்யூப், வழக்கறிஞர் ராஜா, இந்திய தேசிய லீக் தலைவர் பஷீர் அஹ்மது, இல்யாஸ் ரியாஜி, சதீதுத்தீன் பாகவி, முன்னாள் எம்.பி. முஸ்லிம் லீக் தலைவர் காதர் முகைதீன் ஆகியோர் உரையாற்றினர். நடைபெறுவது பொதுக்கூட்டமா அல்லது திறந்தவெளி மாநாடா என்று வியக்கும் அளவுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து பங்கேற்றனர். ●

# பொதுசிவில் சட்டத்தைக் கண்டித்து மேலப்பாளையம் மஜ்லிசுல் உலமா நடத்திய பிரமாண்டப் பொதுக் கூட்டம்

1.11.2016 அன்று மேலப்பாளையத்தில் பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடத்தியது நகர மஜ்லிசுல் உலமா சபை. மத்திய அரசு கொண்டுவரத் துடிக்கும் பொதுசிவில் சட்டத்தைக் கண்டித்து நடந்த இந்த பிரமாண்டப் பொதுக் கூட்டத்துக்கு மாவட்ட ஜமாஅத்துல் உலமா தலைவர் டி.ஜே.ஸலாஹுத்தீன் ரியாஜி தலைமை ஏற்றார். தலைமையுரை நிகழ்த்தினார்.

சென்னை மந்தைவெளி இமாம் இல்யாஸ் ரியாஜி, அடையாறு இமாம் சதீதுத்தீன் பாகவி, உஸ்மானீய்யா அரபுக்கல்லூரிப் பேராசிரியர்கள், சமுதாயப் பிரமுகர்கள் பலரும் உரையாற்றினர். நகர மஜ்லிசுல் உலமா தலைவர் மௌலவி காஜா முயீனுத்தீன் பாகவி நிகழ்ச்சிக்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

ஆயிரக்கணக்கான பெண்களும் பல்லாயிரக்கணக்கான ஆண்களும் சங்கைமிகு உலமாக்களும் வெள்ளமெனத் திரண்டு வந்து சிறப்பித்தனர். மன நிறைவான சிறப்பான மாநாடுபோல் அமைந்திருந்தது இந்தப் பொதுக் கூட்டம். ●



# ISIS என்ற பெயரால் முஸ்லிம் இளைஞர்கள் கைது..!

நம் தமிழ் நாட்டில் மட்டுமல்ல இந்தியா முழுவதும் ISIS என்ற பெயரால் முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றார்கள்.

இப்படி முஸ்லிம் இளைஞர்களை தேசிய புலனாய்வு முகவாண்மை NIA-NATIONAL INVESTIGATING AGENCY என்ற அமைப்பு கைது செய்து வருகின்றது.

இப்படி கைது செய்யும், இளைஞர்களை 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தின் முன் நிறுத்திட வேண்டும். ஆனால் 120 மணி நேரம் கழித்தும் அவர்களை, நீதிமன்றத்தில் நிறுத்துவதில்லை.

அண்மையில் கடையநல்லூரில் ஓர் இளைஞனை ISIS என கைது செய்தது இந்த தேசிய முகவாண்மை என்ற அமைப்பு ஆனால் அவருக்கு எதிரான சாட்சியங்களைக் கண்டுபிடிக்க அவருடைய வீட்டை மூன்று நாள் கழித்து சோதனையிட்டார்கள். செய்தி ஆதாரம் (THE HINDU ENGLISH)

இந்த நிலை எதைக்காட்டுகின்றது என்றால் ஒருவரை கண்ணை மூடிக் கொண்டு கைது செய்துவிட வேண்டும். ஆதாரங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம், என்ற பாங்கில்தான் கைதுகள் நடைபெறுகின்றன. பின்னர் அவருடைய வீட்டிற்குள் புகுந்து வெளியே வந்துவிட்டு ஏதேனும் போலி ஆதாரங்களை உருவாக்குவார்கள். இதுபோன்றவர்கள் 10 ஆண்டுகளோ, 20 ஆண்டுகளோ கழித்து வெளியே வருவார்கள், குற்றமற்றவர்கள் என்று. அந்நிலையில் அவருடைய வாழ்வும், அவருடைய குடும்பத்தவர்கள் வாழ்க்கையும், பாழ்பட்டுப் போகும்.

கேரளாவில், ஒரு வீட்டில் ஒரு இளைஞன் ஒரு நாள் இல்லாதிருந்தால் அவன் ISIS இல் இணைந்து விட்டதாக கூப்பாடுகள் போடப்படுகின்றன. தேசிய புலனாய்வு முகவாண்மை ஒரு பொய்யைச் சொன்னால், நமது ஊடகங்கள் 9 பொய்களை இணைத்து மொத்த விவகாரத்தையும் பூதகரமாக்கி விடுகின்றன.

மராட்டிய மாநிலத்தில் இனப்படுகொலை புகழ் மோடியை விட கொடுமையானவர் தேவேந்திர ஃபண்டாவில் என்பவர், ஆட்சி செய்து கொண்டிருக்கின்றார். இவருடைய முழுநேர வேலையே முஸ்லிம்களை எப்படியெல்லாம் வதைச் செய்வது என்பதைப் பற்றிச் சிந்திப்பதுதான்.

இங்கேயும் ATS என்ற தீவிரவாதத் தடுப்புப்படை முழு வீச்சில் ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றது. அங்கு ஆர். எஸ். எஸ் ஆட்சி நடப்பதால் தாண்டவத்தைத் தங்குதடையின்றி அரங்கேற்றுகின்றது.

இந்த ATS தான் ஆண்டாண்டுகாலமாக முஸ்லிம் இளைஞர்களை காரணமின்றி கைது செய்தும், கொலை செய்தும் வந்தது. ஹேமந்த் கர்கரே என்ற நேர்மையான காவல்துறை அதிகாரியைச் கொலை செய்வதில் முக்கிய பங்காற்றியது (பார்க்க கர்கயைக் கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம் வேர்கள் பதிப்பகம்).

எந்த அளவுக்கு இந்தக் கொடுமை முஸ்லிம்களை நிம்மதி இழக்கச் செய்தது என்றால் 28 முஸ்லிம் அமைப்புகள் ஒன்றாய் இணைந்து, மராட்டிய மாநில முன்னாள், முதல்வர், முன்னாள் மத்திய அமைச்சர், இந்நாள் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் சரத் பாவார் அவர்களைச் சந்தித்து

முஸ்லிம் இளைஞர்கள் எதிர் நோக்கும், பிரச்சனைகள், குறிப்பாக ISIS என்ற போர்வையில், கைது செய்யப்பட்டு, சிறை யலடைக்கப்படும், இளைஞர்கள் பற்றி கூறி இருக்கின்றார்கள். இதனை செவிமடுத்த அவர் இப்படி ஓர் அறிக்கையை வெளியிட்டி ருக்கின்றார்.

"மராட்டிய மாநிலம் மராத்துவாபி பகுதியில் 28 முஸ்லிம் அமைப்புகளைச் சார்ந்தவர்கள் என்னை சந்தித்து தீவிரவாத தடுப்பு படை (ANTI Terriori Squad) முஸ்லிம் இளைஞர்களை தொடர்ந்து கொடுமைப்படுத்திக் கொண்டிருப்பதாக வும், இதற்கு ISIS என்ற போர்வையைப் பயன்படுத்துவதாகக் கூறினார்கள். வந்த வர்கள் தீவிரவாதத்தடுப்புப் படையின் இந்தச் செயலைக் கண்டித்ததுடன், தங்கள் சமுதாயத்தைச் சார்ந்த இளைஞர்கள் நிச்சயமாக இதுபோன்ற செயல்களில் ஈடுபட மாட்டார்கள் என உறுதியும் தந்தார்கள்.

நாட்டில் நடப்பிலிருக்கும சட்டபடி ஒருவரை கைது செய்தால் 24 மணி நேரத்திற்குள், நீதிமன்றத்தில் நிறுத்திவிட வேண்டும். ஆனால் பல வழக்குகளில் 120 மணி நேரமானாலும் நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவதில்லை. மாறாக அந்த இளைஞர்களைத் தனி இடங்களில் வைத்து சித்திரவதைச் செய்கின்றார்கள். அரசாங்கம் இதனை கருத்தில் கொண்டு நடவடிக்கை களை எடுக்க வேண்டும். குற்றவாளிகளுக்கு கொள்கையோ குறிக்கோளோ கிடையாது. ஆனால், ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களைக் குற்றவாளிகளாகப் பார்ப்பது அர்த்தமற்ற செயல்.

அதேபோல், மராட்டிய மாநிலத்தில், உள்நாட்டு பாதுகாப்புச் சட்டம், என்றொன்றை கொண்டுவரப்போவதாக சொல்கின்றார்கள். அது அகில இந்திய அளவில், கொண்டு வரப்பட்ட நெருக்கடி நிலை பிரகடனத்தைப் போன்ற சட்டமாகும். ஆனால் இதே பாரதிய ஜனநாயக கட்சி யினர்தான் இந்திரா காந்தியின் அவசரக் கால MISA பிரகடனத்தை அதிகமாக எதிர்த்தவர்கள். நான் மராட்டிய மாநிலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் அநீதி களை நான் பிரதமரிடமும் எடுத்துக் சொல்வேன்.

சரத்பாவரின் அறிவிப்புகள், மராத்வாட பகுதி இளைஞர்களுக்கு ஏதேனும், ஆறுதலையோ ஆசுவாசத்தையோ தரும் என்றால், சந்தோஷம்தான்.

ஆனால் அவர் பிரதமர் மோடியிடம் அதைச் சொன்னால் அவர் முஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்யும் அதிகாரி களுக்கு பரிசுகளையும் பதக்கங்களும், வழங்கி உற்சாகப்படுதுதுவார்.

ஜனநாயகத்தின் மிகப்பெரிய விபத்து பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்களைக் கொலை செய்த இனப்படுகொலைப் புகழ் மோடி இந்தியாவின் பிரதமராக ஆகி விட்டார்.

இவருக்காக பல முஸ்லிம்களைக் கொலை செய்த குஜராத் காவல்துறை அதிகாரி, டி. ஜி, வன்சார சிறையிலிருந்த போது இவரைப்பார்த்து இப்படிச் சொன்னார்.

"நீ காப்பாற்றுவாய் என்ற நம்பிக்கை யில் தான் கொலைகளைத் துணிந்து செய் தேன். உன்னால் என்னைக் காப்பாற்ற இயலவில்லை. உண்மையில் நான் இருக்கு மிடத்தில் (சிறையில்) இருக்க வேண்டியது நீ, என்பதை மறந்துவிடாதே!" டைம்ஸ் ஆஃப் இந்தியா இதழ் இந்த வாசகங்கள் அடங்கிய கடிதத்தை வெளியிட்டிருந்ததை அனைவரும் அறிவர்.

நமது காஷ்மீர் இளைஞர்கள் நமது இராணுவத்தினரின் உயிரைக் காப்பாற்றி னார்கள்.

காஷ்மீரின் தலைநகர் சீரிநகர். இங்குள்ள நான்கு வழிச் சாலையில் நமது இராணுவத் தின் வண்டி ஒன்று வேகமாகச் சென்று கொண்டிருந்தது. வண்டியை ஓட்டிக் கொண்டிருந்த சிப்பாய்யின் கட்டுப் பாட்டிலில்லாமல் வண்டி மரத்தில் மோதிக் கவிழ்ந்தது. அதனுள் ஓர் சிப்பாய் சிக்கிக் கொண்டார்.

இராணுவத்தினர் சிலபல முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர். இதனைக்கண்ட நமது இளைஞர்களின் சிலர், தங்கள் வாகனத்தையும் இதர தளவாடங்களையும் கொண்டு வந்து, அந்த சிப்பாயைப் பக்குவமாக மீட்டனர்.

இந்த நிகழ்ச்சியைப் பார்த்த சில பொது மக்கள், நிகழ்ச்சியை வீடியோ எடுத்து

யுடியூப், வாட்ஸ் அப் ஆகியவற்றின் வழி நாட்டு மக்கள் அனைவருக்கும் செய்தியைத் தெரிவித்தனர். நமது இராணுவம் தொடர்ந்து அந்த மக்கள் மீது கெடுபிடிகளை கட்டவிழ்த்து விட்டாலும் அந்த மக்கள் தங்கள் பெருந்தன்மையிலிருந்து கீழே இறங்கிடவில்லை, என்பதையே இந்த நிகழ்ச்சிக்காட்டுகின்றது. ●

-நன்றி **Radiance 16-22 Oct.2016.**

# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

துன்பத்திலும் உலக சுகத்தை விடவில்லை ஐரோப்பியர்கள்

**அபுல்ஹசன்அலீநத்வீ:**

பிரபல அமெரிக்கப் பத்திரிக்கையாளர் Jhon Gunther அவர்கள் ஆங்கிலேயக்ள் உலகாதாய மனோ பாவத்தை Inside Europe எனும் நூலில் அருமையாக இப்படி விவரிக்கிறார்.

"ஆங்கிலேயர்கள் வாரத்தில் ஆறு நாட்கள் **(Bank of England)** வங்கிகளை வணங்கினார்கள். ஏழாவது நாள் (மட்டும்) தேவாலயங்களுக்குச் சென்றார்கள்."

(Source: Inside Europe)

ஆம், அவர்கள் மரணத்துக்குப்பின்வரும் இன்னொரு வாழ்வை நம்பவில்லை. இவ் உலக வாழ்வுதரும் சுகத்துக்கு அப்பால் இன்னொரு இன்பம் இருப்பதை ஏற்கவில்லை. இவ்உலக வாழ்வில் பெறும் உயர்வே உயர்வு இதற்கு மேல் இன்னொரு உயர்வு இருப்பதில்லை என்று கருதினார்கள்.

கடவுளைப் பற்றிய பேச்சு மிக அரிதாக அவர்களிடம் காணப்பட்டது. கடவுளுக்கு எந்த மரியாதையும் தரவில்லை அவர்கள்.

இப்படிப்பட்டவர்கள் தமது வாழ்வில் ஏதேனுமொரு பெருங்கஷ்டம் பேராபத்து நேர்ந்தால் இறைவனிடம் சரணாகதி அடைவார்கள். அவனிடம் மன்றாடுவார்கள் என்று எதிர்பார்க்கமுடியுமா?

இதோ பாருங்கள் இறைவன் ஒருவன் இருக்கிறான் அவனுக்கு துணைக் கடவுள் களும் இருக்கிறார் என்று நம்பிக் கொண்டிருந்த இணைவைப்பாளர்கள் நெருக்கடி நிலையின் போது ஏக இறைவனை அழைப் பார்கள் என்கிறான் அல்லாஹ்.

"மேகத்தைப் போன்ற அலைகள் அவர்களை மூடும் போது ஏக இறைவனை அழைப்பார்கள். (31 : 32)

ஆனால் இந்த ஐரோப்பியர்கள் அப்படி யல்ல. புலனுக்குத் தெரியும் காரணங்களையே நம்புகின்றனர். உலகாதாயத்தில் மூழ்கினர். கடவுள் என்று ஒருவன் நமக்குத் தேவை யில்லை என்று கருதினர். அதனால் கல் நெஞ்சர்களாயினர். புலனுக்கு அப்பாற் பட்டதை அலட்சியப்படுத்தினர்.

அல்லாஹ் கூறுவதைப் பாருங்கள். (நபியே) உமக்கு முன்னிருந்த சமுதாயங் களுக்கு தூதர்களை நாம் அனுப்பினோம். அவர்கள் (நமக்குப்) பணிவதற்காக நோய் களைக் கொண்டும் வறுமையைக் கொண்டும் அவர்களை நாம் பிடித்தோம். (6 : 42)

நம்மிடமிருந்து வேதனை அவர்களுக்கு வந்தபோது அவர்கள் பணிந்திருக்க வேண்டாமா? அதற்கு மாறாக அவர்களின் இதயங்கள் இறுகி விட்டன. அவர்கள் செய்து கொண்டிருந்ததை ஷைத்தான் அவர்களுக்கு அழகானதாகக் காட்டிவிட்டான் (6 : 43)

அவர்களை வேதனையைக் கொண்டு நாம் பிடித்தோம். ஆனால் அவர்கள் தம் இறைவனுக்கு மதிப்பளிக்கவுமில்லை பணியவுமில்லை (23 : 76)

இந்த வசனங்கள் யாரைப்பற்றிக் கூறுகிறதோ அவர்களைப் போன்றாகி விட்டார்கள் ஐரோப்பியர்கள்.

கர்ண கொடூரமான யுத்தக்காலங்களில் கூட இறைவனுக்கு அடிபணிதல் பற்றியோ, ஈவு இரக்கம் குறித்தோ ஐரோப்பியர்களின் தலைவர்களோ அரசின் பிரதிநிதிகளோ தம் உரைகளில் குறிபிட்டிருப்பதாகக் காண முடியவில்லை.

குடிமக்களின் பண்புகளிலும் செயல் களிலும் மகிழ்ச்சியான தருணங்களிலும் கூட அவற்றைக் காண முடியவில்லை.

மாறாக இதை தைரியம், எதையும் தாங்கும் இதயம் நிலைகுலையாமை என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள் மேற்கத்திய இலக்கியவாதிகளும் சிந்தனையாளர்களும்.

இங்கிலாந்து நாட்டின் பாராளு மன்றத்தில் அதன் மிகப் பெரிய தலைவரும் அமைச்சர்களுள் ஒருவருமான பிரமுகர் பெருமை பொங்க இப்படிச் சொன்னார்:- “எத்துணை பெரிய துன்பம் வந்தாலும் துயரம் வந்தாலும் துவண்டு போக மாட்டார்கள் ஆங்கிலேயர்கள்” என்றாராம்.

இதற்குச் சான்றாக ஒரு நிகழ்வையும் அவர் குறிப்பிட்டாராம்.

இரண்டாம் உலக மகா யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருந்த நேரம். ஜெர்மனி நாட்டின் அணியிலிருந்த ஜப்பான் ஆங்கி லேய நாட்டின் ஆதிக்கத்தின் கீழிருந்த சிங் கப்பூர் மீது வான்வழித் தாக்குதல் நடத்தியது.

சிங்கப்பூரின் ஆடல் பாடல் அரங்கு **(Club)** களில் ஆடிப்பாடி உல்லாசமாக இருந்து கொண்டிருந்தவர்கள் ஜப்பான் விமானங்கள் குண்டு மழை பொழிவதைப் பற்றிக் கவலையே படவில்லையாம். சிதறி ஓடவில்லையாம். நிகழ்ச்சியை ஒத்தி வைக்கவும் இல்லையாம்.

இந்தியாவைச் சார்ந்த ஆகா முஹம்மது அஷ்ரப் என்பவர் இரவு ஒன்று கூடல் **(Night party)** ஒன்றில் தாம் கண்ட காட்சியைக் கூறுகிறார்.

நாங்கள் ஆடிப்பாடிக் கொண்டிருந் தோம் திடீரென அங்கே வான்வழித் தாக்கு தல் பற்றி அபாய அறிவிப்புவிடுக்கப்பட்டது. எங்கு நிசப்தம் நிலவியது. பின்னர் சற்று நேரத்தில் அவையோரில் ஒருவர்” என்ன செய்யலாம்? ஆடல் பாடலைத் தொடர லாமா? தள்ளிப் போடலாமா?” என்று கேட்டார்.

ஒரு யுவதி “வேண்டாம். நாம் தொடர் வோம். ஆடிப்பாடுவோம்” என்றாள். நிகழ்ச்சி தொடர்ந்தது.

இதன் பின்னர் நிகழ்ச்சி சூடு பிடித்தது அங்கே நடந்து கொண்டிருந்த ஆடல் பாடல் எப்படி நடந்திருக்கும் என்று சொல்லவே தேவையில்லை. (நூல் : வான் வழித் தாக்குதல் அல் காராத்துல் ஜஹிய்யா **P.71.** ஆகாமுஹம்மது அஷ்ரஃப், திஹ்லவி)

மேலும் அவர் கூறுகிறார்: - திரை அரங்கு களில் திரைப்படம் ஓடிக் கொண்டிருக்கும் திடீரென ஓர் அறிவிப்பு ஒலிக்கும் “எதிரி நாட்டு விமானங்கள் வான்வழித் தாக்குதல் களைத் தொடங்கி விட்டன”

“ஆனாலும் இடை நிறுத்தமின்றி காட்சிகள் ஓடிக் கொண்டேயிருக்கும்”

“பதுங்குக் குழிகளுக்குச் சென்று தம்மைத் தற்காத்துக் கொள்ள விரும்புவோர் இடது புறவாசல் வழியாகக் கீழே செல்லலாம்.”

இப்படி அறிவிக்கப்பட்ட போதிலும் எவரும் எழுந்திருக்காமல் சினிமா பார்த்துக் கொண்டிருப்பார்கள். படம் ஓடிக் கொண்டிருக்கும்.

### இது அன்றாட நிகழ்வு
(Source: அதே நூல் பக்-70)

*1942 ஜனவரி 24 ம் தேதி இந்தியாவின்* மிகப் பெரிய ஆங்கில நாளேடு ஒன்றில் வெளியான ஒரு படம் குறித்த விமர்சனக் கட்டுரையில் ஓர் எழுத்தாளர் இப்படித் குறிப்பிட்டிருந்தார்.:-“ வரலாற்று விநோ தம் என்னவென்றால் மிகப்பெரிய யுத்தங் கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலக் கட்டங்களில்தான் அழகிய திரைப்படங் களெல்லாம் வெளியாகியுள்ளன.”

இன்றைய பிரிட்டனிலும் இதே நிலை தான் சினிமா,நாடகங்கள், கேளிக்கைகள் போர்க்காலங்களுக்கு முன்னர் வந்த திரைப்படங்களை விட அழகிய திரைப் படங்கள் நாடகங்கள் போர்க் காலங்களில் தான் வெளிவந்ததுள்ளன என்றே கருதுகின் றனர். லண்டன் மாநகரின் (club) கேளிக்கை அரங்குச் செல்வோர் தமக்குப்பிடித்த அனைத்தையும் அங்கே அனுபவித்தனர்.

இதே இதழ் 1943 டிசம்பர் 15ல் வெளி யிட்ட செய்தியில் இப்படிச் சொல்கிறது.

“ஆங்கில நாட்டின் தலைநகர் லண்டன், போர்சுகல் நாட்டின் தலைநகர் Liebun (லீபான்) ரஷ்யத் தலைநகர் மாஸ்கோ இங்கெல்லாம் சினிமா தொழில் வளம் தரும் தொழிலாக ஓங்கி வளர்ந்து செழித்திருந்தது.

இப்படியெல்லாம் வாழ்வு முடியப் போகின்ற தருணங்களிலும் பேராபத்துக்கள் சூழ்ந்து வரும் நேரங்களிலும் கூட ஆடிப் பாடி ஆனந்தக் கூத்தாடும் அளவுக்கு இன்பம்

துய்க்கும் மனோபாவத்தை வரலாற்றில் வேறு எங்கும் காணமுடியாது பண்டைய ரோம கிரேக்க சமுதாயங்களிடம் தவிர.

இரண்டாம் உலகப் போர் உக்கிரம் அடைந்திருந்த நேரம். அவை போதையி லிருப்பவனைக் கூட தெளிய வைத்த நாட்கள். அரக்க மனம் படைத்தவனும் அடங்கிய நாட்கள். எல்லோரும் இறைவனிடம் சரணா கதி அடைந்த நாட்கள்.

அந்த நாட்களில் பிரிட்டன் நாட்டின் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அவர்கள் பழைய வருடத்தை வழியனுப்பி விட்டு புதிய வருடத்தை வரவேற்கும் புத்தாண்டுக் கொண்டாட்டத்தை எப்படி எதிர் கொண் டார் என்பதை ராய்ட்டர் செய்திநிறுவனம் கூறுகிறது. இதோ:-

இடம் : வாஷிங்டன் மாநகரம்

நாள் : 1942 ஜனவரி 1-ம் தேதி

நேரம் : நள்ளிரவு (புத்தாண்டு பிறக்கும் வேளை)

இங்கிலாந்து நாட்டின் பிரதமர் சர்ச்சில் அவர்கள் கனடாவிலிருந்து அமெரிக்கா வுக்கு அரசு முறை பயணமாக புகைவண்டி ரயிலில் வருகிறார்.

யாருமே எதிர்பாராத வகையில் சர்சார் லஸ் போர்டல் அவர்களுடன் வந்திறங்கி னார் சர்ச்சில்.

விறுவிறுவென்று ரயில்வே கேண்டீ னுக்குள் சென்றார்.அவரின் ஒரு கையில் சிகரெட்புகைந்து கொண்டிருந்தது. மறுகை யில் நுரைத்ததும்பிய மதுக் கோப்பை இருந்தது. அவரோடு பயணித்த பத்திரிக் கையாளர்களுக்கோ ஆச்சரியம்.

உதட்டில் புன்னகையுடனும் கையில் மதுக் கிண்ணத்துடனும் நின்ற சர்ச்சில் இப்படிச் சொன்னார்.

“1941ம் ஆண்டின் பெயரால் சொல் கிறேன். எதிர்வரும் ஆண்டு கடின உழைப்பு சிரமம், வெற்றி ஆகியவற்றின் ஆண்டு” என்றார். அவர் இந்த வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருந்த நேரம் புத்தாண்டு உதயமானது. பழைய ஆண்டு விடை பெற்றது.

உடனே அங்கிருந்த பத்திரிக்கையாளர் களும் ரயில் நிலையப் பொறுப்பாளர்களும் சர்ச்சிலுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

சர்ச்சில், சர் போர்டல், கார்பொல் ஹார்னர் மூவரும் கரம் கோர்த்து நின்றனர். ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

சர்ச்சில் அவர்கள் வாசலருகே வந்தார்.

“அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த் துக்கள். கடவுள் நமக்கு வெற்றியளிப்பார்” என்றார்.

அங்கே கூடியிருந்தோர் அனைவரும் கைதட்டி விசிலடித்து ஆடிப்பாடி ஆனந்தப் பரவசமடைந்தனர்.

பிரதமர் சர்ச்சில் ஏ என்ற எழுத்தை தன் விரல் மூலம் காட்டி வெற்றிக்குக் கட்டியம் காட்டினார். அகமும் முகமும் பொங்க தனது ரயில் பெட்டியில் ஏறினார். (Source:- ராய்ட்டர் செய்தி நிறுவனம்)

உலகாதயாவாதிகளின் இந்த நடவடிக் கையை ஆன்மிக அறப்போதனையின் கீழ் தம் வாழ்வை வடிவமைத்துக் கொண்டவர்களின் நடவடிக்கையோடு ஒப்பிட்டுப்பாருங்கள்.

போர்க் காலங்களில் அவர்கள் எப்படி இருந்தார்கள் இவர்கள் எப்படி இருந்தார் கள் என்று பாருங்கள்.

அல்லாஹ் கூறுகிறான்:- ஓரிறை நம்பிக்கையாளர்களே! (போர்க்களத்தில் எதிரிகளின்) படையை நீங்கள் எதிர் கொண் டால் நிலைத்திருங்கள். அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறுங்கள். இதனால் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். (8:45)

“நபி (ஸல்) அவர்களை ஏதேனுமொன்று திடுக்கத்துக்குள்ளாக்கினால் தொழுதிட விரைந்து செல்வார்கள்” என்று ஹீதைஃபா (ரழி) கூறினார்கள். (நூல் : அபூதாவூத்)

பத்ருப் போர் நடைபெற்ற சமயத்தில் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களின் அணிவகுப்பை நேர்படுத்தி விட்டு பின்னர் (தமக்காக அமைக்கப்பட்டிருந்த) தமது பந்தலுக்கு வந்தார்கள். அவர்களுடன் அபூபக்ர் (ரழி) தவிர வேறுயாரும் இல்லை.

அப்பொழுது அல்லாஹ்விடம் மன்றாடி, இறைஞ்சி வேண்டினார்கள்” இறைவா! முஸ்லிம்களின் இந்தக் கூட்டம் அழிந்து விட்டால் இனி உன்னை வணங்கிட எவரும் இருக்க மாட்டார்” என்றார்கள். (நூல் : இப்னு ஹிஷாம்)

இறை நம்பிக்கையாளர்களுக்கும் உலகாதாய வாதிகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் பாருங்கள். ●

தமிழ் வடிவம் : - இல்யாஸ் ரியாஜி.

# “கண்டதும் கேட்டதும்”



**அன்புள்ள ஆசிரியருக்கு,**

16.10.2016 அன்று ஞாயிறு அரங்கம் பகுதியில் அம்பேத்கரின் பௌத்தம் செழித்திருந்தால் இந்தியா எப்படி இருந்திருக்கும்? என்ற தலைப்பில் சகோதரர் ராமச்சந்திர குஹா கட்டுரை எழுதியிருந்தார். அதில் அம்பேத்கர் இந்து மதத்திலிருந்து வெளியேறியதும் இஸ்லாமியர் களும், கிறித்தவர்களும் தொடர்பு கொண்டதாகவும் இரண்டும் வெளிநாட்டு மதங்கள் என அவர்களை நிராகரித்ததாகவும் உள்ளது.

1936மே 31 இந்துவாக பிறந்து விட்டேன் அது என் குற்றம் அல்ல. ஆனால் நான் சாகும்போது இந்துவாக சாகமாட்டேன் என்று அம்பேத்கர் கூறினார்.

அப்போது அவர் சீடர்களில் பலர் மதம் மாறுவதாக கூறிய போது இஸ்லாத்திற்கு மாறுங்கள் என்று கூறினார் அவர் நடத்தி வந்த பத்திரிக்கையிலும் மதம் மாற விரும்புபவர்கள் இஸ்லாத்திற்கு மாறிவிடும்படி கூறினார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த இந்து மஹா சபை 1939அக்டோபர் 29ல் அன்றைய பம்பாய் நகரில் கூடினார்கள். இதில் 1000 ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மதன் மோகன் மாளவியா தலைமை தாங்கினார். இதில் அம்பேத்கரின் மதமாற்றத்தை தடுக்க திட்டம் தீட்டப்பட்டது. இதில் ஆர்.எஸ்.எஸ் நிறுவனர் மூஞ்சேயும், பிர்லாவின் சகோதர்களில் ஒருவரான ஜீகல் கிஷோர் பிர்லாவும் சங்கராச்சாரியாரும் கொண்ட குழு அம்பேத்கரை சந்தித்து பேச முடிவெடுத்தது.

அதனடிப்படையில் மூன்று நாட்கள் அம்பேத்கரை சந்தித்து இந்த மூவர் குழு பேசியது. அதில் இஸ்லாம், கிறித்தவம், சீக்கியம் மட்டுமே விவாதிக்கப்பட்டது. பௌத்தம் குறித்து விவாதிக்கப்படவே இல்லை.

அவரிடம் மூவர் குழுவினர் இஸ்லாத்தில் நீங்கள் மாறினால் இது முஸ்லிம் தேசமாகிவிடும். இந்துக்களின் அடிப்படையே தகர்ந்துபோகும். ஆகவே நாங்கள் எங்கள் உயிரை கொடுத்தேனும் தடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

அதேபோல கிறித்தவத்திற்கு மாறினால் பிரிட்டிஷாரின் அதிகாரம் இங்கு மேலோங்கிவிடும். நீங்கள் இந்து மதத்தில் இருந்து வெளியேறுவது அவசியம் என்றால் நீங்கள் சீக்கிய மதத்திற்கு மாறுங்கள் ஒத்துழைக்கிறோம் என்றார்கள். மேலும் எந்த மதத்திற்கு மாறுகிறீர்கள் என்பதை எங்களிடத்தில் தெரிவித்த பிறகே அறிவிக்க வேண்டும் என்ற ஒப்புதலையும் பெற்றார்கள்.

இது தொடர்பாக தலித் தலைவரான M.C.இராஜவுக்கு மூஞ்சே கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் அம்பேத்கரை சந்தித்து பேசியதையும் இஸ்லாம், கிறித்தவம் இவற்றை ஏற்காமல் சீக்கிய மதத்தை ஏற்க வலியுறுத்தியதையும் மூஞ்சே தெளிவாக குறிப்பிட்டுள்ளார். இக்கடிதமானது “அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?” என்ற தலைப்பில் நூலாக வெளி வந்துள்ளது.

இதனடிப்படையில் பார்க்கும்போது அம்பேத்கர் பௌத்தத்தை பரிசீலிக்க வேயில்லை இஸ்லாத்திற்கான மன நிலையிலேயே அவர் இருந்தார் ஓரிடத்தில் அவர் குறிப்பிடும்போது,

ஒடுக்கப்பட்ட மக்களே தனி ஒரு மதத்தை தோற்றுவிக்க வழியில்லை இப்பொழுதுள்ள சமயங்களில் ஒன்றைத்தான் அவர்கள் தழுவியாக வேண்டும் ஒடுக்கப்பட்ட மக்கள் எந்த மதத்தில் சேர வாய்ப்பு மிகுதி என்பதே முதல் வினா எந்த மதத்தில் அவர்களுக்கு ஆதரவு மிகுதியோ அந்த மதத்தில் சேர்வார்கள் என்பது தெளிவு. அவர்கள் தேர்ந்தெடுக்கக் கூடிய சமயங்கள் மூன்று அவை

1. இஸ்லாம் 2.கிறிஸ்த்துவம் 3.சீக்கியம் இவற்றில் ஒடுக்கப்பட்ட மக்களின் தேவைகள் அனைத்தையும் அளிக்க கூடியது இஸ்லாம் நிதிவளத்தை கருதினால் அது இஸ்லாம் சமயத்தில் ஏராளம் உண்டு. சமுதாய நோக்கில் கருதினால் அது நாடு முழுவதும் பரந்து விரவி உள்ளது.

எனவே மதம் மாறுபவர்களை அவர்களே பாதுகாக்க முடியும். தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய முடியும். அரசியல் நோக்கில் கருதினால் இஸ்லாமியர்களுக்கு உள்ள உரிமைகள் யாவும் மதம் மாறும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் கிடைக்கும். மதம் மாறுவதால் சட்டமன்றங்களில் இடம் பெறும் உரிமை பணிகளில் உள்ள உரிமை, ஏற்கனவே உள்ள உரிமை எதிலும் இழப்பு வராது.

கிறிஸ்த்தவர்கள் எண்ணிக்கையில் குறைவாய் இருப்பதால் அவர்களிடமிருந்து நிதிவளம் கிடைக்க வாய்ப்பு குறைவுதான் என்றாலும் அமெரிக்கா இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து ஏராளமாய் பொருளதவி கிடைக்க வாய்ப்புள்ளது. இஸ்லாத்துடனும், கிறிஸ்தவத்துடனும் ஒப்பிடும்போதும் சீக்கியத்தில் அவ்வள வாக ஏதும் இல்லை. நாற்பது இலட்சம் மக்களையே கொண்ட சீக்கிய சமூகத்தினர் நிதியுதவி ஏதும் செய்திட இயலாது. பெரும் பாலோர் பஞ்சாப்பில்தான் வாழ்கிறார்கள். நாடெங்கும் வாழும் ஒடுக்கப்பட்ட மக்க ளுக்கு அவர்களிடமிருந்து சமுதாய ஆதரவு கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. இப்படி மதங்களை குறித்த அவரது ஆய்வில் பௌத்தம் இடம் பெறவேயில்லை.

மதமாற்றம் தான் தீர்வு என்ற அவரது கொள்கைக்கு தடங்கல்கள் ஏற்பட்ட பின்னரே வேறு வழியில்லை என புத்த மதத்தை ஏற்கிறார்.

இப்போது நாம் சிந்திக்க வேண்டிய முக்கியமான ஒன்று என்னவெனில் அம்பேத்கர் பௌத்தத்திற்கு மாறியதால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அம்பேத்கர் விரும்பியவாறு எந்தவொரு மாற்றமும் நடந்துவிடவில்லை. இன்றும் கோடிக் கணக்கான மக்கள் தீண்டாமை கொடுமை யின் பல்வேறு வடிவங்களை பல்வேறு விதமாக நித்தம் நித்தம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. பௌத்தத்தால் அதை அதிர்க்க எந்த அளவிலும் இயலவில்லை. ஏன் பௌத்தத் தையே இந்து மதம் விழுங்கி விட்டது. புத்தர் இந்து மதத்தின் அவதார புருசனாக ஆக்கப்பட்டு விட்டார்.

ஆகவே தீண்டத்தகாதோர் தீண்டத் தகாதோராகத்தான் இன்றும் உள்ளனர். இதைத்தான் அம்பேத்கர் விரும்பினாரா? இதற்காகத்தான் அம்பேத்கர் உழைத் தாரா? அவரின் உழைப்பு முழுவதும் வீணாக் கப்பட்டு விட்டது. இன்று பௌத்தத்திற்கு மாறினார் என்று பேசி எழுதியே காலமும் கடந்து கொண்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் அப்படியே அடிமையாகத்தான் உள்ளனர். இதற்கான தீர்வு இஸ்லாம் மட்டுமே ஆகும். இதற்கு சாட்சிகளாகதான் இந்தியா-பாகிஸ்தான் பங்களாதேஷ் இவைகளில் விரவி வாழும் முஸ்லிம்கள். இவர்கள் சாதியை ஒழித்து மக்கள் கடலில் கலந்து அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ்கின்றனர்.

ராமச்சந்திரா குஹா தனது கட்டுரை யில் கூட அம்பேத்கர் இன்றும் பத்து ஆண்டு கள் வாழ்ந்திருந்தால் அவரது பேச்சு, எழுத்து காரணமாக பல இலட்சம் பேர் பௌத் தத்தை தழுவியிருப்பார்கள். அது இந்தியா வின் சமூக அரசியல் வரலாற்றை புரட்டி போட்டிருக்கும் என்கிறார். அப்படியெனில் பௌத்தத்திற்கு தான் அம்பேத்கர் தேவை பட்டுள்ளார். அம்பேத்கருக்கு பௌத்தம் தேவைப்படவில்லை.

ஒரு கொள்கையானது எக்காலத்திற்கும் எவ்வித சவால்களையும் எதிர்கொண்டு நடைபோடக்கூடியதாக இருக்க வேண்டும். அது பௌத்தத்தில் இல்லை இருந்திருந்தால் ராமச்சந்திர குஹா இப்படி எழுதியிருக்க மாட்டார். இறுதியாக ராமச்சந்திர குஹா மீண்டும் பழைய சாதிய கண்ணோட்டம் மிகப் பாரபட்சமான மனநிலையிலேயே உரைந்துவிட்டோம் என குறிப்பிட்டுள் ளார். இவைகளிலிருந்து நீங்களும் நாட்டு மக்களும் விடுதலையடைய இஸ்லாம் உங்களின் முன் எப்போதும் உள்ளது என்பதை நினைவுபடுத்துகிறேன். ●

இப்படிக்கு

**S.** காதர் மைதீன்

குறிப்பு: இக்கடிதத்துடன் "அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?" என்ற புத்தகம் அனுப்பப்பட்டுள்ளது.



# அனைவரையும் கொல்லுங்கள்...

“அனைவரையும் கொல்லுங்கள், அவர்கள் இன்னும் சாக வில்லை என்றால் அனைவரையும் கொல்லுங்கள்”, “விளையாட்டு முடிந்து விட்டது, அந்த 8 பேரும் இப்போது சாக வேண்டும், தயங்க வேண்டாம். அனைவரையும் கொலை செய் யுங்கள்” இவையெல்லாம் 8 சிமி உறுப்பி னர்கள் சுட்டு கொலை செய்யப்பட்ட விஷயத்தில் காவல்துறையினர் வயர்லெஸ் கருவிகளில் பேசிக் கொண்டவை. இதனை CNN செய்தி நிறுவனமான News 18 ஒளி பரப்பிக் கொண்டிருக்கிறது. இவை காவல் துறை வாகனத்திற்கும் காவல்துறை கட்டுப் பாட்டு அறைக்கும் இடையே நடந்த உரை யாடல்கள் என சி.என்.என் நிறுவனம் கூறி யுள்ளது. இவை இப்போது பரபரப்பாக பரவி கொண்டிருக்கும் செய்தி.

இந்த உரையாடல் உணர்த்தும் செய்தி எந்த ஒரு சிமி உறுப்பினரும் உயிரோடு வந்து உண்மையை சொல்லிவிடக் கூடாது. அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுவிட வேண் டும். அதற்கான நாடகம் சிறைச் சாலையில் இருந்து துவங்கி அவர்களை சுட்டுக் கொல்லும் வரை நடந்தேறி உள்ளது.

இதனை ஒளிபரப்பிய CNN News 18 திடீரென எவ்வித காரணமோ முன்னறி விப்பின்றி Death Politics மரண அரசியல் என்ற அந்த அந்த நிகழ்ச்சியை நிறுத்தியது. மாலை 6.20 மணிக்கு பிறகு அந்த செய்தி சானலை பார்த்தவர்களுக்கு அப்படி ஒரு நிகழ்ச்சி ஒளிபரப்பானதா என்று கூட தெரியாது. எதை யார் சொல்லி News 18 சானலை மிரட்டினார்கள் என்பது தெரிய வில்லை.

இதே செய்தி நிறுவனம் தான் ஆயுதங்கள் ஏதுமின்றி உள்ள சிமி உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதையும் அதனை தொடர்ந்து அசைய முயன்ற காயப்பட்ட நிராயுதபாணியான ஒரு சிமி உறுப்பினர் காவல்துறையை சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்வதையும் படம்பிடித்துக் காட்டி யிருந்தது.

இவை இரண்டுமே காவல்துறையினருக்கு எதிரான போதுமான ஆதாரங்கள் என சட்ட வல்லுனர்கள் கூறுகின்றனர். ஆச்சரி யப்படும் படியான விஷயம் என்னவெனில் இந்த செய்தி நிறுவனம் முகேஷ் அம்பா னிக்கு சொந்தமானது. இந்த செய்தியைப் பற்றி செய்தி தொகுப்பாளர்கள் நிமிடத் திற்கு நிமிடம் விறுவிறுப்பை கூட்டிக்

கொண்டிருந்த போது உள்துறை அமைச்சர் கிரண் ராஜி ஏன் இப்படிப்பட்ட கேள்விகள் எழுப்பப்படுகின்றன என்பது தெரியவில்லை. காவல்துறையையும் அதிகாரிகளையும் இப்படி கேள்விகள் கேட்கக் கூடாது என கூறி சென்றவுடன் சத்தமில்லாமல் கைவிடப் பட்டது.

Carvadaily.com/portal/media-under fire cnn - news - 18 - drops - explosive - bhopal encounter - story - nedtv - punished - for pathankot.

இப்படிப்பட்ட மிரட்டல்கள் வெறும் வாய் வார்த்தைகளாக ஊடகங்களுக்கு செல்வதில்லை இந்துத்துவாவினர் ஆட்சியில் பதான்கோட் தாக்குதலைப் பற்றி செய்தி வெளியிட்டமைக்காக நவம்பர் 9-ம் தேதி ஒளிபரப்பை நிறுத்த மோடி அரசு உத்தரவிட்டுள்ளது. இது NDTV மோடி அரசுக்கு எதிராக செய்திகளை வெளியிட்டுவருவதற்கு எதிராக எடுக்கப் பட்ட நடவடிக்கை என ஊடகவியலாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

NDTV-க்கு இது ஒன்றும் புதிதல்ல. மோடி குஜராத் இனப்படுகொலையை 2002ம் ஆண்டு நடத்திக் கொண்டிருந்த போது அதனை படம்பிடித்து காட்டியமைக்காக குஜராத்தில் கேபிள் ஆபரேட்டர்களுக்கு உத்தரவிட்டு NDTV ஒளிபரப்பை நிறுத்தினார் மோடி.

## கொலை நிகழ்த்தப்பட்ட இடம்

விதிமுறைகளின்படி இவ்வாறு சம்பவங்கள் நடைபெறும் இடங்களை காவல்துறை வேலி அமைத்து பாதுகாக்க வேண்டும். அப்போது தான் ஃபாரன்சிக் துறை அதனை ஆய்வு செய்ய இயலும். ஆனால் வழக்கத்திற்க மாறாக இவ்விடத் திற்கு திருவிழாவைப் போல பொதுமக்கள் சென்று பார்வையிட அனுமதிக்கப்பட்டனர். இதன்மூலம் எல்லா சாட்சியங்களும் அழிக்கப்பட்டுவிட்டன என்கிறது டைம்ஸ் ஆஃப் இந்தியா.

## காவல் துறையால் அழிக்கப்பட்ட வீடியோக்கள்

சம்பவம் நடந்தபோது பலர் அதனை படமெடுத்துள்ளனர். ஆனால் அதில் பலவற்றை காவல்துறையினர் பிடுங்கி அழித்துவிட்டதாகவும் கூறுகின்றனர் இப்பகுதி மக்கள்.

ஆதாரம் : timesofindia.indiatimes.com / india / bhopal - encounter - fire - unguarded - swarmred - by-visistor /articleshow / 55194352.lms ? from = mdr.

## பதில் சொல்லப்பட வேண்டிய சில கேள்விகள்

1) ISO தரத்தில் உள்ள போபால் மத்திய சிறையிலிருந்து சிமி உறுப்பினர்கள் தப்பி ஓட முடியுமா?

2) இதிலும் இந்த சிமி உறுப்பினர்களில் சிலர் ஏற்கனவே சிறையில் இருந்து தப்பி ஓடியவர்கள் என கூறப்படும் நிலையில் இவர் களுக்கு பாதுகாப்பு கூடுதலாக இருந்திருக்க வேண்டும். அவ்வாறிருக்க கரண்டிகளையும் தட்டுகளையும் கொண்டு சிறையை உடைத்துக் கொண்டு தப்பிக்க இயலுமா?

3) அவர்கள் எட்டு பேரும் ஒரே அறை யில் அடைக்கப்பட்டிருந்தார்களா அல்லது வெவ்வேறு அறைகளிலா என்பது ஏன் தெளிவு படுத்தவில்லை? அவ்வாறு தெளிவுப் படுத்துவது என்ன அத்தனை கடினமாக காரியமா அதிகாரிகளுக்கு,

4) ஒருவேளை அவர்கள் ஒரே செல்லில் (அறையில்) அடைத்து வைக்கப்பட்டி ருந்தார்கள் என்றால் யார் அவர்களை ஒரே செல்லில் அடைத்து வைத்தது, ஏன் அவ்வாறு அடைத்து வைத்தார்கள்?

5) ஒரு வேளை தனித்தனி அறைகளில் அடைத்து வைக்கப்பட்டார்கள் என்றால் எவ்வாறு 8 பேரும் ஒரே நேரத்தில் தங்கள் அறைகளின் கதவுகளின் பூட்டுகளை உடைத் துக் கொண்டு வெளியே வர இயன்றது?

6) இந்த கேள்விக்கு தொலைக்காட்சியில் பதிலளித்த மத்தியபிரதேச உள்துறை அமைச்சர் முதலில் அவர்களின் ஒருவன் வெளியே வந்து பாதுகாவரை கொன்று விட்டு, கரண்டிகளை ஆயுதமாக உபயோ கித்து மரங்களையும் கரண்டிகளையும் கொண்டு செய்யப்பட்ட சாவிகளை வைத்து தப்பித்ததாக கூறுகிறார். சோலே படத்தில் தங்கள் விரல்களை துப்பாக்கிபோல் முதுகில் வைத்து தப்பிப்பதை உள்துறை அமைச்சர் பார்த்திருக்க வேண்டும். அதனால்தான் இப்படி கதை விடுகிறார். இதற்கு இன்னும்

சில நல்ல கதைகள் அவருக்கு தேவை.

7) ஒரு வேளை அமைச்சர் சொல்வதைப் போல் ஒரு பாதுகாவலர் கொல்லப்பட்டு மற்றொரு பாதுகாவலரை தட்டுகளையும் கரண்டிகளையும் கொண்டு செய்யப்பட்ட ஆயுதங்களை வைத்து பிணயக் கைதியாக நிறுத்தி தப்பித்தார்கள் என்று ஒரு வாதத் திற்கு வைத்துக் கொண்டாலும் எந்த எச்ச ரிக்கை மணியும் அடிக்கப்படவில்லை. மற் றெந்த பாதுகாவலர்களுக்கும் என்ன நடந் தது என்றே தெரியவில்லை. இதற்கிடையே இச்சிறைச்சாலைக்கு வழங்கப்பட்டுள்ள ISO சான்றிதழ் திரும்பப் பெறப்படவுள்ளது.

8) பின்னர் வந்த அறிக்கைகளில் அவர்கள் மூன்று செல்களில் இருந்து தப்பியதாக கூறப் படுகிறது எனில் முதலில் ஒருவர் தன்னுடைய பாதுகாப்பு அதிகாரியை கொன்றுவிட்டு வெளியே வந்ததாக வைத்துக் கொள்வோம். மற்ற இரண்டு செல்களும் எப்படி உடைக்கப் பட்டன? சாவிகளை கொண்டு திறந்தார்கள் என்றால் அவர்களுக்கு சாவியை கொடுத் தது யார்? அவர்கள் ஒருவேளை கதவுகளை உடைத்தார்கள் என்றால் அது சத்தத்தை எழுப்பவில்லையா? சிறையில் வழமை என்ன வென்றால் பாதுகாவலர் சிறைக்கதவின் சாவியை தன்னுடன் வைத்துக் கொள்வ தில்லை. அது ஜெயிலரிடம் தான் இருக்கும். அப்படியெனில் இது எவ்வாறு நிகழ்ந்திருக்க இயலும்.

9) இந்த கதையில் 35 அடி உயர மதில் சுவரை பெட்சீட்களை கயிறு போல் மாற்றி ஏறி தப்பித்தாக கூறப்படுகிறது. ஆனால் இந்த சுவற்றில் பெட்சீட்கள் பற்றிப் பிடித்துக் கொள்ள எந்த முகாந்திரமுமில்லை. ஒரு வேளை சுவற்றுக்கு அடுத்த பக்கத்தில் ஒருவர் நின்று கொண்டு அதை பிடித்துக் கொண்டி ருந்தால் தவிர இது சாத்தியமில்லை.

10) மதில் சுவர்களின் மேலே மின்சார வயர் கள் பாய்ச்சப்பட்டு இருந்தன. ஆனாலும் 8 சிமி உறுப்பினர்களும் எந்தவிதமான ஷாக் (மின்சார தாக்குதலும்) இல்லாமல் தப்பித் தது எவ்வாறு? ஒன்று எவ்வளவு அதிகமான மின்சாரம் உடலில் பாய்ந்தாலும் அதனை சமாளிக்கும் திறனை சிமி உறுப்பினர்கள் பெற்றிருக்க வேண்டும் அல்லது யாரோ சிலர் மின்சார இணைப்பை நிறுத்தியிருக்க வேண்டும். யார் செய்தது அவ்வாறு?

11) கைதிகள் தப்பிக்கும்போது ஒரு பாது காவலரை கொன்றுள்ளனர். ஒருவரை காயப் படுத்தியுள்ளனர். ஆனாலும் ஒரு சத்தமும் வரவில்லை. சிறைக்குள்ளாகவே இருந்தவர் களுக்கும் இதைப்பற்றி தெரியவில்லை. அலாரம் அடிக்கவில்லை. ஒன்றரை மணி நேரம் கழித்து இறுதியாக அபாய சங்கு எழுப்பப்பட்டது. கண்டிப்பாக நாட்டில் ரஜினிகாந்த் நடித்த படங்களை தடை செய்ய வேண்டும்.

12) சிமி உறுப்பினர்களில் ஒருவர் கால் ஊன மானவர். அவரால் எப்படி சிறை மதிலை தாண்டியிருக்க முடியும்? இது சாத்தியமா?

13) 8 பேரின் வழக்கறிஞரின் கூற்று என்ன வெனில் வழக்கு விசாரணை முடிந்து விட் டது அவர்களுக்கு எதிராக எந்த சாட்சிகளும் இல்லை. எனவே அவர்களுக்கு விடுதலை என்பது உறுதி. தீர்ப்பு இன்னும் சில நாட் களில். அவ்வாறிருக்கு தன் உயிரை பணயம் வைத்து ஏன் 8 உறுப்பினர்களு தப்பிக்க வேண்டும்?

14) இந்த உயர் பாதுகாப்பு சிறைச் சாலை யில் சி.சி.டிவி கேமராக்கள் (கண்காணிப்பு கேமராக்கள்) இருக்கின்றன. அவை 24 மனிநேரமும் வருடம் முழுவதும் இயங்கு பவை. இதனை பார்த்துக்கொண்டே கண் காணிக்க சிலர் நியமிக்கப்பட்டு இருப் பார்கள். ஆனால் இதுவரை பாதுகாப்பு அதிகாரியை கொலை செய்தது குறித்து வீடியோவையோ அல்லது 8 சிமி உறுப்பி னர்கள் தப்பி சென்ற வீடியோவையோ வெளியிடவில்லை. ஏன்?

இன்னும் ஆச்சரியம் என்னவென்றால் குறிப்பிட்ட தினத்தன்று அந்த கேமராக்கள் வேலை செய்யவில்லை என்றும் அது குறித்து விசாரிக்கப்பட்டு வருகின்றது என்றும் கூறி உள்ளனர். ஆனால் இதுவரை அது குறித்து ஒரு தகவலும் வெளிவரவில்லை. அது எப்படி குறிப்பாக மும்பை தாக்குதல் நடைபெற்ற போது சி.எஸ்.டி இரயில்வே நிலையத்தில் இருந்த 16 கேமராக்கள் வேலை செய்ய வில்லையோ அதே போல் இங்கும் கேமராக் கள் வேலை செய்யவில்லை. ஒரு வேளை இதுவும் ஒரு சர்ஜிகல் அட்டாக்கோ?

16) ஆயுதங்கள் எங்கிருந்து வந்தன? மத்திய பிரதேச உள்துறை அமைச்சர் 8 சிமி உறுப் பினர்களிடமும் தட்டுகளும் கரண்டிகளும்




ஆயுதங்களாக இருந்தன என உறுதிப் படுத்தும்போது அவர்களை சுட்டு கொலை செய்ய வேண்டிய அவசியமென்ன? தட்டு களையும் கரண்டிகளையும் ஆயுதங்களாக வைத்திருப்பவர்களை சுட்டுக் கொன்றுதான் பிடிக்க இயலுமா? இதற்கு ஒரேயொரு காரணம் தான் இருக்க முடியும். அது அவர்கள் வாயை திறக்க விடாமல் செய்வது இதைத்தவிர வேறென்ன இருக்க முடியும்?

காவல்துறையினர் கூறிய கதை வேறு விதமாக இருந்தது. சிமி உறுப்பினர்கள் காவல்துறையினரை நோக்கி சட்டனர் பதிலுக்கு காவல்துறையினர் சிமி உறுப் பினர்களை சுட்டுக் கொன்றனர். இதன்படி சிமி உறுப்பினர்களிடம் 3 முதல் 7 நாட்டுத் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் News 18 சானல் வெளியிட்டுள்ள வீடியோ ஆதாரத்தில் அவர்களிடம் எந்த துப்பாக்கியும் இல்லை ஒரேயொருவரிடமிருந்து இவர்களே செருகி வைத்தது போன்ற ஒரு கத்தியை மட்டும் வெளியே எடுக்கின்றனர். மேலும் ஒருவர் உயிருடன் குண்டு காயத்துடன் புரள அவரையும் சுட்டுக்கொல்கின்றனர். இதற்கு சட்டத்தில் இடமுண்டா?

17) என்கவுண்டர் சம்பந்தமாக வெளி யிடப்பட்டுள்ள இரண்டு வீடியோக்களில் ஒன்றில் காவல்துறை அதிகாரி ஒருவர், “5 பேர் நம்மிடம் பேச விரும்புகின்றனர், ஒருவன் தாவி ஓடுகிறான்” என கூறுவது பதிவாகியுள்ளது. இவ்வாறு சரணடைய தயாராக இருந்தவர்களை ஏன் சுட்டுக் கொலை செய்ய வேண்டும்?

18) மற்றொரு வீடியோவில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட உடல்கள் கிடக்க காவல் துறையை சேர்ந்த ஒருவரை ஆயுதத்தை எடுக்கும்படி உத்தரவிட அவர் உத்தர வின்படி இறந்தவரின் இடுப்பில் இருந்து கத்தி ஒன்றை எடுக்கிறார். இது பார்ப்பதற்கே மிகவும் விநோதமாக இருக்கிறது. இது முழுவதும் ஏற்பாடு செய்தது போல் தெரிகிறது.

சுட்டுவிட்டு நின்றிருக்கும் காவலருக்கு ஆடைக்குள் சரியாக ஒருவரின் உடலுக்குள் செருகி வைக்கப்பட்டிருந்த கத்தியைப் பற்றி எவ்வாறு தெரியும்? ஒருவேளை சிமி உறுப்பினர் காவலரை தாக்க முயன்றபோது சுட்டிருந்தால் அந்த கத்தி ஆடைக்குள் இருந்திருக்காது வெளியே விழுந்திருக்கும்.

19) நிராயுதபாணியாக இருக்கும் ஒருவரை

காவலர் சுட்டு கொல்வதும் பதிவாகியுள்ளது. இதற்கான அதிகாரத்தைக் கொடுத்தது யார்? பாதி உயிருடன் இருந்த ஒருவரை காப்பாற்றியிருந்தால் அவர்கள் எப்படி தப்பித்தார்கள்? அவர்களுக்கு உள்ளேயும் வெளியேயும் உதவியது யார்? சிறைச்சாலைக்குள் என்ன நடந்தது போன்ற எல்லா விஷயங்களுக்கும் விடை கிடைத்திருக்கும். ஆனாலும் இந்த விடைகள் கிடைக்க வேண்டாமென்று நினைத்து தான் இந்த 8 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டார்களா?

*20) இந்த கொலைகளை கண்ணால் பார்த்த சாட்சிகள் கூட யாரும் அவர்களிடம் துப்பாகிகள் இருந்ததாக கூறவில்லை. அவர்கள் கற்களை எறிந்ததாகவும் கோஷங்கள் எழுப்பிக் கொண்டிருந்ததாகவும் கூறியுள்ளனர். என்ன கோஷம் என்று தெரியவில்லை என்றும் கூறியுள்ளனர். இவையெல்லாம் அவர்கள் நிராயுதபாணிகள் என்பதை நிரூபிக்கவில்லையா?*

*21) ஒரு வேளை காவல்துறையினர் சொல்வது உண்மையெனில் 8 சிமி உறுப்பினர்களுக்கும் துப்பாக்கிகளை தந்தது யார்? சிறைச்சாலைக்குள் இது கிடைத்தாக இதுவரை எந்த கதையுமில்லை. சிறைக்கு வெளியேதான் நாம் வீடியோவில் பார்க்கும் ஆடைகள், ஸ்போர்ட் ஷூ (விளையாட்டு காலணி), கடிகாரங்கள் இத்யாதி இத்யாதி போன்றவை கிடைத்துள்ளன. அப்படியெனில் இதனை இவர்களுக்கு தந்து இந்த மலை முகட்டின் மீது கொண்டு வந்து விட்டவர்கள் யார்? ஒருவேளை அவர்கள் நாட்டுத்துப்பாக்கிகளை தரவல்லவர்கள், சிறைச்சாலையிலிருந்து தப்ப வைக்க வல்லவர்கள் என்றால் ஏன் A.K.47 ரக துப்பாக்கிகளை தரவில்லை? இப்படி எல்லா தீவிரவாதிகளுக்கும் எதிரான என் கவுண்டர்களில் அவர்களிடம் வெறும் நாட்டுத் துப்பாக்கி கைப்பற்றப்படுவதும் மறைந்து கொள்ளவே முடியாத இடங்களில் அவர்கள் மறைந்திருப்பதும் வாடிக்கையான கதையாகி விட்டது.*

*22) 8 சிமி உறுப்பினர்களும் சிறையிலிருந்து தப்பிய பின்னர் ஏன் தனித்தனியாக பிரிந்து செல்லவில்லை. அண்ணன் தம்பிகளாக இருந்தாலும் கூட அடிமுட்டாள்களாக இருந்தாலும் கூட தப்பி வரும் தீவிரவாதிகள் அதுவும் 8 பேர் ஒட்டுமொத்தமாக ஒரே இடத்தில் இருப்பார்களா? அல்லது தனித்தனியாக பிரிந்து சென்று தங்களை யாரும் அடையாளம் காணாத வண்ணம் பார்த்துக் கொள்வார்களா?*

*23) இவர்கள் வெளியே வந்தவுடன் இவர்களுக்காக துப்பாக்கிகளை ஏற்பாடு செய்து தந்தவர்கள் ஏன் வாகனத்தை ஏற்பாடு செய்து தரவில்லை? ஒரு வேளை வாகனம் ஏற்பாடு செய்யப்படாமல் இருந்தாலும் தன் துப்பாக்கிகளை காட்டி வாகனத்தை கடத்தி செல்வது சுலபமானதோ? ஏன் அவ்வாறு செய்யாமல் எளிதாக காவலர்கள் சுட்டுக் கொல்லும் வகையில் மலை முகட்டின் மீது ஏறி நின்றார்கள்?*

Source: www.indiaresist.com / 22 - questions - bhopal - encounter - police - must - answer - media - isnt - askings.

## காவலரின் காலணியும் சிமி உறுப்பினரின் காலணியும்

விநோதத்திலும் விநோதம் என்ன வென்றால் சுட்டுக் கொலை செய்யபட்ட சிமி உறுப்பினர்கள் ஒருவரின் காலில் இருந்த ஸ்போர்ட்ஸ் ஷூவும் சுட்டுக் கொன்ற காவலர் அணிந்திருந்த ஷூவும் ஒரே மாதிரியானவை. ஒரே நிறத்தை கொண்டவை என்பது தான். ஒரு வேளை மறந்தாற்போல் சிமி உறுப்பினருக்கென வாங்கும்போது தனக்கும் ஒன்றை வாங்கியிருப்பாரோ?

Source: Milligazette, Novemeber, 2 at 10:58 a.m.

## கண்ணால் பார்த்த சாட்சியங்கள் – 40 இலட்சம் பரிசு

இது வரை வரலாற்றில் இல்லாத புதுமையொன்றை மத்திய பிரதேச முதலமைச்சர்



சவ்ஹன் அறிவித்துள்ளார். அதாவது இந்த படுகொலைகளை கண்ணால் பார்த்த சாட்சிகளுக்கு அதாவது அசர்பூரா கிராம வாசிகளுக்கு இந்த படுகொலைகளை செய்ய உதவியதற்காக 40 இலட்சம் ரூபாயை பரிசாக சவ்ஹான் வழங்கியிருக்கிறார். இந்தப் பணம் அவர்களுக்கிடையே சமமாக பிரித்து கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறார்.

இது சட்டத்திற்கு புறம்பானது. சாட்சிகளை விலைக்கு வாங்கும் செயல் என கொதிக்கிறார்கள் உள்ளூர் தலைவர்கள். ஆனால் இந்துத்துவாவாதிகளுக்கு இதை பற்றியெல்லாம் கவலையென்ன?

www.firstpost.com/india/simi - activists - encounter - shivraj - singh - chouhan - govts - offer - money - to - eyewitnesses - 3085798. html.

### ஆயுதங்கள் இல்லாமல் தான் இருந்தார்கள். அதற்கென்ன?

ஆம். நாங்கள் சிமி உறுப்பினர்களை கொல்லும்போது அவர்கள் ஆயுதங்கள் ஏதுமின்றி நிராயுதபாணிகளாகத்தான் இருந்தார்கள். அதற்கென்ன இப்போது என்று கேட்கிறார் தீவிரவாத தடுப்பு படை தலைவர் சஞ்சீவ ஷமி என்பவர்.

"அவர்கள் காவலர்களை நோக்கி சுட வில்லையென்றாலும் காவலர்கள் இத்தகைய




பலத்தை உபயோகிக்கலாம் (அதாவது சுட்டுக் கொல்லலாம்)" என்று NDTVக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

மற்ற காவல்துறை அதிகாரிகளின் கூற்றிற்கு உங்களுடைய கூற்று மாற்றமாக உள்ளதே என்ற கேள்விக்கு நான் என் நிலையில் உறுதியாக உள்ளேன் என்று அவர் கூறினார்.

Source : carvandaily.com / portal /yes - simi - men - were - unarmed - when - shot - so - what - asks - anti - terror - top - cop. https://youtube./3fsx20/fuue ●


# ஹிஜாமா (நபி வழி சிகிச்சை)

(முஸ்லிம்)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "நீங்கள் எவற்றால் சிகிச்சை பெறுகிறீர்களோ அவற்றிலெல்லாம் விட சிறந்தது இரத்தம் உறிஞ்சி (ஹிஜாமா) எடுப்பதாகும்" என்று கூறினாரர்கள்.

## அல்-கர்ளாவி அக்குபஞ்சர் & ஹிஜாமா கிளீனிக்

இடம் : பாரத் நகர் 4வது வீதி, சாரமேடு, கரும்புக்கடை, கோவை -8.

கிளை : L.M.R. வீதி, சின்ன பள்ளிவாசல் எதிரில், கோட்டைமேடு, உக்கடம், கோவை -1.

**உடல் மற்றும் மனம் சம்மந்தமான அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஹிஜாமா செய்யப்படும்.**

**பெண்களுக்கு பெண் தெரஃபிஸ்ட் மூலம் சிகிச்சை அளிக்கப்படும்.**

தொடர்புக்கு : எஸ்.உமர் M.DAT., : 96 55 811 811, 97 89 473 999

# எது முதலில் தடுக்கப்பட்ட சிறு பாவங்கள் ?

பெரும்பாவங்களுக்கு அடுத்த தரத்தில் சிறுபாவங்கள் வருகின்றன. இவை மார்க்கத்தில் தடைசெய்யப்பட்டவைதான். எனினும் பெரும்பாவங்களுக்கு அடுத்து வருபவை.

மார்க்கம் இதை “முஹக்கிராத்” கவனக் குறைவாக மனிதன் செய்துவிடும் பாவங்கள் என்றும் “லமம்” மனதில் தோன்றிமறையும் தீய எண்ணங்களால் செய்துவிடும் பாவங்கள் என்றும் கூறுகின்றது.

எப்போதேனும் இப்படிப்பட்ட தீய எண்ணங்கள் எழுவதை தவிர்க்க இயலாது என்பதனால்தான் பெரும்பாவங்கள் வேறு இவை வேறு என்கிறது மார்க்கம்.

ஐவேளைத் தொழுகை, ஜீம்ஆத் தொழுகை, ரமழான் நோன்பு, ரமழான் சிறப்புத் தொழுகை இவையெல்லாம் சிறுபாவங்களுக்குப் பரிகரமாக அமைகின்றன.

நபி (ஸல்) கூறினார்கள்: “ஐவேளைத் தொழுகைகள், ஒரு ஜும்ஆ அடுத்த ஜும்ஆ வரை ஒரு ரமழான் அடுத்த ரமழான் வரை (ஏற்படும் சிறுபாவங்களுக்குப்) பரிகாரமாகின்றன. பெரும்பாவங்கள் செய்யப்படாமலிருந்தால்” (அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம்)

மேலும் நபி (ஸல்) கூறினார்கள்:- உங்களில் ஒருவரின் வீட்டு வாசலருகே ஒரு நதி ஓடுகிறது. அதில் அவர் தினமும் ஐந்து தடவை குளிக்கிறார் என்றால் அவர் உடலில் கொஞ்சமாவது அழுக்கு இருக்குமா? இதே போல் தான் ஐவேளைத் தொழுகையும் இவற்றைக் கொண்டு அல்லாஹ் பிழைகளைப் போக்குகிறான். (அறிவிப்பாளர்: அபூஹீரைரா (ரழி) (நூல்:-புஹாரி, முஸ்லிம்)

இன்னும் நபி (ஸல்) கூறினார்கள்: “இறை நம்பிக்கையுடனும் நன்மையை எதிர் பார்த்தும் ஒருவர் ரமழான் மாதம் நோன்பு நோற்றால் அவர்முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும். இறை நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் ஒருவர் ரமழான் மாதம் தொழுதால் அவர் முன்னர் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்” (அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரழி) நூல்:- புஹாரி, முஸ்லிம்)

இப்படியாக நாம் செய்யும் நற்செயல்களே நமது சிறுபாவங்களுக்குப் பரிகாரமாகிவிடும் என்று நபி மொழிகள் கூறுகின்றன. அருள்மறையாம் திருக்குர்ஆன் அல்லாஹ் பெரும்பாவங்களைச் செய்யாமலிருந்தால் அதுவே சிறுபாவங்களுக்குப் பரிகாரம் தான் என்கிறான். பாருங்கள்.

“உங்களுக்குத் தடைசெய்யப்பட்ட பெரும்பாவங்களை நீங்கள் செய்யாமலிருந்தால் உங்களின் சிறுபாவங்களுக்கு அதை நாம் பரிகார மாக்குவோம். சங்கைக்குரிய (சுவனம் எனும்) இடத்தில் நாம் உங்களை நுழைய வைப்போம்.” (4:31)



இமாம் யூசுப் அல்கர்தாவி

சிறுபாவங்கள் ஏன் இப்படி எளிதாக மன்னிக்கப்பட்டு விடுகின்றனவென்றால் இதைச் செய்யாதவர்கள் எவருமில்லை எனுமளவுக்கு அனைவரும் இந்த சோதனையில் சிக்கியுள்ளனர் என்பதே காரணம்.

எனவேதான் அல்லாஹ் தன்னுடைய நல்லடியார்களையும் அறப்பணியாளர்களையும் வருணித்திடும் போது இப்படிக் கூறுகிறான்.

“இறை நம்பிக்கை கொண்டும் இறைவனையே முழுக்கச் சார்ந்தும் இருப்பவர்களுக்கு அல்லாஹ்விடமுள்ள (நற் கூலியான)து சிறந்ததும் நிலையானதுமாகும். இவர்கள் எப்படிப்பட்டவர்களென்றால் பெரும்பாவங்களையும் மானக் கேடானவற்றையும் விட்டு விலகியிருப்பார்கள். கோபப்படும் போதெல்லாம் மன்னித்து விடுவார்கள்: (42 :36, 37)

“வானங்களிலும் பூமியிலுமுள்ளவை அல்லாஹ்வுக்கே உரியவை. தீமை செய்தவர்களுக்கு அவர்களின் தீய செயல்களுக்கு ஏற்ப

கூலி தந்திடவும் நன்மை செய்தவர்களுக்கு நற்கூலி தந்திடவும் (வழி கெட்டவர்களையும் நேர்வழி பெற்றவர்களையும் பகுத்து வைத்துள்ளான். நன்மை செய்வோர் யாளென்றால் யார் அறியாமல் ஏற்படும் சிறுபிழைகள் தவிர பெரும்பாவங்களையும் மானக்கேடானவற்றையும் தவிர்த்துக் கொள்கிறார்களோ அவர்கள் தாம் நிச்சயமாக உம் இறைவன் தாராளமாக மன்னிப்பவன். (53 : 31, 32).

ஆனால் பெரும்பாவங்கள் அப்படியல்ல. உளப்பூர்வமான தவ்பா எனும் பாவமீட்சி மூலமே அவை மன்னிக்கப்படும்.

மேற்கண்ட வசனங்களில் பெரும்பாவங்களையும் மானக் கேடானசெயல்களையும் விட்டுவிலகுதல் நல்லடியாக்களின் பண்பாகக் கூறப்பட்டுள்ளது. 'லமம்' எனும் சிறுபாவங்கள் அல்ல.

'லமம்' எனும் வார்த்தைக்கு மூத்த முன்னோடி அறிஞர் கூட்டம் இப்படி விளக்கம் தந்துள்ளது:- "மனக் கிளர்ச்சியால் ஒருதடவை பாவம் செய்துவிட்டாலும் (அது பெரிய பாவமாக இருப்பினும் கூட) மீண்டும் அதைச் செய்யாமலிருப்பது தான் லமம் எனப்படும்."

அறிஞர் அபூசாலிஹ் (ரஹ்) கூறுகின்றார்:- 'லமம்' என்றால் என்னவென்று ஒருவர் என்னிடம் கேட்டார் அதற்கு நான், "மன உந்துதலால் ஒரு பாவத்தைச் செய்பவர் பிறகு அதை மீண்டும் செய்யாமலிருப்பதே" என்று விளக்கமளித்தேன். பிறகு இப்னு அப்பாஸ் (ரழி)விடம் (நான் கூறிய விளக்கம் சரிதானா என்று தெரிந்திட விரும்பி) இதைக் கூறினேன் அதற்கு அவர்கள் "இதைக் கூறிட உனக்கு சங்கைக்குரிய ஒரு மலக் உதவி செய்துள்ளார்" என்று கூறினார்கள்.

'லமம்' என்பது பெரும்பாவங்களுக்கு அடுத்த படியான சிறுபாவங்கள் தான் என்பது பெரும்பாலான அறிஞர்களின் கருத்து இது இப்னுஅப்பாஸ் (ரழி) அவர்கள் சரியெனக்கருதும் கருத்துமாகும்.

புகாரியில் இடம் பெற்றுள்ள அபூஹீரைரா (ரழி) அறிவித்துள்ள ஒரு நபிமொழியை விட 'லமம்' என்பதற்கு வேறொரு சிறந்த விளக்கம் இருப்பதாக நான் கருதவில்லை என்றும் இப்னு அப்பாஸ் (ரழி) கூறியுள்ளார்கள்.

இதோ அந்த நபிமொழி: "ஒவ்வொரு மனிதனும் எவ்வளவு விபச்சாரம் செய்வான் என்பதை அல்லாஹ் அம்மனிதன் மீது விதித்துவிட்டான். சந்தேகமின்றி அதை அவன் செய்தே தீருவான். தீய பார்வை கண்ணின் விபச்சாரம். தீய பேச்சு நாவின் விபச்சாரம். உள்ளம் (தீமையை) கற்பனை செய்து விரும்புகிறது. மர்ம உறுப்பு அதை உண்மையாக்கிவிடுகிறது அல்லது பொய்யாக்கி விடுகிறது" என்று நபி (ஸல்) கூறினார்கள். (நூல் : புஹாரீ)

மற்றொரு அறிவிப்பில் இப்படி இடம் பெறுகிறது வாசகம்.

"தீய பார்வை இரு கண்களின் விபச்சாரம் தீயதைக் கேட்பது இரு காதுகளின் விபச்சாரம். தீய பேச்சு நாவின் விபச்சாரம். பிடிப்பது கையின் விபச்சாரம். நடப்பது காலின் விபச்சாரம்" என்று கூறினார்கள். (நூல் : முஸ்லிம்)

இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறுகிறார். ஆபாசப் பார்வை, தீய தொடுதல், முத்தமிடுதல் போன்ற சிறுபாவங்களே 'லமம்' எனப்படும் என்று பெரும்பாலான அறிஞர்கள் கருதுவதே சரியான கருத்து.

அபூஹுரைரா (ரழி) இப்னு மஸவூத் (ரழி) இப்னு அப்பாஸ் (ரழி) உள்ளிட்ட நபித் தோழர்களும் மஸ்ரூக், ஷீஅபி (ரஹ்) உள்ளிட்ட இரண்டாம் தலைமுறை அறிஞர்களும் இதே கருத்தில் தான் உள்ளனர்.

"மனக்கிளர்ச்சியால் ஒரு பாவத்தைச் செய்து விட்டு (அது பெரும்பாவமாக இருப்பினும்கூட) மீண்டும் அதே பாவத்தைத் திரும்பச் செய்யாமலிருப்பதே லமம்" என்றொரு விளக்கத்தை முன்னர் கூறியிருந்தோம்.

அந்த விளக்கமும் இப்போது நாம் கூறுவதும் முரண்பாடானவை அல்ல. லமம்' என்பது இருவகையுண்டு என்று விளங்க வேண்டும்.

அல்லது, "வாழ்க்கையில் ஒரேயொரு தடவை பெரும்பாவம் செய்தவன் மறுபடி அந்தப் பாவத்தைச் செய்யவில்லை எனில் அவனை சிறுபாவங்கள் செய்தவனுடனே சேர்க்கின்றனர் அபூஹுரைரா இப்னு அப்பாஸ் (ரழி-அன்ஹுமா) இருவரும். ஒரு பாவத்தைத் திரும்பத் திரும்ப மரமுரண்டாகச் செய்பவனே பெரும்பாவி என அவ்விருவரும் கருதுகின்றனர் என்றும் இதற்கு விளக்கம் தரப்படுகின்றது.

இது நபித் தோழர்களின் ஆழமான சட்டப் புலமைக்கும் தேர்ந்த அறிவுக்கும் சான்றாக விளங்குகிறது.

ஆம்! ஒருவன் ஒரு தடவை இரண்டு தடவை மூன்று தடவை குற்றம் செய்யும் போது கூட அல்லாஹ் நீக்குப் போக்காகவே விட்டு விடுவான். தொடர்ச்சியாக பல தடவை பெரும்பாவம் செய்பவனையே தண்டிக்கிறான். (நூல் : மதாரிஜூஸ் ஸாலிகீன் இப்னுல் கய்யிம் (ரஹ்)

இங்கே ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது. தீய தூண்டல்கள் (லலம்), சிறுபாவங்கள் இவற்றை மார்க்கம் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை என்பதற்காக அவற்றை அப்படி விட்டு விட்டதாகக் கருதக் கூடாது. சிறுபாவங்களைத் தொடர்ச்சியாகச் செய்வதும் அவற்றை அலட்சியமாகக் கருதுவதும் கடுமையான எச்சரிக்கைக் குரியவை.

சிறிய பாவங்களை 'சிறுபாவங்கள் தானே!' என்றெண்ணிச் செய்யும் அவை பெரியதாகி விடும். மேலும் சிறுபாவங்கள் பெரும்பாவங்கள் நோக்கித் தள்ளுகின்றன. பெரும்பாவங்கள் (குஃப்ர்) இறை மறுப்பை நோக்கித் தள்ளுகின்றன.

பெரும்பாலான மனிதர்கள் நரகத்துக்குச் சென்றிடக் காரணம் தீமைகளை அலட்சியமாகக் கருதுவதே.

எனவே தான் நபி (ஸல்) கூறினார்கள்: “அலட்சியமாகச் செய்யப்படும் சிறுபாவங்களை விட்டும் உங்களை எச்சரிக்கிறேன். அலட்சியமாகச் செய்யப்படும் சிறுபாவங்களுக்கு ஒரு உதாரணம் உண்டு. ஒரு பயணக் கூட்டம் ஒரு பள்ளத்தாக்கில் இறங்கித் தங்கியது. ஒருவர் ஒரு மரக்குச்சி எடுத்து வந்தார். இன்னொருவர் இன்னொரு குச்சி கொண்டு வந்தார். கடைசியில் அவர்கள் தங்களுக்கு ரொட்டி சமைத்திடப் போதுமான அளவுக்கு விறகு கொண்டு வந்துவிட்டனர். இப்படித்தான் அலட்சியமாகச் செய்யப்படும் பாவங்கள் (சிறுகச் சிறுகச் சேர்த்து) செய்தவனை அழித்துவிடுகின்றன” (அறிவிப்பாளர் : ஸஹ்ல் பின் ஸஅத் (ரழி) நூல் : அஹ்மது)

மேலும் நபி (ஸல்) கூறினார்கள்: “அலட்சியமாகச் செய்யப்படும் சிறு சிறு பாவங்களை விட்டும் உங்களை எச்சரிக்கிறேன். ஒரு மனிதனிடம் மொத்தமாகச் சேர்ந்து அவனை அவை அழித்துவிடும். பயணத்தின் வழியில் ஒரு திறந்த வெளியில் இறங்கித் தங்கிய ஒரு கூட்டத்தில் சிலர் விறகு பொறுக்கிடச்சென்று ஒவ்வொருவரும் குச்சிகளைக் கொண்டு வந்தனர். நிறைய விறகுகள் சேர்ந்து குவியலானது. பிறகு நெருப்புமூட்டி தம்மிடம் உள்ளதை சமைத்துக் கொண்டனர் (அறிவிப்பாளர்: இப்னு மஸ்வூத் (ரழி) நூல் : அஹ்மது)

பெருமானார் (ஸல்) கூறும் இந்த உதாரணம் புரிகிறதா?

பெரும் நெருப்பு மூழ்வதற்கு சிறு சிறுகுச்சிகள் நிறைய இருப்பது போதும் என்பது போல் அலட்சியமாகச் செய்யப்படும் சிறு சிறு பாவங்கள் ஒருவன் நரகம் சென்றிடப் போதுமானது.

அப்துல்லாஹ் பின் மஸ் ஆத் (ரழ்) கூறினார்கள். ஒரு முஸ்லிம் தான் செய்யும் பாவங்களை மலை போல் கருதுவான். தன் மீது அது விழுந்து விடுமோ என்று அஞ்சுவான். ஒரு நயவஞ்சகன் தன் பாவங்களை தன் மூக்கில் அமர்ந்திருக்கும் ஈ போலக் கருதுவான். தன் கையை அங்குமிங்கும் வீசினாலேயே அது போய்விடும் என்பான் (நூல் : புஹாரீ)

பெரிய குற்றங்களை சிறிதென எண்ணுவதும் அவற்றை அலட்சியமாகக் கருதுவதும் பாவத்தின் அளவை அதிகப்படுத்திவிடும். சிறுபாவங்களைக் கூட பெரும் பாவங்களாக்கி விடும் என்று இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தமது இஹ்யா உலூமித்தின் என்ற நூலின் 'தவ்பா' பாடத்தில் கூறுகின்றார்கள்.

பாவங்களை சிறிதாகக் கருதும் மனோபாவம் ஒரு மனிதனிடம் எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்றால் எந்தப் பாவங்களுக்கெல்லாம் மன்னிப்புக் கிடைக்காது என்று அஞ்சப்படுகிறதோ அந்தப் பாவங்களைச் செய்கின்றவன் 'இதெல்லாம் அவ்வளவு பெரிய பாவமல்ல' என்று சொல்லத் தொடங்கி விடுகின்றான்.

மேலும் ஒரு பாவத்தைச் செய்து விட்டு அதைப் பெருமையாகப் பேசித் திரிவதும் பெரும்பாவமே.

“என் சமுதாயத்தின் பாவிகள் மன்னிக்கப்படுவர். பாவம் செய்துவிட்டு அதைப் பகிரங்கமாகப் பேசித் திரிவோரைத் தவிர” என்று நபி (ஸல்) கூறியதாக ஒரு ஆதாரப்பூர்வமான நபி மொழி உண்டு.

இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறுகின்றார். இங்கே ஒரு நுட்பமான விஷயத்தை நாம் கூர்மையாக கவனிக்க வேண்டும். பெரும்பாவத்தைச் செய்துவிட்ட ஒருவன் அதை நினைத்து வெட்கப்படுகிறான்.

அஞ்சுகிறான். மாபாவம் செய்துவிட்டதாக எண்ணுகிறான். இதனாலேயே அது சிறு பாவங்களுள் ஒன்றாக ஆகிவிடுவதுண்டு.

ஆனால் ஒருவன் ஒரு சிறுபவாத் தைச் செய்கிறான். அதை நினைத்து வெட்கப் படவுமிலிலை. கவலைப்படவுமில்லை. தண்டனையை நினைத்து அஞ்சவுமில்லை. அதை அலட்சியமாகவே எண்ணுகிறான் என்றால் இதனாலேயே அது பெரும்பாவ மாகவும் பயங்கரமான பாவமாகவும் இதற்கு ஒரு பாவம் இல்லை என்ற அளவிலும் ஆகிவிடும் (நூல் : மதாரிஜூஸ் ஸாலிகீன்)

இன்னொன்றையும் கவனியுங்கள் ஒரே பாவம் அதைச் செய்பவன் யார்? எங்கே செய்தான்? என்பதைக் கவனித்து அது பெரும்பாவமாகவோ மிகப்பெரும் பாவமா கவோ மாறுகிறது.

பிரம்மச்சாரி செய்யும் விபச்சாரமும் திருமணமானவன் செய்யும் விபச்சாரமும் ஒரே மாதிரி கருதப்படுவதில்லை.

இளைஞன் செய்யும் விபச்சாரமும் வயோதிகன் செய்யும் விபச்சாரமும் ஒரே மாதிரி கருதப்படுவதில்லை.

பக்கத்துவீடுக்காரனின் மனைவியுடன் விபச்சாரம் செய்வது, ஜிஹாதில் பங்கேற்கச் சென்றிருப்பவரின் மனைவியுடன் விபச் சாரம் செய்வது, புனிதமான உறவு முறை (மஹ்ரம்) பெண்ணிடம் விபச்சாரம் செய்வது, ரமழான் மாதத்தின் பகல் பொழுதில் விபச்சாரம் செய்வது, ஹரம் எனும் புனித பூமியில் விபச்சாரம் செய்வது ஆகிய விபச்சாரங்கள் மற்ற விபச்சாரங்கள் போன்றதல்ல.

ஒவ்வொரு பாவத்துக்கும் அதற்கேற்ற விசாரணை, கணக்கு அல்லாஹ்விடம் உண்டு. இதனை அடுத்த இதழில் பார்ப்போம். ●

# சித்தாமூர் சமணர்கள் அழிக்கப்பட்ட வரலாறு

இந்தியாவின் பழமையான நாகரிகங்களில் மிக முக்கியமானதும் பழமை யானதுமான நாகரிகம் சமணர்களின் நாகரிகம் கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பாக இந்தியா வின் பெரும்பான்மை மதமும் சமண மதமே. சமீபத்தில் மதுரைக்கு அருகிலுள்ள பள்ளிச்சந்தை திடலில் அகழ் வாராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப் பட்ட 2500 வருடத்திற்கு முந்தைய பழமை யான நாகரிகங்கள் கூட சமணர்கள் வாழ்ந்த நாகரிகங்கள் என்பது ஆராய்ச்சியாளர் களின் கண்டுபிடிப்பு.

சென்ற நூற்றாண்டுக்கு முன்பு வரை சமணர்களின் பாரம்பரிய வரலாற்றை எடுத்து சொலவதற்கான ஆர்வம் பல ஆராய்ச்சியாளர்களுக்கு இருந்திடவில்லை. தங்களது சொந்த வரலாறு முழுமையாக தெரியாத சமூகமாகவே சமணர்கள் (ஜெய்னர்கள்) வாழ்ந்து வந்தனர். அந்த காலக்கட்டத்தில் சமணர்களின் வரலாற்றை பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இலக்கியங்கள் அடிப்படையிலும், கல் வெட்டுகள் அடிப்படையிலும் முதன் முதலில் ஆதாரப்பூர்வமாக நூலாக எழுதி தொகுத்து வெளியிட்டவர் ஆசிரியர் ஏகாம்பனாதன். 1985ல் இந்நூல் ஜினகஞ்சி மடத்தினரால் வெளியிடப்பட்டது.

சமணர்களின் கோவில்கள், மடங்கள், கலாச்சாரங்கள் பெரும்பாலும் அழிக்கப் பட்ட போதும் சித்தாமூர் மடம் மட்டும் இன்றும் ஜெயினர்களின் மடமாக இன்றள வும் இயங்கி வருகிறது. இந்தியாவின் பழமை யான வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டி யவர்கள் கண்டிப்பாக இந்நூலை கடந்து வந்தாக வேண்டும்.

பல்வேறு முக்கிய தகவல்களை கொண்ட ஆவணப்படுத்தப்பட வேண்டிய நூலாய் இந்நூல் விளங்குகிறது. குறிப்பாக சமண மதம் பரவுதலில் தொடங்கி அதனை அழிக்க சைவ, வைணவ மதங்கள் மேற்கொண்ட நடைமுறைகள், முகலாயர்கள் காலத்திலும் ஆங்கிலேயரின் காலத்திலும் சமண மதம் என்ன நிலையில் இருந்தது என்பதை நடுநிலையுடன் ஆதாரத்துடன் ஆசிரியர் விளக்குகிறார்.

கல்வெட்டுகள் அடிப்படையில் சமண மதம் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பரவ தொடங்கியுள்ளது என எடுத்துகொண்டா லும் இலக்கியங்கள் அடிப்படையில் ஆராயும் போது கி.பி. 4ம் நூற்றாண்டிலேயே சமண மதம் பரவியதை அறிய முடிகிறது (பக்-2). சமண மதம் பெருமளவில் பரவியதை அடுத்து பரவுதலை தடுக்க வைணவ மதத் தவர்கள் சமணத்திற்கு எதிராக சமயவாதங் களை மேற்கொண்டு வைணவ மதத்தை புதுப்பித்தனர். அதன் பிறகு சமணத்தை அழிக்க சமண அறிஞர்களை அழித்தனர். மடங்களை அழித்தனர்.

அன்றைய நடைமுறையில் நான்கு வேதங்களையும் கற்றறிந்த பிராமணர்களுக்கு சதுர்வேதிமங்கலம் எனும் ஊரை தானமாக வழங்கும் பழக்கம் இருந்துள்ளதையும் மேலும் இவ்வூரில் உள்ளவர்கள் யாரும் அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டிய அவசியமில்லை என்பதையும் ஆதாரங்களுடன் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

அன்றைய நடைமுறையில் பிராமணர்களின் ஆதிக்கமே முழுமையாக இருந்துள்ளதை இதன் மூலமாக எளிதாக உணர முடிகிறது. இப்புத்தகத்திலிருந்து "சதுர் வேதிமங்கலம் என்பது நான்கு வேதங்களையும் கற்றறிந்த பிராமணர்களுக்கு தானமாக வழங்கப்படும் ஊராகும் (பக்-19) சதுர் வேதிமங்கலம் எனும் பெயரிடப்பட்டு, வரி செலுத்தப்பட வேண்டாத சர்வமானிய ஊராக திகழ்ந்திருக்கின்றது. அதாவது நான்கு வேதங்களையும் கற்றறிந்த (சதுர் வேதி) பிராமணர்களுக்கு எந்த வித வரியும் செலுத்தப்பட வேண்டாத தானமாக இவ்வூர் அளிக்கப் பெற்றிருக்கின்றது என்பது புலனாகும். (பக்-72)."

முஹம்மதியர்கள் ஆட்சியில் சமண மடங்களுக்கு வழங்கப்பட்டு வந்த 100 வராகன் மானியங்கள் 40 வராகனாக அன்றைய ஆட்சியாளர்களுக்கு தெரியாமலேயே குறைக்கப்பட்டது. அத்தனை மோசடிகளுக்கும் பின்னால் இருந்தவர்கள் பிராமணர்கள். ஆட்சியாளர்களுக்கு தெரியாமல் மானியங்களை குறைக்கும் அளவுக்கான அதிகாரத்தை பிராமணர்கள் பெற்றிருந்தார்கள். இப்புத்தகத்திலிருந்து" முகம்மதியராட்சியில் சித்தாமூர் மடத்திற்கு வழங்கப்பட்டு வந்த 100 வராகன் மானியங்கள் நவாப்புகளாட்சியில் 40 வராகன் அளவிற்கு குறைக்கப்பட்டது. (பக்-21). முகம்மதியர் ஆட்சிக்கு உதவியாக இருந்த பிராமணர்களால், ஆட்சி செய்தவர்களுக்கு தெரியாமலயே சித்தாமூர் மடத்திற்கு கொடுக்கப்பட்டு வந்த 100 வராகன் மானியங்களை 40 வராகன் அளவிற்கு குறைக்கப்படலாயிற்று (பக் 86).

இன்று நமக்கு கிடைக்கும் பழங்கால சின்னங்கள் அனைத்துமே கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை. அதற்கு முந்திய காலத்திய சிலைகள் எதுவும் கிடைக்கவில்லை (பக்-36) காரணம், அதற்கு முந்தியவை முழுவதும் அழிக்கப்பட்டிருக்கிறது. உடைக்கப்பட்டிருக்கிறது.

சமணர்களின் கோவில்களை அழித்து அங்கிருந்த சிலைகளை வைத்து வைணவ மதக்கடவுள்களின் கோவில்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு நாயக்க மன்னர்கள் முழுக்க முழுக்க உதவியாக இருந்துள்ளனர் என்பதைனையும் பல கோவில்களின் சிலைகளை மையப்படுத்தி தெளிவான ஆதாரங்களை கொண்டு ஆசிரியர் நிருபித்துள்ளார்.

ஒட்டுமொத்த வரலாறுகளை அழித்ததில் முன்னின்றவர்கள் பிராமணர்கள் என்பதும் அந்த பழியை சாதுரியமாக அடுத்தவர்களின் மேல் போட்டதனையும் இந்த நூலின் மூலம் அறியலாம்.

**புத்தகத்தில் உள்ள சிறு குறைகள்**

பெரும்பாலும் சராசரி புத்தக பிரியர்கள் படிப்பதற்கு இலகுவான எழுத்து நடையும் புரிந்து கொள்ள ஏதுவான வார்த்தைகளும் இருந்தால் தான் புத்தகத்தை முழுதும் படித்து முடிப்பார்கள். ஆனால் இப்புத்தகத்தை பொறுத்த வரையில் ஆசிரியர் கொஞ்சம் கடினத்தை கையாள்கிறார் (எழுதிய காலம் 1980கள் என்பதால் இருக்கலாம்).

இப்புத்தகத்தை பாதியில் நிறுத்துபவர்கள் வரலாற்றையே தவறாக புரிந்து விடும் அபாயம் உள்ளது. உதாரணமாக பக் 21ல் முகம்மதியர்கள் சமணர்களுக்கு எதிராக இருந்தனர் என்று கூறி விட்டு பக்.86 ல் பிராமணர்களே ஆட்சியாளர்களுக்கு தெரியாமல் செய்தனர் எனும் உண்மையை கூறுகிறார். இதை போல இன்னும் சில இடங்களிலும் தொடர்கிறது.

**மதிப்புரை:**

வரலாற்றை முற்றிலும் மாற்றி எழுதப்பட வேண்டிய கட்டாயம் நமக்கு உள்ளது. பல சமண கோவில்கள் இன்று பிராமணர்களால் இந்து கோவில்களாக மாற்றப்பட்டுள்ளது. பல நூறு சமண கோவில்கள் அழிக்கப்பட்டுள்ளது. பல்லாயிரம் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளது. இத்தனையும் செய்தவர்களுக்கு வரலாற்றில் தானமாக ஊர்களும் வரி செலுத்த வேண்டாத சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளது.

காலங்காலமாக அவர்கள் செய்த கொடுமைகளுக்கு அடுத்தவர் பெயர்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இன்று இந்துத்துவ பாசிச அமைப்பினரால் கோவில்கள் இடிக்கப்பட்டதாக கூறும் கோவில்கள் பெரும்பாலும் அவர்களாலேயே இடிக்கப்பட்டது என்பதை இந்த நூல் ஆவணமாக எடுத்து சொல்கிறது.

இந்நூலை மக்களிடம் எடுத்து செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம், தவறான வரலற்றை திருத்தி எழுதும் பொறுப்பு நம்மை விட யாருக்கு அதிகம் இருக்கிறது?.

எழுதுவோம்... ●



# பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சியும்

நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் மற்றும் வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாக வருடந்தோறும் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி நடத்தப்படுவது வழக்கம். இதற்கு முன்பாக நாம் நடத்தி வந்த மனித நீதி பாசறை என்ற அமைப்பின் மூலம் நாம் இந்நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தினோம். சுற்று வட்டார பகுதி எங்கும் வசிக்கும் மாற்று மத சகோதரர்களை அழைத்து அவர்களுக்கு விருந்து உபசரித்து, இஸ்லாத்தை எத்திவைத்து, எதிரிகளால் இஸ்லாத்திற்கு ஏற்படுத்தப்பட்ட இழிநிலையை அம்மக்களின் ஐயங்களுக்கு பதிலுரைக்கப்பட்டு அம்மாற்று மத சகோதரர்களை அறவணைத்துக் கொள்வதே இந்த பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி.

குமரி மாவட்டம், நாகர்கோவில் வடக்கு சூரங்குடி கிளை சார்பாக கடந்த அக்டோபர் 30–2016 அன்று மறவன் குடியிருப்பு மாதா மஹாலில் வைத்து மாலை 5 மணிக்கு நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் செயல்வீரர்கள் சார்பாக நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சி அறிமுகத்திற்காக அறிவிப்பு பலகைகள், பிட் நோட்டீஸ்கள் மூலம் முதற்கட்ட வேலைகளும் முடிவடைந்தது. ஓர் நினைவூட்டலாக 30.10.2016 அன்று காலை சுமார் 7.45 மணியளவில் வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாக இரண்டு இளைஞர்கள் ரஸூல் மற்றும் ரிஸ்வான் ஆகியோர் நாகர்கோவில் கோர்ட் ரோடு எஸ்.எல்.பி. ஸ்கூல் முன்பாக காலை தன் நடைபயிற்சி மேற்கொள்ளும் பொதுமக்களுக்கு பிட் நோட்டீஸை வினியோகம் செய்து கொண்டி ருந்தார்கள். அப்போது தான் நடந்தது காவல் துறை சூழ்ச்சியின் அந்த கோர சம்பவம்.

### காவலரின் வாக்குவாதம்

வினியோகிக்கப்பட்ட பிட் நோட்டீசை ஆர்வத்துடன் வாங்கி சென்ற பொதுமக்கள் மத்தியில் கருப்பு ஆடு நுழைந்ததுபோல் நடை பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஓர் சிவில் உடை அணிந்த காவலர் ரிஸ்வான் என்னும் இளைஞனிடம் சென்று பிட் நோட்டீசை கொடுப்பதை நிறுத்துமாறு வாக்குவாதத்தில் ஈடுபட்டார். ரிஸ்வான் அது வெறும் நிகழ்ச்சி அறிவிப்பிற்கான பிட் நோட்டீஸ்தான் என்று கூறவே இருவருக்கும் வாக்குவாதம் அதிக

# காவல் துறையின் சூழ்ச்சியும்



பீதியை கிளப்பி தன்னுடன் மற்றொரு காவலரை கோட்டார் காவல் நிலையத்திருந்து அழைத்து வந்து வேப்பமூடு அருகில் பிட் நோட்டீஸ் வினியோகம் செய்து கொண்டிருந்த அந்த இரண்டு இளைஞர்களையும் சட்ட விரோத மாக கைது செய்து கோட்டார் காவல் நிலையம் அழைத்துச் சென்று இருவரையும் அமர வைத்துவிட்டு அங் கிருந்தும் மாய மானார் சிவில் உடை காவலர்.

## கோட்டார் சார்பு ஆய்வாளரின் மிரட்டல்

கோட்டார் சார்பு ஆய்வாளர் முத்துமாரி. குமரி மாவட்ட நீதி அமைதிக்கான மக்கள் இயக் கத்தின் பொருப்பாளர் பாசித்தை கைபேசியில் தொடர்புகொண்டு இந்த அரங்க நிகழ்வை நடத்தக் கூடாது என்று மிரட்டியுள்ளார். மேலும் அரங்க நிகழ்ச்சிக்கு அனுமதி பெறாமல் நிகழ்ச்சியை நடத்தினால் தானும் கைது செய்யப் படுவீர்கள் என்ற மிரட்டலும் விடப்பட்டது. அரங்க நிகழ்வுக்கு அனுமதி பெறத் தேவை யில்லை என்றும் மேலும் இதுபோன்ற எத்தனை யோ அரங்க நிகழ்வுகள் இந்த அமைப்பு சார்பாக நடத்தப்பட்டுள்ளதாக எடுத்துக்கூறியும் அவரது மிரட்டல் தனியவில்லை. அந்த இரண்டு இளைஞர் களையும் விடுவிக்கவில்லை. அந்த இரண்டு இளைஞர்கள் மீது பொய் வழக்கு போடு வதற்கான எல்லா முயற்சியும் எடுக்கப்பட்டது.

## மாதா மஹால் செயலாளர் அழைப்பு

வழக்கு போடுவதற்காக தகுந்த ஆதாரம் இல்லை என்பதனால் பெருநாள் சந்திப்பு நிகழ்ச் சியை தடுத்து நிறுத்த சதிவேலையில் இறங்கினார் சார்பு ஆய்வாளர் முத்துமாரி மற்றும் கோட்டார் காவல் எழுத்தாளர் முத்துகிருஷ்ணன். இவ்விரு வரும் ஓர் காவலரை அனுப்பி மாதா மஹால் செயலாளரை வரவழைத்து சட்ட விரோதமாக கைது செய்யப்பட்ட இருவரையும் காட்டி இவர்கள் தமிழ்நாட்டின் மிகப்பெரும் தீவிரவாத அமைப்பை சேர்ந்தவர்கள், இவர்களின் நிகழ்ச்

மானது. இதை கண்ட ரஸூல் ஓடி வரவே அந்த சிவில் உடை அணிந்த காவலர் தன் இரு சக்கர வாகனத்தில் மாயமானார்.

## பொதுமக்களின் எச்சரிக்கை

பிட் நோட்டீஸ் வினியோகம் செய்த இரண்டு இளைஞர்களையும் அங்கே நடைபயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொதுமக்கள் அழைத்து உங்களிடம் வாக்குவாதம் ஈடுபட்ட இந்த காவலர் ஓர் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு அடிவருடியாக வேலை செய்பவர். நீங்கள் மேற்கொண்டு இங்கே விநியோகிக்க வேண் டாம். அர்.எஸ்.எஸ்.க்கான விசுவாசத்தை காட்டு வதற்காக உங்கள் மீது எதேனும் நடவடிக்கை எடுக்கலாம். இங்கிருந்து சென்று விடுங்கள் என்று அந்த அடையாளம் தெரிந்த சிவில் உடை அணிந்த காவலரைக் குறித்து எச்சரிக்கை செய்து அங்கிருந்து அவ்விருவரையும் அனுப்பி வைத்தனர். இருவரும் கலைந்தும் ஓயவில்லை அந்த காவலரின் காவி வெறி.

## இரண்டு இளைஞர்களும் சிறை பிடிப்பு

பணியில் இல்லாத அந்த சிவில் உடை காவலர் கோட்டார் காவல் நிலையம் சென்று இரண்டு தீவிரவாதிகள் பிட் நோட்டீஸ் கொடுப்பதாக

சிக்கு நீங்கள் ஏன் அனுமதி கொடுத்தீர்கள் என்று மிரட்டியுள்ளார் கோட்டார் காவல் நிலைய எழுத்தாளர் முத்துகிருஷ்ணன்.

மேலும் ஐந்து நபர்களுக்கு மேல் அரங்கத்தில் கூடினால் காவல்துறை அனுமதி பெற்றுத்தான் நிகழ்ச்சி நடத்த வேண்டும். நீங்கள் எப்படி அனுமதி கொடுத்தீர்கள் என்றும் செயலாளரை மிரட்டியுள்ளார். மேலும் நிகழ்ச்சி நடைபெற்றால் மத பிரச்சனையும் ஏற்படும் என்று அதிகார எச்சரிக்கையும் விடுத்துள்ளார். எவ்வித பிரச்சனையும் இல்லாமல் நடைபெற இருந்த இந்த நிகழ்ச்சி இந்த காவலர்களின் கபட நாடகம் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்த விடாமல் தடுப்பதற்கான ஓர் சூழ்ச்சி.

## இரண்டு வாலிபருக்கும் அடி உதை

தான் எதற்காக கைது செய்யப்பட்டோம் என்று தெரியாமல் காவல் நிலையத்தில் அமர்ந்திருந்த இருவரையும் அருள் என்ற காவலர் தன் கைபேசி மூலம் புகைப்படம் எடுக்க முற்பட்டார். இருவரும் நாங்கள் என்ன குற்றம் செய்தோம் எங்களை ஏன் புகைப்படம் எடுக்கிறீர்கள் என்று கேட்டு தன் கைகளால் தன் முகத்தை மறைக்க முற்பட்டுள்ளார்கள். இதைபார்த்த சார்பு ஆய்வாளர் முத்துமாரி அவ்விருவரையும் தகாத வார்த்தைகள் ஏசி நீங்கள் குமரி மாவட்டத்தில் கிறிஸ்தவர்களையும், முஸ்லிம்களையும் ஒன்று படுத்துவிடுவர்களோ என கூறி ரஸூலின் இரு கண்ணங்களிலும் அறைய துவங்கினார். பின்பு ரஸூலை கீழே தள்ளி தன் பூட்ஸ் காலால் விலா புரத்திலும், கால்களிலும் உதைத்துள்ளார், அதை பார்த்த ரிஸ்வான் ஐயா அவரை ஏன் அடித்து உதைக்கின்றீர்கள் என்று கேட்டதற்கு ரிஸ்வானுக்கும் அடியும், உதையும் மழமழவென விழுந்தது. இப்படி இவ் விருவரையும் அடித்து, உதைத்து மிரட்டி, அருள் என்பவரால் கைபேசி மூலம் புகைப்படம் எடுக்கப்பட்டு தன் மேல் அதிகாரிக்கு அனுப்பினார்.

## நான் அவனில்லை

நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தின் குமரி மாவட்ட தலைவர் ஜின்னா தன் வழக்கறிஞருடன் காவல் நிலையம் சென்று சட்ட விரோதமாக கைது செய்யப்பட்ட இருவரையும் சந்திக்க முற்படும்போது அவர்களை விடுவிக்க


ஏக இறைவனின் அழகிய திருப்பெயரால்....

**பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி**

ஆதாம்(அலை), ஏவ்வாள்(அலை), வாரிசுகளே மனித இனம் இன்று மதம், இனம், நிரம், குலம், கோத்திரம் போன்ற பிரிவுகளால் பிரிந்து கிடக்கின்றார்கள். இருவரில் இருந்து தோன்றிய மக்களில் ஏன் இவ்வளவு பிரிவுகள்? எப்படி இவை ஏற்பட்டது? மனித குல எதிரியான சாத்தானின் சூழ்ச்சி வலையே இது. அவனது சதியை தகர்க்க வேண்டிய கட்டாயம் நம் அனைவருக்கும் உள்ளது. அதற்கான விடைகானவே வரும் 30.10.2016 அன்று பெருநாள் சந்திப்பு எனும் நிகழ்வு நடைபெற உள்ளது அது சமயம் அனைத்து சமுதாய சகோதர சகோதிரிகளும் குடும்பத்தோடு கலந்துக் கொண்டு பயனடையுமாறு அன்பாய் அழைக்கிறோம்.

இடம்
மாதா மஹால்
மறவன்குடியிருப்பு,
ஈத்தாமொழி மெயின் ரோடு.

காலம் இறைவன் நாடினால்
அக்டோபர்
30– 2016
ஞாயிறு

நேரம்
மாலை
5.00
மணி

தலைமை
சகோ. **எஸ்.சுலைமான்** ( வடக்கு சூரங்குடி )

நிகழச்சி அறிமுக உரை
சகோ. **மு.குலாம் முஹம்மது** M.A-Jmc ( ஆசிரியர், வைகறை வெளிச்சம்; மாத இதழ் )

சிறப்பு பேச்சாளர்
சகோ. பாஸ்டர். **எஸ்.விஜயன்** (எ) உமர் ஃபாருக்

நன்றியுரை
சகோ. **அ.ஜின்னா** ( குமரிமாவட்ட தலைவர், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் )

நிகழ்ச்சி அழைப்பு & அமைப்பு

**நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்.** சென்னை 81481 29887
வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் – வடக்கு சூரங்குடி கிளை
தொடர்புக்கு. 98944 54188, 99435 65635, 99428 05771, 94431 77687

பெண்களுக்கு தனி இட வசதி செய்யப்பட்டுள்ளது


முடியாது. இது கியூ–பிரான்ச் உளவுத்துறையின் ஆணையின் கீழ் கைது செய்துள்ளோம். சார்பு ஆய்வாளர் வெளியே சென்றுள்ளார். தங்களுக்கு எதுவும் தெரியாது எல்லாம் சார்பு ஆய்வாளர் முத்துமாரி சார்ந்ததே என்று கூறி அங்கு இருக்கும் காவலர் நழுவியுள்ளார். பின்பு வைகறை வெளிச்சம் பத்திரிகையின் நிபுணர் ஷமீம் அவர்கள் க்யூ பிராஞ்ச் காவலர் குமாரை சந்தித்து இந்த சட்ட விரோத கைதுக்கு க்யூ பிராஞ்ச்தான் காரணம் என்றுரைத்த சார்பு ஆய்வாளர் முத்துமாரியின் பதிலுக்கு க்யூ பிராஞ்சின் கைதுக்கான காரணத்தை வினவினார். அதற்கு க்யூ பிராஞ்ச் காவலர் குமார் நான் அவனில்லை என்ற பாணியில் நாங்கள் எந்த ஆணையும் பிறப்பிக்கவில்லை எல்லாம் சார்பு ஆய்வாளர் முத்துமாரிதான் இதற்கு பதில் கூற வேண்டும் என்று கூறி லாவகமாக அங்கிருந்து தப்பி சென்று விட்டார்.

## இரு இளைஞர்களும் விடுதலை

சுமார் மாலை 5.00 மணிவரை சட்டவிரோத காவலில் வைக்கப்பட்டிருந்த இரு இளைஞர்களும் பெரும் போட்டத்திற்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டனர். அவ்விருவர் மீதும் பொய் வழக்கு போடுவதற்கு எல்லாவிதமான ஆயத்தமும் எடுக்கப்பட்டது. எந்த குற்றம் செய்யாத இருவர் மீது வழக்கு தொடர்ந்தால் சார்பு ஆய்வாளர்

மீது தனி வழக்கு போடப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்படுவீர்கள் என்ற கடும் எச்சரிக்கை வழக்கறிஞர் மூலம் எடுத்துரைக்கப்பட்டதால் பொய் வழக்கு போடுவது கைவிடப்பட்டது. அவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## அல்லாஹ்வின் சூழ்ச்சியே வென்றது

எத்தனை தடங்கள் வந்தாலும் குறித்த நேரத்தில் நிகழ்ச்சியை நடத்துவது நீதி அமைதிக் கான மக்கள் இயக்கத்தின் வழக்கம். மாலை நான்கு மணியானது. மாதா மஹால் செயலாளரை காவல்துறையினர் மிரட்டியுள்ளதால் மாதா மஹால் அரங்க கமிட்டி சற்று அச்சத்தில் உரைந் திருந்தது. அவர்கள் நீங்கள் அனுமதி பெற்று விடுங் கள் என்ற கோரிக்கையை வைக்கத் துவங்கினர்.

ஆனால் அரங்க நிகழ்வுக்கு காவல்துறை அனுமதி தேவையில்லை என்பதும் அவர்கள் அறியாமல் இருக்கவில்லை. சார்பு ஆய்வாளர் முத்துமாரியின் மிரட்டலை இந்த கோரிக்கைக்கு காரணம். உடனே அரங்கம் மாற்றப்பட்டது. வடக்கு சூரங்குடி ஜமாஅத்துக்கு உட்பட்ட எஸ்.டி.எம்.ஓ. சமூக நல கூடத்தில் வைத்து குறித்த நேரத்தில் நிகழ்ச்சி ஆரம்பமானது.

நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் குமரி மாவட்ட தலைவர் அ. ஜீன்னா அவர்கள் கிராஅத் ஓதி ஆரம்பித்தார்கள். இம்தியாஸ் அஹ்மத் அவர்கள் தலைமை தாங்கினார்கள், வடக்கு சூரங்குடி சகோதரர் எஸ். சுலைமான் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். சிறப்பு பேச்சாளராக பாஸ்டர் எஸ். விஜயன் எனற் உமர் பாரூக் அவர்கள் பைபிளுக்கும் குர்ஆனுக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துறைத்தார்கள். மேலும் எம்.சி.முஹம்மது அவர்களும் சிறப்புரையாற் றினார்கள்.

மாதா மஹால் அரங்கத்திற்கு வருகைதந்த பார்வையாளர்கள் எஸ்.டி.எம்.ஓ சமூக நலக் கூடத்திற்கு சிறப்பு வசதிகொண்டு மாற்றப் பட்டார்கள்.

தடையை மீறி நடைபெற்ற இந்த பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு சுமார் 140 பேர் கலந்துகொண்டனர். அதில் 32 பேர் கிறிஸ் தவர்கள், 13 பேர் இந்துக்கள். இதில் மார்த்தாண் டத்தில் இருந்து 6 பேர் இரு சக்கர வாகனத்தில் வந்து கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனை த்து சகோதரர்களுக்கு இரவு நேர விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைவரும் நன்றியும், பாராட்டும் தெரிவித்தனர். மாற்று மத சகோதரர்களுக்கு இலவசமாக குர்ஆனும், தாஃவா புத்தகங்களும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை தடுப்பதற்கான முயற்சியை மேற்கொண்ட உளவுத்துறை, காவல்துறை சூழ்ச்சியை அல்லாஹ்வின் சூழ்ச்சியே வென்றது.

**(நபியே!) அவர்களுடைய (விரோதமான) பேச்சு உம்மை சஞ்சலப்படுத்த வேண்டாம் ; நிச்சயமாக அனைத்து (வல்லமையும்) கண்ணியமும் அல்லாஹ்வுக்கே உரியது ; அவன் (யாவற்றையும்) செவியேறுபவனா கவும் நன்கறிபவனாகவும் இருக்கின்றான். ●**

**– அல்குர்ஆன் : 10:65**

# நமது காஷ்மீர் இளைஞர்கள் நமது இராணுவத்தினரின் உயிரைக் காப்பாற்றினார்கள்

காஷ்மீரின் தலைநகர் சீரிநகர், இங்குள்ள நாள்வழிச்சாலையில் நமது இராணுவத்தின் வண்டி ஒன்று வேமாகச் சென்று கொண்டிருந்தது. வண்டியை ஓட்டிக்கொண்டிருந்த சிப்பாயின் கட்டுப்பாடி லில்லாமல் வண்டி – வேன் ஓர் மரத்தில் மோதி கவிழ்ந்தது. அதனுள் ஓர் சிப்பாய் சிக்கிக் கொண்டார். இராணு வத்தினர் சிலபல முயற்சிகளை மேற்கொண்டு உள்ளனர். இதனைக் கண்ட நமது இளைஞர்கள் சிலர் தங்கள் வாகனத்தையும் இதர தளவாடங்களையும் கொண்டுவந்துமு அந்த சிப்பாயைப் பக்குவமாக மீட்டனர்.

இந்த நிகழ்ச்சியைப் பார்த்தி சில பொதுமக்கள் நிகழ்ச்சியை வீடியோ எடுத்து யூ ட்யூபிலும், வாட்ஸ் ஆப்பிலும் ஆகியவற்றின் வழியாக நாட்டு மக்கள் அனைவருக்கும் செய்தியைத் தெரிவித்தனர். நமது இராணவும் தொடர்ந்து அந்த மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டாலும் அந்த மக்கள் தங்கள் பெருந்தன்மையி லிருந்து கீழே இறங்கிடவில்லை என்பதையே இந்த நிகழ்ச்சியி காட்டுகின்றது.



# கற்காலம் ஒரு வரலாற்றுப் பொய்

### அறிவியல் ஆதாரம் இல்லாத பரிணாமக் கோட்பாடுகள்:

மனிதர்களும், குரங்குகளும் ஒரே மூதாதையிலிருந்து தோன்றியவர்கள் தாம் எனக் கூறும் பரிணாமவியலாளர்களிடம் இந்தப் பரிணாமம் எப்போது தோன்றியது என கேள்வி கேட்டால், "எங்களுக்கு தெரியாது" என்றே பதிலளிக்கின்றனர். உதாரணமாக பரிணாமவியலாளரும், புதை படிம இயல் ஆராய்ச்சியாளருமான எலைனே மோர்கன் (Elaine Morgan) இதை ஒத்து கொள்கிறார்.

### மனித பரிணாமத்தின் முக்கிய நான்கு மர்மங்களான

1) மனிதன் ஏன் இரு கால்களை கொண்டு நடக்கிறான்?
2) ஏன் அவன் ரோமங்களை இழந்தான்?
3) ஏன் அவர்கள் தங்கள் மூளை திறனை அதிகரித்து கொண்டார்கள்
4) ஏன் பேசுவதற்கு கற்றுக் கொண்டான்?

இவை அனைத்திற்கும் அவர்களிடமிருந்து வரும் ஒரே பதில் " (நமக்கு) தெரியாது" இதே போன்ற எண்ணற்ற கேள்விகளுக்கும் இதே பதில்தான்.

### தொன்மையான நாகரீகத்தில் எஞ்சிய பிரமிப்பூட்டும் படிமங்கள்:

August comte, Herbert Spenzer மற்றும் Lewis Henry Morgan ஆகியோரால் பல்வேறு சமயங்களில் மொழியப்பட்ட இந்த தவறான சமூக கலாச்சார பரிணாம தத்துவம் இவர்களுக்கு பின் சார்லஸ் டார்வின் கொள்கையுடன் ஒருங்கிணைந்தது. மனிதன் நாகரீக முதிர்ச்சியற்ற நிலையில் இருந்து மேன்மையான நாகரீகத்தை அடைந்தான் என்ற இக்கொள்கையின் விளக்கம்,

*19*-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப் பட்டுவிட்டது. இதன் தாக்கம் முதல் உலகப் போர் நடைப் பெற்ற சமயத்திற்கு பின்னர் அதிகரிக்க தொடங்கியது.

இனவாதம், காலனி ஆதிக்கம் வளருவதற்கு இது அறிவியல் தளத்தை ஏற்படுத்தியது. இந்த போலியான அறிவியல் தளத்தினால், வெவ்வேறு கலாச்சாரங்கள் மற்றும் நிறங்கள் மற்றும் புறத்தோற்றத்தில் வித்தியாசமான மக்கள் மனித நேயமற்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஆதம் பெர்குசன், ஜான் மில்லர் மற்றும் ஆதம் ஸ்மித் போன்ற எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் எல்லா சமுதாயங்களும் நான்கு அடிப்படை நிலைகளை கடந்து வருகின்றன என்றார்கள்.

1) வேட்டையாடுதல், சேமித்தல்
2) நாடோடி வாழ்க்கை (pastoralism and nomadism)
3) வேளாண்மை
4) வர்த்தகம்

பரிணாமவியலாளர்களின் கூற்றுப்படி, குரங்கிலிருந்து மாறிய மனிதன் வேட்டை யாடினான், எளிய கருவிகளை கொண்டு பழங்களை சேகரித்தான். அவனது அறிவும் திறமையும் வளர வளர, செம்மறி ஆடுகளை யும், இதர கால்நடைகளையும் வளர்க்க ஆரம் பித்தான். மேலும் அவனுடைய அறிவும் திறமையும் வளர வளர அவற்றை வேளாண் மைக்கு பயன்படுத்தினான். இறுதியாக பொருள்களை பரிமாற்றம் செய்யவும், வர்த்தகத்திலும் பயன்படுத்தினான்.

எனினும் தற்போதைய தொல்பொருள் இயல், மனித இயல் கண்டுபிடிப்புகள் இக் கதையை அதாவது சமூக கலாச்சார பரிணாம தத்துவத்தின் அடிப்படைகளை ஆதாரமற்றவை என நிரூபித்தது. மனிதன் விலங்கில் இருந்து தோன்றினான் என்ற சித்தரிப்பு "பொருள் முதல் வாதிகளின்" முயற்சிகளே.

வேட்டையாடியோ அல்லது வேளாண் மையில் ஈடுபட்டோ மனிதன் வாழ முடியும் என்பதை வைத்து அவனை மிகவும் பின் தங்கியவன் என்றோ அல்லது மேன்மையடைந் தவன் என்றோ கூறமுடியாது. வேறு வார்த் தைகளில் சொல்வதானால், எந்த சமூகமும் வேட்டையாடியதில்லை. ஏனென்றால் இது பின்தங்கிய நிலை. மனிதக் குரங்கின் எண்ணத் தோடு நெருக்கமானது.

வேளாண்மையில் ஈடுபட்டார்கள் அதனால் அவர்கள் நாகரீக முதிர்ச்சியற்ற நிலையை கடந்து வந்து விட்டார்கள் என்றும் எடுத்துக் கொள்ள முடியாது. எந்த சமுதாயத் தின் செயல்பாடுகளும் அதில் வாழ்ந்தவர்கள் மற்ற எந்த உயிரினங்களிடமிருந்து தோன்றி னார்கள் என்று உணர்த்தவில்லை. அச்செயல் பாடுகள் பரிணாம மாற்றத்தின் மூலமும் நிகழவில்லை.

இன்றும் தொழில் நுட்பத்தில் பின் தங்கிய வகுப்பினர்கள் வேட்டையாடுவதிலும் சேமிப்பதிலும் மட்டுமே ஈடுபடுகிறார்கள். எனவே அவர்கள் மனிதர்களை போன்றவர்கள் அல்ல என்று கூறிட முடியாது.

இந்த ஒப்புமை பத்தாயிரம் வருடங்களுக்கு பின் உருவாகும் சமுதாயத்திற்கும் பொருந்தும். நூறாயிரம் வருடத்திற்கு முன் வாழ்ந்தவர் களுக்கும் பொருந்தும்.

முந்தையவர்கள் நாகரீக முதிர்சியற்றவர் களும் அல்ல. பின் உருவாக்கப் போகிறவர்கள் மிகவும் மேன்மை அடைந்தவர்களும் அல்ல.

சமூகங்களின் வாழ்க்கை நடைமுறைகளை ஆதாரமாக கொண்டு உருவாக்கப்படும் பரி ணாம முறையிலான நாகரீகங்களின் வரலாறு ஒரு அறிவீனமான அணுகுமறை. இந்த அணுகு முறை பொருள்முதல் வாதிகளின் தவறான விளக்கங்களை சார்ந்தே உள்ளது.

இவ்விளக்கம் கற்களை கருவிகளாக பயன் படுத்தியவர்கள் குரங்கு மனிதர்கள், அவர்கள் உறுமல் சப்தத்தை எழுப்பக் கூடியவர்கள், மூட்டு கால்களை வளைத்தும் தலைகளை குனிந்தும் நடப்பவர்கள். விலங்கின நடத் தைகளை கொண்டவர்கள் எனக் கூறுகிறது. எனினும் இவர்களின் அறிவுத் திறமைகளை பற்றி சொல்வதற்கு எவ்விதமான தடயமும் கண்டுபிடிக்கப்படவில்லை. இவை எல்லாமே யூகங்கள் மட்டுமே.

ஏற்கனவே கூறியது போல, இன்றைய கலைப் படைப்புகள் 10,000 வருடங் களுக்கு பின் தோன்றும் மக்களுக்கு கிடைக்கப் பெறுகிறது. அந்த மக்களிடம் போதுமான தகவல்கள் இல்லைஎன்றால், அவர்கள் நம்மை பற்றியும் நம் தொழில் நுட்பங்களை பற்றியும் தவறான விளக்கங்களை தரக்கூடும்.

எனவே அறிவியல் ஆதாரத்தை அடிப் படையாக கொண்டு உருவாக்கப்பட்டதல்ல இந்த சமூக பரிணாம கருத்துக்கள். இக் கொள்கையின் அடிப்படைகள் தவறானது. அறிவுப்பூர்வமான பார்வையை இவை கொண்டிருக்கவில்லை. உண்மையில் இது குரங்கை போன்ற மனம் கொண்டவர்களால் உருவாக்கப்பட்டது.

ஹார்வர்ட் யூனிவரிசிட்டியை சார்ந்த மானுடவியலாளரான வில்லியம் ஹோவெல் இதை இப்படி ஒத்துக் கொள்கிறார். மனிதனின் உடல் சம்பந்தப்பட்ட கேள்விகளை விட அவனுடைய குணங்கள் சார்ந்த கேள்விகளும், அதற்கான அறிவியல் உண்மைகளை உறுதி செய்வதிலும் சிக்கல் இன்னும் அதிகமாகிறது.

குணங்கள் படிமங்களாக கிடைப்பதில்லை என்கிறார் அவர். பண்டைய காலத்தில் என்ன நடந்தது என்பதை அறிய நமக்கு கிடைத்த ஆதாரங்கள் மிகச்சிறியது. இது போன்ற கருதுகோள்களை சோதித்து அறிவதும் சாத்தியமில்லை.

தற்போது அதிகமான சமூக அறிவியலாளர்கள் பரிணாமத் தத்துவத்தில் காணப்படும் தவறுகளை ஒத்துக்கொண்டுள்ளனர். பின்வரும் கருத்துக்களில் சமூக பரிணாமக் கொள்கை அறிவியலோடு முரண்படுகிறது எனக் கூறுகின்றனர்.



*1)* இன பாகுபாடு கொள்கையோடு இது நெருங்கிய தொடர்புடையது வெவ்வேறான சமூகங்களை பற்றி குழப்பமான விளக்கங்களை கொடுக்கிறது. உதாரணமாக, மேற்கத்திய சமூகமே மிகவும் நாகரீகமானது என்று நினைத்து கொள்ளுதல்.

*2)* எல்லா சமூகங்களும் ஒரே மாதிரியான முறைகளை கையாண்டு ஒரே மாதிரியான முன்னேற்ற பாதைகளில் செல்கின்றன. ஒரே குறிக்கோள்களை பரிமாற்றம் செய்கின்றன.

*3)* பொருள் முதல்வாத கண்ணோட்டத்துடனே சமூகங்களை நோக்குதல்

*4)* சமூக பரிணாம கொள்கை (புதிய) கண்டுபிடிப்புகளோடு பெரிய அளவில் முரண்படுகின்றது. நாகரீகம் உடையவர்கள் என்று கருதப்பட்டவர்களை விட நாகரீக முதிர்ச்சியற்றவர்கள் என்று கருதப்பட்டவர்கள், மிகுந்த நாகரீகத்துடனும் ஆன்மீக பண்புகளோடும் வாழ்ந்திருக்கின்றனர். மறு வார்த்தையில் சொல்வதானால் அவர்கள் அமைதியையும், சமத்துவத்தையும் விரும்பியிருக்கின்றார்கள், அவர்களின் பேணுதலான உணவு பழக்கத்தினால் ஆரோக்கியத்துடனும் உறுதியுடனும் இருந்திருக்கின்றார்கள்.

மேற்கூறிய கருத்துகள் ஒன்றை நமக்கு தெளிவாக உணர்த்துகின்றது. அறிவியல் கண்டுபிடிப்புகளோடும், நிகழ்வுகளோடும் முரண்படுகிறது சமூகப் பரிணாம தத்துவம். பொருள் முதல் வாதிகளின் மூளையில் உதித்த தவறான விளக்கங்களே இந்த தத்துவம். பண்டைய நாகரீகத்தின் படிமங்களும், கலை வேலைப்பாடுகளும் இந்த தத்துவத்தில் உள்ள தவறுகளை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

**பரிணாமத்தை மறுதலிக்கும் கண்டுபிடிப்புகள்:**

பண்டைய நாகரீகத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் "நாகரீக முதிர்ச்சியற்ற நிலையில் இருந்து நாகரீகமான நிலைக்கு முன்னேற்றும்" என்ற தத்துவத்தை ஆதாரமற்றதாகிறது. வரலாற்றை நாம் ஆய்வு செய்தால், மனிதன் அறிவுத் திறமையோடும் புதியதை ஆக்கும் திறனோடும் வாழ்ந்திருக் கின்றான் என்ற உண்மை புலப்படும்.

நூறாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர்களின் செயல்பாடுகளும், அவர்கள் விட்டு சென்றவைகளும் பரிணாம தன்மைக்கு எதிரான கருத்துகளை கொண்டிருக்கின்றன.

மேலும் அவற்றை நோக்கும்போது அவர்கள் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி தங்களது தேவைகளை பூர்த்தி செய்து நாகரீகத்தை கட்டியெழுப்பி உள்ளனர் என்பது புரியும்.

# நூல் விமர்சனம்

நூல் : கோவை கலவரத்தில் எனது சாட்சியம்

ஆசிரியர் : ஏ. வி. அப்துல் நாசர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

வெளியீடு : ஆழி பப்ளிஷர்ஸ், 1-ஏ. திலகர் தெரு, பாலாஜி நகர், துண்டலம், ஐயப்பன் தாங்கல், சென்னை-600 077.

பக்கங்கள் : 128, விலை ரூ.100/

தொடர்புக்கு : 9884155289

நாட்டின் பல்வேறு பகுதிகளில் குண்டுகளை வெடிக்க வைத்து பழியை முஸ்லிம்கள் மீது போட்டு வருகின்றன இந்துத்துவ சக்திகள். இந்த உண்மைகளை 'வைகறை வெளிச்சம்' பல ஆண்டுகளாகப் பறை சாற்றி வந்திருக்கிறது.

குண்டுகளை வெடிக்க வைத்து முஸ்லிம்கள் மீது பழியைப் போட்டு விட்டால் அதை பொதுச் சமூகம் குறுக்கு விசாரணை செய்யாமல் நம்பி விடும் என்ற நம்பிக்கையை இந்துத்துவ சக்திகள் பெற்றதற்குக் காரணமானவை இரண்டு குண்டு வெடிப்புகள்.

1993 ஜனவரியில் மும்பையில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு ஒன்று.

1998 பிப்ரவரியில் கோவையில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு மற்றொன்று.

இந்த இரண்டு குண்டு வெடிப்புகளையும் முஸ்லிம்களிலுள்ள தீவிர மனப் போக்குடைய சிலர் தான் செய்துள்ளனர் என எல்லோரையும் நம்பிடச் செய்தார்கள்.

நோக்கம் இந்து-முஸ்லிம் பிரிவினையின் மீது தம் அரசியலை நிறுவிட வேண்டும் ஆட்சியைப் பிடித்திட வேண்டும் என்பதே! இதில் அவர்கள் பெரிய அளவில் வெற்றியும் பெற்றுள்ளார்கள்.

நாட்டை உலுக்கிய குண்டு வெடிப்புகளுள் ஒன்றான கோவை 1998 பிப்ரவரி குண்டு வெடிப்பையும் அதற்குத் தூண்டுகோலாக இருந்த 1997 நவம்பர் படுகொலை (அரசின் மொழியில் அது ஒரு கலவரம்) பற்றியும் விரிவாகப் பேசுகிறது இந்நூல்.

"உண்மை ஒரு புல்லாங் குழலின் இசையைப் போன்றது. பொய் தாரை தப்பட்டை ஓசையுடன் பெரும் முழக்கமாய் வருகிறது. தாரை தப்பட்டையின் சப்தங்களுக்கு மத்தியில் புல்லாங்குழலின் இசை கேட்பதில்லை" என்ற கவிக்கோ அப்துல் ரஹ்மான் அவர்களின் வரிகளை தமது என்னுரையில் மேற்கோள் காட்டும் நூலாசிரியர் நாசர் அவர்கள் இந்நூலை தாம் எழுத வேண்டிய தேவை என்ன என்பதை இப்படிக் கூறுகிறார்.

"புதையுண்டு போன அந்த உண்மைகளை எனது அனுபவத்தின் வாயிலாக மீட்டெடுக்கும் முயற்சியே இந்தப் புத்தகமாகும்."

மேலும் அவர் "முஸ்லிம் சிறைவாசிகளின் துயரத்துக்குப் பின்னாலுள்ள அரசியலை இக்கால முஸ்லிம் இளைஞர்கள் உணர்ந்து கொண்டு அது போன்ற தவறுகளில் இனி ஈடுபடக் கூடாது என்பதற்காகவும்"

"ஒரே மண்ணின் மக்களிடையே மதவெறி ஊட்டப்பட்டு இத்தனை நாட்களாக மாமன் மச்சான்களாக உறவால் பழகிய சக மனிதனின் மீது எப்படி மத ரீதியான வன்மம் திணிக்கப்பட்டிருக்கிறது என்பதை சாமானிய இந்துக்கள், உணர்ந்து கொண்டு மதவெறிக் கும்பல்களின் இலக்கிற்கு பலியாகிவிடக் கூடாது என்பதற்காகவும்" என்று நூலை எழுதியதற்கான காரணத்தைக் கூறுகிறார்.

நாசர் அவர்கள் இந்நூல் வழியாக தாம் அறிந்த உண்மைகளை பாரபட்சமின்றிப் பதிவு செய்திருக்கிறார்.

அவர் சொல்பவை, சாலைப் போக்குவரத்துக் காவலர் செல்வராஜ் பணியிலிருந்த போது முஸ்லிம் இளைஞர்கள் அவரை முன்பகை காரணமாக கொன்றிருக்கின்றனர். இதில் சந்தேகத்துக்குரிய நபர்களை அல் உம்மா இயக்கம் காவல்துறையிடம் ஒப்படைத்துள்ளது. இதை ஒரு இந்துவை முஸ்லிம்கள் கொன்று விட்டனர் என்ற ரீதியில் இந்துத்துவவாதிகள் பரப்பினர். காவல் துறை அதற்கு உடந்தை. உண்மையில் காவலர் செல்வ




ராஜ் இந்துவல்ல. கிறிஸ்தவர். அவரின் பெயர் அந்தோணி செல்வராஜ்.

அந்தோணி செல்வராஜ் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் காவல்துறை யார் மீதெல்லாம் சந்தேகப்படுகிறதோ அவர்களை 'அல்உம்மா' காவல் துறையிடம் குறித்த நேரத்தில் ஒப்படைத்த பிறகும் சரணடைந்தவர்கள் மீது முறைப்படி வழக்குப் போடுவதற்கு பதிலாக திட்டமிட்டு கோவையைக் கலவர பூமியாக்கியது காவல் துறை தான்.

காவலர் அந்தோணி செல்வராஜ் படுகொலை செய்யப்பட்ட மறுநாள் (நவம்பர் 30) காலை கோவை மாநகர கமிஷ்னர் மாசான முத்து தலைமையில் முன்னூறுக்கும் மேற்பட்ட காவலர்கள் ஊர்வலமாகச் சென்று அரசு மருத்துவமனை அருகில் மறியலில் ஈடுபட்டு வன்முறை வெறியாட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த ஊர்வலத்தின் பின் பகுதியில் இந்து மக்கள் கட்சியினரும், அதன் தலைவர் அர்ஜுன் சம்பத்தும், இந்து முன்னணியினரும், அதிரடி ஆனந்தன் போன்றவர்களும் சென்றனர்.

இந்த ஊர்வலத்தில் பங்கேற்றவர்களும் காவல்துறையினரும் தமிழக அரசுக்கும் முதல்வருக்கும் எதிராக தீவிரமாகக் கோஷமிட்டனர்.

இந்த ஊர்வலத்துக்கு முன்னர் கமிஷனர் மாசானமுத்து தலைமையில் ரிசர்வ் போலீஸ் வளாகத்தில் நடந்த காவல் துறையினரின் கூட்டத்துக்கு வெளிப்படையாகவே இந்து முன்னணி தலைவன் ராமகோபாலன் அழைத்து வரப்பட்டிருக்கிறார். அப்போது அந்த வளாகத்திலிருந்த முஸ்லிம் காவலர்களை வெளியேற்றி விட்டு வெறுப்பூட்டும் வகையில் மாசானமுத்து பேசியிருக்கிறார்.

இதன் பிறகு காவல்துறையும் இந்துத்துவ சக்திகளும் இணைந்து முஸ்லிம்களின் சொத்துக்களை, கடைகளை சூறையாடியிருக்கின்றனர்.

இதை எதிர்த்து முஸ்லிம்கள், வீட்டை விட்டு வெளியே வருவார்கள் என்று காத்திருந்த காவல்துறை. அப்படி வந்தவர்கள் போலீசைக் கண்டதும் திரும்பிச் செல்ல முயற்சித்துள்ளனர். அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டுள்ளார் கமிஷ்னர்.

(அதாவது இப்படியெல்லாம் நடக்க வேண்டும் என்பது ராமகோபாலனும் கமிஷ்னர் மாசானமுத்துவும் காவல் துறையினருக்கு வழங்கிய அறிவுறுத்தல். அதன்படியே எல்லாம் நடந்தது)

இப்படி காவல் துறையும் இந்துத்துவ சக்திகளும் இணைந்து செய்த படுகொலைகளில் பத்தொன்பது முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். பத்து முஸ்லிம்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

சுமார் ஐநூறு கோடி மதிப்பிலான சொத்துக்கள் அழிக்கப்பட்டன மூன்றே நாட்களில். இதனால் பொதுச் சமூகம் முஸ்லிம்கள் மீது அனுதாபப்பட்டது. நவம்பர் 97 படுகொலைகள் குறித்து விசாரிக்க நீதிபதி கோகுல கிருஷ்ணன் ஆணையம் அமைத்தது அரசு.

இதிலிருந்து சுமார் இரண்டரை மாதங்களுக்குப்பின் 1998 பிப்ரவரி 14ம் தேதி கோவையில் குண்டுகள் வெடித்தன. மொத்தம் 11 இடங்களில் 13 குண்டுகள் வைக்கப்பட்டன.

ஆர்.எஸ்.புரம், சிவானந்தா காலனி, பா.ஜ.க. அலுவலகம், அரசு பொது நல மருத்துவமனை ரயில்வே ஸ்டேஷன், ஷண்முகம் சாலை, கனிராவுத்தர் வீதி, உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வெடித்த குண்டுகளில் மொத்தம் 58 பேர் உயிரிழந்தனர்.

பிப்ரவரி 17ம் தேதி அல்அமீன் காலனியில் வெடித்த குண்டில் 4 முஸ்லிம் சிறுவர்களின் உயிர்கள் பறிபோயின.

நவம்பர் படுகொலைகள் குறித்து விசாரிக்க தமிழக அரசு நியமித்த கோகுல கிருஷ்ணன் ஆணையம் அது குறித்த முழுத் தகவல்களை வெளியிட்டுவிட்டால் தங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டு விடும் என்று காவல் துறை அஞ்சியது.

தங்களின் படுகொலைகளின் மீது ஆணையத்தின் பார்வை குவிந்நதிருப்பதைத் திசை திருப்ப காவல்துறை முயன்றது. அதாவது தாம் செய்த தவறை மறைக்க அதைவிடப் பெரிய தவறு ஒன்று நடக்க வேண்டும் என்று எண்ணினர். குண்டு வைக்கும் ஏற்பாடுகளைக் கவனித்தனர்.

குண்டு வைப்பது குறித்த எல்லாத் தகவல்களும் காவல்துறைக்குத் தெரிந்திருந்த போதும் அவர்கள் அதைத் தடுக்காமல் குண்டுகளை வெடிக்க விட்டனர்.

ஆனால் காவலர் குடியிருப்புப் பகுதிகளிலும் காவல் நிலையச் சுற்றுச் சுவர்களிலும் அத்வானி பேசவிருந்த மேடையிலிருந்து சுமார் 800 மீட்டர் இடைவெளியில் வைக்கப்பட்டிருந்த குண்டுகளை மட்டும் செயலிழக்கச் செய்துவிட்டனர்.

நவம்பர் படுகொலைகளை அடுத்து மிகத் தீவிரமாக உளவுத்துறையினராலும் காவல்துறையினராலும் முஸ்லிம் பகுதிகள் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பிணம் கொத்தும் கழுகுகளாக காவல் துறையினர் முஸ்லிம்களையே சுற்றிச் சுற்றி வந்துக் கொண்டிருந்தனர். இப்படியான ஒரு சூழலில் தான் தெருக்களில் சந்துக்களில் வைத்து குண்டு தயாரித்துக் கொண்டிருந்த முஸ்லிம்களில் சிலரை உளவுத்துறையினர் வந்து பார்த்துப் போயுள்ளனர்.

தெருக்களில் வைத்து குண்டு தயாரிப்பவர்களைப் பார்த்து என்ன செய்கிறீர்கள் என்று விசாரித்துவிட்டு அதன் பதிலை எதிர்பார்க்காமலேயே" நீங்க கண்டிப்பா இதெல்லாம் செய்யணும். அப்போத்தான் உங்களைக் கொன்றவர்களுக்குப் புரியும். பயம்வரும்" என்று கூறி உசுப்பேற்றியிருக்கிறார் ஓர் உளவுத்துறை அதிகாரி.

நவம்பர் 97 படுகொலையை விசாரித்து வந்த கோகுலகிருஷ்ணன் கமிஷனிடமே பிப்ரவரி 98 குண்டு வெடிப்பு விசாரணையும் ஒப்படைக்கப்பட்டது கூட கலவரத்தில் ஈடுபட்ட காவல்துறையினரைக் காப்பற்றவே.

அப்போது ஆட்சியிலிருந்த திமுக தம் கூட்டணிக்கட்சி என்ற உரிமையில் ராமகோபாலன் போன்றோர் சிறை அதிகாரத்திலும் தலையிட்டு முஸ்லிம் கைதிகள் கொடுமைப்படுத்தப்படுவதற்குக் காரணமாக இருந்தனர். முஸ்லிம்களுக்கெதிரான எல்லா நடவடிக்கைகளிலும், அரசு அதிகாரியைப் போல் செயல்பட்டிருக்கின்றார் இராம கோபாலன்.

முதல்வர் கலைஞர் முஸ்லிம்களின் ஆதரவாளர் என்ற கருத்தைப்பரப்பி முஸ்லிம்களிடமுள்ள நியாத்தின் பக்கம் நின்றுவிடாதபடி கலைஞருக்கு நெருக்கடி தந்தனர் இந்துத்துவவாதிகள்.

கலைஞர் ஒரு கட்டத்தில் முஸ்லிம்கள் மீது வெறுப்பை உமிழ்ந்தார். பிறகு நாசர் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைத்தார்.

நவம்பர் 97 படுகொலைகளுக்குக் காரணமான காவல்துறையினரும் தண்டிக்கப்படவில்லை. கலவரத்தில் ஈடுபட்ட அர்ஜுன் சம்பத் போன்றோரும் தண்டிக்கப்படவில்லை.

அரசு தந்த இழப்பீட்டில் கூடபாரபட்சம் 1997 நவம்பரில் கொல்லப்பட்ட முஸ்லிம்

களுக்கு ஒரு லட்சம் 1998 பிப்ரவரியில் கொல்லப்பட்டவர்களுக்கு இரண்டு லட்சம்.

இப்படி தானறிந்த உண்மைகளை காய்தல் உவத்தலின்றி வரலாற்றுப் பதிவாக்கித் தந்து விட்டார் நாசர்.

இதன்றி நம் வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்களுடன் இணைந்து PLEA என்ற அமைப்பின் வழியாக ஆற்றிய பணிகளையும் கூறியுள்ளார்.

PLEA அமைப்பின் செயற்பாடுகளைத் தடுத்திட தலைவர் நாசர் அவர்களையும் செயலாளர் மு. குலாம் முஹம்மத் அவர்களையும் ஒன்றுமில்லாமலாக்க, உளவுத் துறை - ஜூ.வி. ஆகியோர் செய்த சதிகளைத் தனி அத்தியாயத்தில் அதில் குறிப்பிடுகின்றார். இந்நூல் பல உண்மைகளை நமக்குப் புரிய வைக்கிறது.

குண்டு வைப்பதில் கைகளாக செயல் பட்டவர்கள் குற்றவாளிகளே எனினும் உளவுத்துறையால் உசுப்பி விடப்பட்டு காவல்துறையால் கண்டு கொள்ளாமல் விடப்படுவதையும் அதற்குப்பின்னால் இந்துத்துவவாதிகள் நின்றதையும் புரிந்துகொள்ள இயலாத அப்பாவிகள்.

அத்வானி பேசவிருந்த மேடையருகே இருந்த குண்டையும் காவலர் குடியிருப்பு காவல் நிலையச் சுற்றுச் சுவர் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகளையும் மட்டும் செயலிழக்கச் செய்திருப்பதன் மூலம் இந்துத்துவாதிகளும் காவல்துறையினரும் மட்டும் பாதுகாக்கப் படவேண்டும் பொதுமக்கள் எக்கேடு கெட்டால் என்ன மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் எப்படிப் போனாலென்ன என்று காவல்துறை கருதிவிட்டதாகத் தெரிகிறது.

முஸ்லிம்களுக்கு எதிரான அழித்தொழிப்பு வேலைகளைச் செய்து வரும் இந்துத்தீவிரவாதிகள் கலவரத்துக்கான சூழல் உருவாகும் வரை காத்திருப்பதில்லை. சூழலை அவர்களே உருவாக்குகிறார்கள்.

அவர்கள் நினைத்தால் காவல்துறைக்கும் அரசுக்கும் இடையே கூட இடைவெளியை எற்படுத்தமுடிகிறது.

பிப்ரவரி 17ல் அல் அமீன் காலனியில் வெடித்தகுண்டு இந்துத்துவ வாதிகளால் வைக்கப்பட்டிருக்கலாம்.

இப்படிப்பட்ட பல உண்மைகளைப் புரிய வைத்திடும் இந்நூல் வெளிவந்திருக்கும் காலம் கவனத்துக்குரியது.

கோவை குண்டு வெடிப்பு வழக்கில் 19 ஆண்டுகளாக சிறைவாசம் அனுபவித்து வரும் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை ஒரு வெகு ஜனக் கருத்துத் திரளாக உருவாகி வரும் சூழலில் இந்நூல் அதற்கு வலிமை சேர்க்கிறது.

இந்த உண்மைகளைச் சொல்லிட எல்லாத் தகுதிகளும் உடையவர் சகோதரர் நாசர். இந்திய தேசிய லீக் தலைவர் சண்டமாருதப் பேச்சாளர், மானமுள்ள தலைவர் அப்துல் லத்தீப் அவர்களால் அரசியலுக்கு அழைத்துவரப்பட்ட நாசர் இப்போது அரசியலுக்கு ஓய்வு தந்துவிட்டு முழு விவசாயி ஆகிவிட்டார். ஒரு பெரும் இழப்பு சமுதாயத்திற்கு.

காவிரி நீரை எதிர்பார்த்து விவசாயம் செய்யும் பல்லாயிரம் விவசாயிகளில் இவரும் ஒருவர்.

காவல்துறையும் இந்துத்துவ அமைப்புகளும் இப்படி ஒரு நூலை எழுதியதற்காக நாசர் அவர்களுக்கு நெருக்கடி தரலாம். அல்லது நூல் பிரபலமாகிவிடக் கூடாது என்பதற்காக கள்ள மவுனம் காக்கலாம்.

எனவே இந்நூல் பரவலாக வேண்டும். இயக்கம் சார்ந்த, சாராத அனைவரும் வாசிக்க வேண்டிய நூல்.

1993 மும்பை குண்டு வெடிப்பின் பின்னணி குறித்தும் இது போல் ஒரு நூல் வெளிவருமானால் அதிலும் உளவுத் துறையின் பங்கு வெட்ட வெளிச்சமாகும்.

நாசர் போன்றோர் கிடைப்பது அரிது. சமுதாயம் அவர்களைப் பயன்படுத்த வேண்டும். துர்திருஷ்டவசமாக சிலரின் தாரை தப்பட்டை நாசர் போன்றோரின் புல்லாங்குழல் அமுக்கப்பட்டு விடுகிறது. முன்னே இந்த நூலுக்கு தோழர் பாரதி கிருஷ்ண குமார் அவர்களும், தோழர் அ.மார்கஸ் அவர்களும் மிகவும் ஆழமான அணிந்துரைகளை வழங்கி இருக்கின்றார்கள்- அவற்றிலும் பல புதிய செய்திகளும் பார்வைகளும் அடங்கியுள்ளன.-●



# காந்தியை விடு கோட்சேயை வழிபடு

இந்துத்துவம் ஆட்சி பீடம் ஏறிய பின் தனது சித்து வேலைகளை தொடர்ந்து செய்தவண்ணம் வருகிறது. ஆட்சிக்கு வந்த ஆரம்பத்தில் "தாய் மதம் திரும்பு" என்று பெரும் நாடகத்தையே நடத்தினார்கள்.

தனது அல்லக்கை அமைப்புகளை ஏவி. ஆனால் அவர்களின் நாடகத்தை மக்கள் நம்பிட தயாராக இல்லை. பிறகு பல மாநிலங்களில் மாட்டு இறைச்சியை தடை செய்தார்கள். முஸ்லிம்களை சொல்லொன்னா துயரங்களுக்கு ஆளாக்கினார்கள். அஹ்லாக் கொல்லப்பட்டார். சில மாதங்களுக்கு முன் "பாரத் மாதா கி ஜெய்" என்று சொல்லாதவர்கள் பாரத மாதாவை ஏற்காதவர்கள் தேச துரோகிகள் அவர்கள் இந்த தேசத்தை விட்டே துரத்தப்பட வேண்டும் என்றார்கள். பாரதத்தின் தந்தையை கொலை செய்த பரிவார கும்பல். இப்படி இவர்கள் செய்து வருகின்ற அநியாயங்களை அடாவடித்தனங் களை நாம் நமது வைகறை வெளிச்சம் மாத இதழின் வழி தொடர்ந்து எழுதி வருகிறோம்.

### கோட்சேவுக்கு சிலை வைத்து கொண்டாட்டம்

சென்ற மாதம் அக்டோபர்–2 "காந்தி ஜெயந்தி" அன்று காந்தியை கொலை செய்த கோட்சேவிற்கு சிலை வைத்து கொண்டாடியது பரிவாரத்தின் ஒரு பிரிவான இந்து மகா சபை. அதன் தேசிய துணைத் தலைவர் அளித்த பேட்டியில் கூறியதாவது...

"நாங்கள் காந்தி பிறந்த இந்த நாளை" திக்கர் திவாஸ் (சாபத்தின் நாள்) என்று கொண்டாடு கிறோம். இனி இந்த நாட்டு மக்கள் காந்தியின் வழி பின்பற்றுவதை நிறுத்திவிட்டு கோட்சேவை வழிபடுவதற்கு இதுவே சரியான தருணம் என்றார்.

கோட்சேவின் இந்த சிலையை வைப்பதற்கு 2014 டிசம்பரில் இவர்கள் முயற்சி செய்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆனால் காவல் துறை மிரட்டிய உள்ள இந்து மகாசபையின் அலுவலகத் திற்கு சீல் வைத்து அங்கு CRPC 144 ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் இப்போது எந்த ஒரு எதிர்ப்பு மின்றி தனது அலுவலகத்தில் கோட்சேவின் சிலையை துறந்து வைத்து இனிப்பு வழங்கி கொண்டாடி யுள்ளார்கள். இந்த செய்தியை பெரும்பாலான பத்திரிகைகள் மறைத்துள்ளது.

### சவார்கர் மற்றும் கோட்சேவிற்கும் இடையில் பாகுபாடு பார்த்திடக் கூடாது

மேலும் இந்து மகா சபையின் தேசிய துணைத் தலைவர் தி இந்து ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில்...

மோடி அரசு நாடாளுமன்றத்தில் சவார்க் கரின் படத்திற்கு மாலையிட்டு வருடந்தோறும் எப்படி போற்றுகிறதோ அதேபோன்று கோட் சேவையும் போற்றி தான் ஆக வேண்டும். ஏனெனில் சவார்க்கரைப் போன்று (காந்தி கொலையில்) கோட்சேவின் பங்கும் இன்றியமை யாதது. சவார்க்கரும் கோட்சேவும் ஒரே சித்தாந் தத்தை கொண்டவர்கள். இருவருக்கும் இடை யில்நாம்பாகுபாடு பார்த்திடமுடியாது. அரசியல் காரணங்களுக்காகவே பி.ஜே.பி. யும், ஆர்.எஸ். எஸ்.ம் இதை தெரிந்தே ஏற்க அஞ்சுகிறது என்றார்.

இந்திய சுதந்திர வரலாற்றில் காந்தியை கொன்ற கோட்சேவுக்கு சிலை வைப்பது இதுவே முதல்முறை. ●

Source : October 3, 2016 India Times

# நாகூர் காவல் துறையின் கட்டப்பஞ்சாயத்து

## வன்மையாக கண்டித்த நீதி மன்றம்

கடந்த 11–10–2016 அன்று கொடிக்கால் பாளையத்தை சேர்ந் ஜெகபர் அலி என்பவரை நாகூர் காவல் நிலையத்தில் இருந்து தொலை பேசியில் தொடர்பு கொண்டனர். அப்போது பெருஞ் சாத்தான்குடியை சேர்ந்த ரஞ்சிதா என்னும் பெண் காணாமல் போய்விட்டதாக புகார் வந்துள்ளது.

எனவே அது சம்பந்தமாக உங்களை விசாரித்திட வேண்டும் என்று அழைத்தனர். எனவே ஜெகபர் அலியும் நாகூர் காவல் நிலையத்திற்கு சரியாக காலை 11.00 மணிக்கு சென்றிருக்கின்றார். அப்போது அங்கிருந்த காவல்துறை ஆய்வாளர் நடராஜன் எடுத்த எடுப்பிலேயே ஜெகபர் அலியிடம் அந்த பெண்ணை நீதானே கடத்தினாய் இப்போது எங்கு வைத்திருக்கின்றாய் மரியாதையாக கூறிவிடு என தனக்கே உரிய அதிகார பாணியில் மிரட்டினார். அதற்கு ஜெகபர் அலி எனக்கு ஒன்றும் புரியவில்லை நான் ஏன் கடத்திட வேண்டும் என்றார். அதற்கு ஆய்வாளர் நடராஜன் ரஞ்சிதா தன் வீட்டில் விட்டுச் சென்ற இஸ்லாமிய அடிப்படை கல்வி எனும் புத்தகத்தில் ஜெகபர் அலியின் தொலைபேசி எண் இருப்பதை காண்பித்து எனவே நீதான் ரஞ்சிதாவை வைத்திருக்கின்றாய் மதமாற்றம் செய்து, இப்போது எங்கு வைத்திருக்கின்றாய் எங்கிருந்தாலும் நாளை வந்து ஒப்படைத்து விடு என்று மறுவார்த்தை பேச விடாமல் ஜெகபர் அலியை இப்போது போ நாளை வந்து ரஞ்சிதாவை ஒப்படைத்து விடு என்றார்.

ஆகவே ஜெகபர் அலியும் அன்று வீடு திரும்பி விட்டார். மறுநாள் 12–10–2016 அன்று காலையிலேயே ஜெகபர்அலி வீட்டுக்கு வந்துவிட்டது நாகூர் காவல் நிலையத்திலிருந்து அழைப்பு. எனவே அவர் திருவாரூர் நகர மன்ற உறுப்பினர் கலீபுல்லாஹ் அவர்களை அழைத்துக்கொண்டு நாகூர் காவல் நிலையத்திற்கு விரைந்தார். அப்போது அங்கு ஆய்வாளர் நடராஜன் அமர்ந்திருக்கின்றார். ஜெகபர் அலி காவல் நிலையத்தினுள் சென்றவுடன் ரஞ்சிதா எங்கே என கேட்டார் ஆய்வாளர் அதற்கு அவர் எனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ரஞ்சிதா என்னோடு திருவாரூரில் உள்ள பல்பொருள் அங்காடியில் பணிபுரிந்தவர். நான் அங்கு பணிபுரியும் நேரத்தில்தான் அந்த புத்தகத்தை அவரிடம் கொடுத்தேன், அதில் என் தொலைபேசி எண் எப்படி வந்தது என்று கூட எனக்குத் தெரியாது என கூறினார்.

இதை சகோதரர் கலீபுல்லாஹ் அவர்களும் எடுத்துக்கூறியிருக்கின்றார். ஆனால் அதை மறுத்த ஆய்வாளர் நடராஜன் இந்த கதையெல்லாம் எனக்கு வேண்டாம் இவன போய் அந்த ஓரமா உக்காரவை அப்பதான் வழிக்கு வருவான் என்று மற்றொரு அதிகாரியை பார்த்து கூறினார். உடனேயே கலீபுல்லாஹ் நம்மை தொடர்புகொண்டு விஷயத்தை கூறினார். இதை வழக்கறிஞர் ஹசன் ஃபாருக்கிடம் கூறிவிட்டதாகவும் அப்போது அவர் காவல் நிலையத்திற்கு வந்து விட்டதாகவும் கூறினார்.

நாம் உடனேயே அங்கு விரைந்து நாகூர் முஹ்யித்தீன் பள்ளி ஜமாஅத்தை தொடர்பு கொண்டு இதை எடுத்துக் கூறினோம். அப்போது அவர்கள் நீங்கள் சொல்லும் ரஞ்சிதா என்ற பெண் சென்ற வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கு பிறகு ஜமாஅத்தை அணுகி தான் இஸ்லாத்தை ஏற்க இருப்பதாகவும் அதனால் தன் பெற்றோர்கள் தன்னை அடித்து துன்புறுத்தி திடீர் என்று திருமணம் ஏற்பாடு செய்துள்ளதாகவும் எனவே இஸ்லாத்தை ஏற்றிடவும் அதன் அடிப்படை கல்வியை தனக்கு புகட்டிடவும் வகை செய்து தருமாறு ஜமாஅத்திடம் கேட்டுக் கொண்டதின் பெயரில் இமாம் திருக்கலிமாவை கற்று கொடுத்து அவரும் அதை மொழிந்து இஸ்லாத்தை ஏற்று தனது பெயரை ராஷிதா என்று பெயர் மாற்றம் செய்து கொண்டதை நம்மிடம் தெரிவித்தனர்.

பிறகு ஜமாஅத்தார்கள், நிர்வாகிகள் ராஷிதாவை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். அப்போது ராஷிதாவின் தந்தையும் அவருடைய நாகையைச் சேர்ந்த பி.ஜே.பி. பிரமுகரும் காவல் நிலையத்தில் வந்தடைந்தனர். அந்த பி.ஜே.பி. பிரமுகர் அங்குள்ள காவல் துறை அங்குள்ள காவல் துறை அதிகாரிகளுடன் சிரித்து ஏதோ சாதாரணமாக பேசிக்கொண்டிருந்தார். அதன்பின் ராஷிதாவை விசாரிக்க தொடங்கினார் ஆய்வாளர் நடராஜன்.

ராஷிதாவிடம் உனக்கும் ஜெகபர் அலிக்கும்

என்ன தொடர்பு, உன்னை கட்டாயப்படுத்தி மத மாற்றம் செய்தது யார்? என்று கேட்டார். அவரின் கேள்வி நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தியது, ஏனெனில் என்ன நடந்து இவ்வளவு நாட்களாக நீ எங்கு சென்றாய்? என்றுதான் அவர் கேட்டிருக்க வேண்டும் ஏனென்றால் புகார் "பெண்ணைக் காணவில்லை" என்றுதான் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

**மனம் திறந்தார் ராஷிதா**

முதல் தகவல் அறிக்கையும் அப்படிதான் பதிவு செய்திருக்கின்றார்கள். ஆக ஆய்வாளர் நடராஜன் கேட்ட கேள்வி அவரின் ஒருதலைபட்ச போக்கையே வெளிக்காட்டியது. இந்த கேள்விக்கு எல்லாம் ராஷிதா சற்றும் அசராமல் எனக்கும் ஜெகபர் அலிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அவரிடம் பல மாதங்களுக்கு முன்னால் புத்தகம் வாங்கியிருந்தேன் அவ்வளவுதான். என்னை யாரும் கட்டாயப்படுத்தி மத மாற்றம் செய்யவில்லை. நானாகவே மனப்பூர்வமாகதான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டேன். இதில் எந்த நிர்ப்பந்தமும் இல்லை என்றும் தன் குடும்பத்தாரால் தான் தன் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்பதை கூறியதோடு மட்டுமல்லாமல் எழுத்துப்பூர்வமாக அதை புகாராகவும் தந்தார் ராஷிதா.

ஆனால் அந்த புகாரை வாங்க மறுத்துவிட்டனர். பிறகு ஜெகபர் அலியிடம் மிரட்டுவதை ஆரம்பித்தார் ஆய்வாளர் நடராஜன். இதைக் கண்டு ஆத்திரமடைந்த ஜமாஅத் நிர்வாகிகள் நாங்கள் தான் ராஷிதாவுக்கு "AFFIDAVIT" போட்டோம். நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாக இருந்தால் எதுவாக இருந்தாலும் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்கிறோம் இதில் ஏன் ஜெகபர் அலி என்ற இவரை சம்மந்தப்படுத்துகிறீர்கள் என்றார்கள்.

பிறகு ஒரு வழியாக ஜெகபர் அலியை விடுவித்தனர். நமது வழக்கறிஞர் ராஷிதா ஒரு மேஜர் பெண் அவர் தானாக இந்த முடிவை எடுத்துள்ளார். பிறகு என்ன அவரிடம் எழுதி வாங்கி அனுப்பிவிட வேண்டியது தானே என்றார். அதற்கு காவல்துறை அதிகாரிகள் முடியாது நாங்கள் இவரை நீதிமன்றத்திடம் தான் ஒப்படைப்போம் என்று பிடிவாதம் பிடித்தனர். அதன்பின் ராஷிதாவிடம் சென்ற ஆய்வாளர் நடராஜன் ஆத்திரத்தோடு "ஐ.எஸ். ஐ.எஸ்." சிற்கு ஆள் எடுக்கிறார்களே அங்குதான் செல்லப்போகிறாயோ என்றார். இந்த வார்த்தைகள் ஆய்வாளர் நடராஜன் முஸ்லிம்களின் மீதும் இஸ்லாத்தின் மீதும் கொண்டுள்ள வெறுப்பு மற்றும் அவரின் வகுப்புவாத சிந்தனையுடமே வெளிக்காட்டியது.

இறுதியாக நீங்களெல்லாம் இப்போது செல்லலாம் நாளை இந்த பெண் நீதி மன்றத்திடம் ஒப்படைக்கப்படுவார் என்றார்.

ஆகவே சரியாக 9.30 (இரவு) மணிக்கு காவல் நிலையத்தை விட்டு வெளியேறினோம். மறுநாள் 13.10.2016 மாலை 4.00 மணிக்கு ராஷிதாவை மயிலாடுதுறை நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். அதற்கு முன்பாகவே நாம் ஜமாஅத்தார்கள், நிர்வாகிகள் மற்றும் வழக்கறிஞரும் அங்கு காத்திருந்தோம். அப்போது நீதிபதி வழக்கின் விசாரணை அதிகாரி துணை ஆய்வாளர் கண்ணதாசனை அழைத்து வழக்கை பற்றி விசாரித்தார். பிறகு நீதிபதி இந்த பெண் மேஜர் தானா? என்று வினவினார். "ஆம்" என்ற துணை ஆய்வாளர் பிறகு இதில் நீதிமன்றம் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் என்றார். அதற்கு துணை ஆய்வாளர் கண்ணதாசன் பவ்வியமாக இல்லை மதமாற்றம் நடந்திருக்கின்றது என்றார்.

**நீதிபதிகள் கண்டனம்**

அதற்கு நீதிபதி புகார் மதமாற்றம் என்றா கொடுக்கப்பட்டுள்ளது. அல்லது இது கட்டாய மதமாற்றமா? என்று கேட்டார். அதற்கு அவர் இல்லை ராஷிதா எந்த கட்டாயமுமின்றி மனப்பூர்வமாக தான் மதம் மாறியுள்ளார். ஆனால் இன்ஸ்பெக்டர்தான் என்று குரலை இழுத்தார். அதற்கு நீதிபதிகள் இன்ஸ்பெக்டர் விசாரணை அதிகாரியா? அல்லது நீங்கள் விசாரணை அதிகாரியா? பெண்ணைக் காணவில்லை என்பது தானே புகார்? Mistake of Fact என்று முதல் தகவல் அறிக்கையை மூடிட வேண்டியதுதானே. அதில் நீங்கள் சாமர்த்தியவாதிகள் தானே குற்றவாளிகளை உங்களால் இங்கு கொண்டுவர முடியவில்லை இதுபோன்ற வழக்குகளை மட்டும் எப்படி கொண்டு வந்தீர்கள் என்று கண்டித்தார்.

அதன்பின் நீங்களே அந்த பெண்ணிடம் எழுதி வாங்கி அவரை அனுப்பிவிடுங்கள் என்றார். ஒரு வழியாக விசாரணை அதிகாரி ராஷிதாவுடன் காவல் நிலையம் திரும்பினார். அதன்பின் ராஷிதாவின் தந்தையிடமும் ராஷிதா மற்றும் ஜமாஅத் நிர்வாகிகளிடமும் எழுதி வாங்கிக் கொண்டு ராஷிதாவை விடுவித்தனர். உடனேயே ராஷிதா நம்மிடம் வந்து நீங்கள் இல்லாதபோது அந்த பி.ஜே.பி. பிரமுகர் காவல் துறை அதிகாரிகளுக்கு முன்பே என்னை தகாத வார்த்தையில் கேவலமாக திட்டித் தீர்த்தார் என்று அதிகாரிகள் அதை கண்டும் காணாததுபோல் இருந்ததை வருத்தத்தோடு தெரிவித்தார். ●

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor **M. GULAM MOHAMED,** Printed by M. Gulam Mohamed at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.